

# ஞானச்சுடர்

ஆடி

மலர் 2007



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ

# குறள்வழி



அழுக்கா றுடையான்கண் ஆக்கம்
போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு

**பொருள்:** பொறாமையுடையவனிடத்தில் செல்வம் நிற்காததுபோல ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் உயர்ச்சி இல்லையாகும்.

[135]



# நற்சிந்தனை

## அபயப்பத்து

## தரவு கொச்சகக் கலிப்பா

இருநிலனாய்த் தீயா யிரவி மதியாகி
வருபுனலாய் மாருதமாய் மறிகடலாய் மன்னுயிராய்க்
குருவாகிச் சீடனாய்க் கறுவொண் ணாச்சுடராம்
மருவிநிற் கும்மிலங்கை மணியே யுனக்கபயம் 3

ஈரவார் செஞ்சடையாம் எழிலார் மழுப்படையாய்
பாரமார் கொம்மைமுலைப் பாவை யிடமுடையாய்
கோரமார் கொல்புலியைக் கொன்றுடுத்த கொற்றவனே
ஆரமுதே நல்லிலங்கை யாண்டவனே யுனக்கபயம் 4

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 115

## 2007 ஆடி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| காவடியாட்டமும் கந்தன்...... | தி. மயூரகிரி | 1 - 3 |
| வான்மீகி | இ. சிவலிங்கம் | 4 - 5 |
| சிவவ(ம)யப்பேறு | துணைவியூர் கேசவன் | 6 - 8 |
| முருகன் திருவடிச்சிறப்பு | பா. சிவனேஸ்வரி | 9 -12 |
| எந்த இடரையும் நீக்கி..... | காரை எம்.பி. அருளானந்தம் | 13 - 15 |
| வாரியார் சுவாமிகள்..... | வல்வையூர் அப்பாண்ணா | 16 - 17 |
| மரணபயம் நீக்கவல்லது.... | சி.சி. வரதராசா | 18 - 19 |
| ஈழத்துச் சித்தர்களுள்...... | இ. சாந்தகுமார் | 20 - 21 |
| அன்னதானம் அல்லது..... | சி. நவரத்தினம் | 22 - 23 |
| தவமுனிவனின் தமிழ் மந்திரம் | சிவமகாலிங்கம் | 24 - 28 |
| இலங்கைவாழ் இந்துக்கள்......... | பா. ஞானச்சந்திரக்குருக்கள் | 29 33 |
| அருட்கவி சீ. விநாசித்தம்பி..... | தி. வரதவாணி | 34 35 |
| இரணியன்- பிரகலாதன் கதை..... | நா. நல்லதம்பி | 36 - 39 |
| ஒரு மனிதனை அழிவு வழிக்கு..... | S.S. ரஜீந்திரன் | 40 - 41 |
| சித்தர்கள் | லோ. சிவயோகவதனி | 42 - 43 |
| சமய வாழ்வில் பெண் | செல்வி ச. கார்த்திகா | 44 - 45 |
| தன்னைத் தானறிதல் | கே. எஸ். சிவஞானராஜா | 46 - 47 |
| முன்னோர் சொன்ன கதைகள் | சி. யோகேஸ்வரி | 48 - 49 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 50 - 52 |


*அன்பளிப்பு:-*

மலர் ஒன்று 30/= ரூபா
வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை
தொலைபேசி இலக்கம்:- 021- 2263406
பதிவு இல. Q.D./44/NEWS/2007

அச்சுப்பதிப்பு:- **சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

# ஞானச்சுடர்
# ஆனிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஆனிமாத ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் மேற்கொண்டார்கள். அவர் தமது ஆரம்ப உரையில் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சகல பணிகளையும் சபையில் உள்ள அடியார்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் கூறியதோடு, ஆச்சிரமம் ஆற்றும் பணிகளில் உச்சக்கட்டமாக அமைவது கடந்த பத்து வருடகாலமாக எந்தவித விளம்பரமும் அற்ற வகையிலும் , மலரின் பெறுமதிக்கு அப்பாற்பட்ட நிலையிலும், காலம் தவறாமல் வெளிவந்துகொண்டு இருப்பது ஒரு மகத்தான சாதனை என்பதையும் அதற்குக் காரணமாக சந்நிதி வேலவன் சந்நிதியான் ஆச்சிரமத்தை வழிநடாத்துவதுதான் என்றும் கூறியதோடு இறுதியாக தற்கால சூழலில் ஞானச்சுடர் மலர் காலம் தாழ்த்தி வந்தாலும் கூடியவிரைவில் அந்ததந்த மாதங்களில் அவற்றுக்குரிய மலர் வெளிவரவேண்டும் என்ற தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தியதோடு இவ்வகையான நிகழ்வுகள் ஆச்சிரமத்தில் இடம்பெறுவதனால்தான் நாங்களும் சந்நிதியானைத் தரிசிக்கக் கூடியதாக உள்ளது என்றுகூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

சுடரின் 114ஆவது மலருக்குரிய மதிப்பீட்டுரையினை யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் திருமதி கௌரி சுரேஷன் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தம் உரையில் ஆச்சிரமத்தில் இடம்பெறும் பல நிகழ்வுகளில் பங்குபற்றினாலும் கூட ஞானச்சுடர் மலருக்கு மதிப்பீட்டுரை ஆற்றுவது இதுவே முதன்முறை என்று கூறியதோடு இச்சந்தர்ப்பத்தை வழங்கிய சந்நிதிவேற் பெருமானின் கருணையை விதந்து போற்றினார்.

ஒரு மலருக்கு மதிப்புரை ஆற்றுவது மிகவும் கடினமான காரியம். அப்படி இருக்கும்போது சந்நிதி வேலவனின் அருளினால் 114ஆவது மலராக வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடர் மலருக்கு மதிப்புரை ஆற்றுவது மிகவும் கடினம். ஆனாலும் மலரின் தரத்தை நாம் பாராட்டப்படவேண்டியவர்களாகவே உள்ளோம் என்று கூறியதோடு மலரில் இடம்பெற்ற கட்டுரையின் கருத்துக்களை மண்டபத்தில் உள்ள அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

உ

# சுடர் தரும் தகவல்

இன்றைக்கு உலகத்தில் இருக்கக்கூடிய பல வகையான துன்பங்களுக்கு அடிப்படையான காரணம் ஒரு மனிதன்மீது இன்னொரு மனிதனுக்கு இருக்க வேண்டிய பரிவு இல்லாமல் போய்விட்டதுதான். பணத்தினால் கிடைக்காத மகிழ்ச்சியும், உதவியும் ஒருவர் மீது நாம் காட்டும் அன்பின்மூலம் கிடைத்துவிடுகிறது. அந்த வகையில் இன்று அன்பிற்காகவும், பரிவுக்காகவும் ஏங்கும் உள்ளங்களோடு வாழ்கின்ற முதியவர்களையே நாம் எம் மண்ணில் காணக்கூடியதாக உள்ளது. அதுவும் நாட்டில் இடம்பெற்றுவரும் தற்காலச் சூழல் காரணமாக இவ்வகையான முதியோர்களை அதிகம் காணக்கூடியதாக உள்ளது.

இதனடிப்படையில் யாழ் குடாநாட்டில் ஆச்சிரமங்கள் ஊடாகவும், முதியோர் இல்லங்கள் மூலமாகவும் முதியோர்களைப் பராமரித்து பரிவுகாட்டி வருகின்றார்கள். அவ்வகையில் சுழிபுரம் வழக்கம்பரையில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லம் எனும் அமைப்பானது மிகவும் சிறப்பான முறையில் முதியோரைப் பராமரிக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. இல்லம் அமைந்த இடமோ அமைதியான சூழலும், மனதுக்கு சாந்தி அளிக்கக்கூடியவகையில் ஒரு சிறு வைரவ ஆலயத்துடனும் அமைந்திருப்பதனால் அங்குள்ள முதியோர்கள் மனநிறைவுடன் இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

சிவபூமி முதியோர் இல்லம் ஆரம்பித்த காலங்களில் ஏழு முதியோருடன் இருந்த இல்லம். தற்சமயம் இருபத்திரண்டு முதியோரினைத் தன் வசம் ஈர்த்து அவர்களைப் பரிவுகாட்டி பேணிப்பாதுகாத்து வருகின்றது. அவர்களுக்குரிய சகல வசதிகளையும் செய்துள்ளதோடு எமது சைவசமய கலாச்சாரங்களுக்கு அமைவாக தேவார முதலிகளின் குருபூசைகளையும் சிறப்பாக நடாத்துவதோடு பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளையும், சொற்பொழிவுகளையும் அங்குள்ள முதியோர் களின் மனம் மகிழும்வண்ணம் மேற்கொண்டு வருவது எல்லோராலும் போற்றப்படுவதாக அமைந்துள்ளது. இவ்வகையான பிரதிபலன் கருதாத செயற்திறன் காரணமாக பல அன்பர்கள் தாமாகவே முன்வந்து இல்லத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆதரவு அளித்து வருகின்றார்கள்.

இவ் இல்லம் அமைவதற்கு காரணமாக இருந்த திரு ஆறு திருமுருகனின் பணி பாராட்டப்படவேண்டியது. இப்பணியின் நிமித்தம் ஆதரவற்றுள்ள பல முதியோர்கள் மனநிறைவுடன் இங்கே வாழ்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இப்படியான முதியோர் இல்லங்களை இதய சுத்தியுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுத்துவதன்மூலம் பல முதியோர்களின் மனதினைக் குளிரச்செய்து இப்பணியை நாமும் பின்பற்றுவோமாக.



உ

# ஆச்சிரமத் தொண்டுகண்டு விளையாடுவான்

1 வானைப் போலப் புகழ்ப டைத்த
வனப்பின் வடிவேல் போலவே
ஞானச்சுடர் சஞ்சி கையை
நாளும் வளர்த்து வருபவன

2 மோன முடைய அடிய ரதனை
முருகனதென வாங்கியே
முதலிருந்து கடைசிவரை
முழுதும் படிக்கச் செய்பவன்

3 மானச்சூ ரனைய டர்த்து நேராய்
வந்த மயிலி லிவர்ந்தவன்
வன்னச் சேவற் கொடியைக் கோயில்
வாயில் காட்டி விட்டவன்

4 கானத் தோடு அடியார் பாட
களித்து நடனம் புரிபவன்
கந்தனாக முகமாறாக
கரமீ ராறாய் நிற்பவன்

5 உள்ளத்தினை கோயிலாக்கும்
உத்தமர்கள் வாழ்விலே
உந்து சத்தி யாயிருந்து
உணர அவர்முன் நிற்பவன்

6 வள்ள லவன் கள்ள மில்லார்
மனத்தி லமர்ந் தவர்களை
வருபொருளில் திருவருளில்
வையகத்தில் வைப்பவன்

7 எள்ள லில்லா சந்நிதியில்
இருக்குஞ் சைவப் பேரவை
எடுத்த காரி யமனைத்தும்
ஈடேறச் செய்பவன்

8 கொள்ளை யாகப் பொருளை வாரி
குவலயத்தோர் குவித்திட
கோணாத தொண்டில் அவன்
குதித்து விளையா டுவனே.

*முதுபெரும்புலவர்*
*கலாபூஷணம் ஆசிரியர்*
*வை.க. சிற்றம்பலவனார்.*

உ

# காவடியாட்டமும் கந்தன் கருணையும்

செல்வன் தி. மயூரகிரி அவர்கள்.

எங்கெங்கெல்லாம் மலைகள் உண்டோ அங்கங்கெல்லாம் முருகன் கோயில் கொண்டிருக்கக் காணலாம். அதனால்தான் "குன்றுதோறாடும் குமரப்பெருமான்" என அறிஞர்கள் அவனைப் போற்றுகின்றனர். இவ்வாறு செவ்வேள் மலையுச்சிகளிற் கோயில் கொண்டெழுந்தருளி வேண்டுவார் வேண்டியன அருள்பவனாக விளங்கியமையே காவடியாட்டத்தின் ஆரம்ப காரணமாய் அமைந்தது எனலாம்.

இன்றும் பழநி, திருத்தணிகை, கதிர்காமம் முதலிய முருகனாலயங்கள் உள்ள மலைகளைக் கூர்ந்து கவனித்தால் மலையின்மீது கோயில் மாத்திரம் காணப்படும். மலையடிவாரத்தில் மக்கள் குடியிருப்புக்கள் காணப்படும். அவ்வடிவாரத்தில் ஆறுகள் சலசலத்து ஓடும். இவ்வாறான நிலையில், நவீன வசதிகள் இல்லாத பண்டைக்காலத்தில் மலைமேலுள்ள திருக்கோயிலில் திருவுருவ வடிவில் எழுந்தருளியுள்ள முருகனுக்கு அபிஷேகத்திற்குத் தேவையான பால், பன்னீர், சந்தணம், இளநீர், தீர்த்தம், சுத்த நறுநெய் என்பனவும் பூக்கள், அன்னம், கர்ப்பூரம் முதலியனவும் மலையடிவாரத்தில் இருந்து மலை உச்சிக்குக் காவிச்செல்ல வேண்டியிருந்தது.

எனவே துலாத்தண்டத்தின் இருபுறமும் உறிகள் கட்டி அவற்றில் இப்பூசைப்பொருட்களை வைத்துப் பத்திரமாகத் தோளிற் சுமந்தவாறு கூட்டம் கூட்டமாக மக்கள் மலை ஏறினர். மலையேறும் களை தம்மைச் சோர்வடையச் செய்வதைத் தடுப்பதற்கு ஆடிப்பாடி முருகநாம பஜனை செய்தவாறு பறை, சங்கு, சேமக்கலம் முதலிய ஒலிகளை ஏற்படுத்தியவாறு மலையேறிச்சென்று அங்கே தாம் கொணர்ந்த பூசைப் பொருட்களால் முருகனை ஆராதித்து வரும் வழக்கம் உண்டானது. இவ்வாறு கொண்டு செல்லப்படும் பொருட்களின் பெயர்கள் அவ்வவ் காவடிக்கு இடப்பெற்றன. இவையே அன்னக்காவடி, பாற்காவடி, பழக்காவடி, தீர்த்தக்காவடி, பூக்காவடி, கர்ப்பூரக்காவடி, சந்தணக்காவடி, நெய்க்காவடி எனப் பலவாறு அழைக்கப்படலாயின.

காலப்போக்கில் இறைவனுக்குத் தாம் காவிச்செல்லும் காவடிகளை முருகனுக்கு விருப்பமான செந்நிறப்பூக்கள், மயில் இறகுகள், பட்டு வஸ்திரங்கள் என்பவற்றால் நன்கு அலங்கரித்தனர். இவ்வாறாகவே இன்றைய காவடியாட்டமும் காவடியலங்காரமும் உண்டாயிற்று. நாகரிக விருத்தியால் பிற்காலத்தில் சங்கு, பறை முழக்கம் நிறுத்தப்பட்டு மங்கள வாத்தியங்களான தவில், நாதஸ்வர ஓசையோடு காவடிகள் ஆடப்படுகின்றன. இன்றும் காவடியூடாகக் கொண்டு செல்லப்பெற்ற பால் முருகன் திருவுருவுக்கு அபிடேகிக்கப் பொருளாதல் காணலாம். பூர்வீகத்தில் இவ்வாறு ஆரம்பித்து காவடியாட்டம் இன்று வேறுவகையில் நவீனத்துவம் பெற்றுள்ளது எனினும் அன்றும் காவடியேந்தினோர் கந்தன் கருணைக்கு ஆளாயினர். இன்றும் அவனருள் பெறுகின்றனர்.

எனினும் காவடியாட்டம் ஒரு வேடிக்கை, அல்லது சம்பிரதாயக்கேளிக்கை நிகழ்வாக இல்லாமல், பக்திபூர்வமாகப் பேணப்படவேண்டும். அவ்வாறு பேணப்பட்டால்

மட்டுமே இறைவனின் பரிபூரண கிருபையைப்பெற முடியும். எதிர்மாறாகச் செயற்படுவது வீண்பாவகாரியம். "குளிக்கப்போய்ச் சேறு பூசும் செயல்" ஆகும். பழநித் தலபுராணம் "காவடியெடுக்கும் முறையை முதன்முதலில் ஆரம்பித்தவன் இடும்பன் என்று கூறுகிறது. அகத்திய மாமுனிவர் ஆணைப்படி இமயமலைச் சாரலிற் காணப்பட்ட சிவகிரி, சக்திகிரி என்ற இருமலைகளையும் முருகனின் திருவருளால் இடும்பன் என்னும் அதி பராக்கிரம அசுரன் தமிழ்நாட்டுக்குத் தூக்கிவந்தான் என்றும் அவன் அட்டநாகங்களைக் கயிறாகவும் பிரம்ம தண்டத்தைத் துலாத்தண்டமாயும் ஆக்கி முருகனது மூலமந்திரத்தைச் செபித்துத் தண்டத்தின் இருபுறமும் கயிறுகளைத் துலாக்களாகத் தொங்கவிட்டு மலைச்சிகரங்களைக் கட்டித் தூக்கிக்கொண்டு அகத்தியர் முன் சென்றுகொண்டிருக்கப் பொதிகை மலைக்கு கொண்டு செல்லும் நோக்கோடு தூக்கிச்சென்றான். "திருவாவினன் குடி" எனும் பழநியில் பாரம் தாங்கமாட்டாது கீழே இறக்கி வைத்து மீண்டும் தூக்க முயன்றபோது மிக வருந்தி அயர்வுற்றான்.

இவ்வாறு சோர்வுற்ற இடும்பாசுரனைக் கண்டு ஒரு பச்சிளம் பாலகன் பரிகாசம் பண்ணிச் சிரித்தான். இது, களைத்துப் போயிருந்த இடும்பனுக்கு எரிச்சலும் ஆணவமும் வரச்செய்தது. பாலகனைப் பிடிக்க எட்டிப்பாய்ந்தான். பாய்ந்தவேகத்தில் அவன் காலடியில் வீழ்ந்திறந்தான். பாலகன் வேறு யாருமல்லன். பழநிப்பரமன் முருகன் தான். இடும்பன் மனைவி இதையறிந்து வருந்தி முருகனிடம் மாங்கல்யப் பிட்சை கேட்டாள். முருகனும் இடும்பனை உயிர்ப்பித்து "இம்மலைச் சிகரங்கள் இங்கே என்றும் விளங்கட்டும். சிவகிரியாகிய பழநிமலை உச்சியில் நான் தண்டபாணியாக விளங்கி யாவரும் வேண்டுவன வேண்டும்படியருளி ஆண்டிக்கோலத்துடன் விளங்குவேன் நீ மலையடிவாரத்திற் காவலில் ஈடுபடுக' எனப் பணித்தருளினார்.

தவிரவும் "நீ இன்று மலைச்சிகரங்களைக் காவடிபோலத் தூக்கி வந்தமையால் உன் அசுரகுணம் நீங்கிப் பவித்திரமான என் பக்தனாக மாறி என்னருள் பெற்றாய். அடியார்கள் யாவரும் அதுபோல் காவடி சுமந்து தம் குறைகள் நீங்கப் பெறுவர்" எனக்கூறியருளினார். இவ்வாறு அழகான ஒரு கதையை கூறுகிறது பழநித்திருத்தல புராணம்.

இவ்வாறு குறிஞ்சியாகிய மலையும் மலைசார்ந்த இடத்திலுமுள்ள கோயில்களில் ஆரம்பித்தது. இக் "காவடியெடுத்தல்" வழக்கம். காலகதியில் முருகனுக்கு மிகப்பிரியமானதும் தனித்துவமானதுமான பிரார்த்தனையாகக் காவடி ஆட்டம்" பரிணமித்தது. மருதநிலம் (வயலும் வயல் சார்ந்ததும் ஆகிய பகுதி) முதலியவற்றிலுள்ள முருகன் ஆலயங்களிலும் காவடியாட்டம் நிகழ்ந்தது. "ஆடாதனவெல்லாம் ஆடியபின் ஆண்டவன் சந்நிதியில் அமைதியடைகிறோம். உலக பந்தங்களில் உழன்று சுழன்றாடியபின் பகவான் குமரனின் கிருபாவெள்ளத்தில் அமிழ்ந்தியபின் அமைதிபெற்றுப் பரமானந்தம் பெறுகிறோம்" இவ்வாறான அரிய கருத்துக்களைக் காவடியாட்டம் உணர்த்துகிறது. இறுதியாக, இவ்வாறு முருகனுக்குரிய காவடியாட்டம் பிற விநாயகர், சிவன், விஷ்ணு முதலிய தெய்வங்களுக்கும் பேணும் வழக்கம் இலங்கையில் உள்ளதே? எனவும் வினவலாம்.

மலைகளில் முருகன் ஆலயங்களே கூடுதலாகக் காணப்படினும் திருவேங்கட

**தத்துவங்களுக்குச் சிகரமாக, வேத முடிவாக இருப்பது உபநிஷத்துக்கள்.**

மலையில் விஷ்ணு, திருக்காளத்தி மலையில் சிவபெருமான், திருச்சி உச்சிமலையில் பிள்ளையார், என மறு தெய்வங்கள்கூட சிற்சில மலைகளில் எழுந்தருளி உள்ளனர். எனவே அங்கங்கும்கூட காவடிமூலம் பூசைப்பொருட்கள் கொண்டுசெல்ல வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டது. அவ்வாறே நிகழ்ந்தது. காலகதியில் அம்மரபு நவீனத்துவ செல்வாக்கால் செயலிழக்க "முருகனுக்குக் காவடி" தனித்துவ மரபாக இந்தியாவில் ஏற்பட்டுவிட்டது. இலங்கையில் இன்னும் புராதன மரபு பேணப்படுகிறது. அவ்வழிபாட்டை ஏற்று அவ்வவத்தெய்வங்கள் இன்றும் அருள்புரிகின்றனர்.

ஒரு தெய்வமே உண்டு. அதை அவரவர் பல வடிவங்களில் வழிபடுகின்றனர் என்ற கருத்தை இங்கே காட்டலாம். அடுத்து, செடிற்காவடி என செடில் (முட்கள்) சிறுவேல் முதலியன உடல் முழுவதும் குற்றிக் காவடியெடுப்பது "ஒருவித அங்குபஞ்சர் மருத்துவமுறை" என்பர் ஆய்வாளர். அதாவது இவ்வாறு செடில்களினை உடலில் குற்றுதலால் பல மருத்துவப் பயன்கள் உண்டு என்பர். இது எவ்வாறாயினும் வலியைத் தமக்குத்தாமே ஏற்படுத்தி இறையுணர்வை அதிகரிக்கச் செய்து இறையருள் பெறல்" என்பதே இதுவாக இருக்கலாம். நாம் நமது உடலை வருத்தும்போது மட்டுமே இறையுணர்வு அதிகரிக்கிறது. இதனால் தான் உணவும் உறக்கமும் நீக்கி விரதம் அனுஷ்டித்தல், கிறிஸ்தவர் முழந்தாளிட்டு வழிபடல் என்பன ஏற்பட்டிருக்கலாம்.

எது எத்தன்மையது எனினும் பயபக்தியுடனும் தூயஉள்ளத்துடனும் சம்பிரதாய முறைப்படி காவடியெடுத்து ஆடியவண்ணம் கந்தன் காவடி பணிபவர்கள் இன்றும் என்றும் நிச்சயம் சர்வவல்லமை படைத்த சரவணபவனாம் முருகனின் திருவருள் பெறுவர். இன, மத, சாதி என எவ்வேறுபாடுமில்லாத "தமிழ்க்கடவுள்", தமிழரின் தனிப்பெருங்கடவுள் சந்நிதிவேற்பெருமானின் காலடிகளில் நாம் காவும் துன்பதுயரங்களை இறக்கிவைத்து மன அமைதியும் பூரணானந்தமும் பெறுவோமாக.

## அள்ளிப் பருக வாருங்கள்

வள்ளி தெய்வா னையுடன் எம்
வடிவேல் முருகன் வருகின்றான்
உள்ளம் குளிர்ந்து அடியார்கள்
உவகை யோடு கும்பிடுவர்
வள்ளல் செல்வக் குமரனவன்
வாரி வழங்கும் அருளமுதம்
அள்ளிப் பருக வாருங்கள்
அல்லல் எல்லாம் தீருங்கள்

## சந்நிதி முருகன் சகலதும் தருவான்

சந்நிதி முருகன் சஞ்சலம் தீர்ப்பான்
எந்நிதியும் அவனுக்கு ஈடாகு மாமோ.
சந்நிதி நாடின் சகலதும் தருவான்
சண்முகன் என்று தெரியாதோ

*-கவிஞர் வ. யோகானந்தசிவம் அவர்கள்-*

உனக்கு மனஅமைதி வேண்டுமானால் பிறரிடம் குற்றம் காணாதே.

உ

# வான்மீகி

திரு இ. சிவலிங்கம் அவர்கள்.

முன்னொரு காலத்திலே இரத்தினாகரன் என்றொரு பிராமணன் இருந்தான். அவன் சகவாசதோஷத்தினால் திருடன் ஆகிவிட்டான். காட்டில் அவன் ஒற்றையடிப் பாதையில் ஒளித்துக்கொண்டிருப்பான். யாராவது யாத்திரிகர் வந்தால் அவர்கள்மீது பாய்ந்து அவர்களைக் கொள்வான். பிறகு அவர்களிடமுள்ள பொருட்களைக் களவாடி அவர்களின் உடலைத் தூக்கி எறிவான். ஒருதடவை தேவரிஷி நாரதர் அந்தப்பக்கமாக வந்துகொண்டிருந்தார். அவரைக் கண்டதும் இரத்தினாகரன் அவர்மேற்பாய்ந்து தன் கையிலிருந்த தன் கத்தியை உருவினான். நீ எதற்காக என்னைக் கொல்ல வருகிறாய். நான் உனக்கு என்ன கெடுதல் செய்தேன்? என்றார் நாரதர். நீங்கள் எனக்கு ஒரு கெடுதியும் செய்யவில்லை. ஆனால் உங்களைக் கொன்று உங்கள் உடைமைகளை எடுத்துக்கொள்வேன். நாரதர் மனிதர்களைக் கொல்லாமல் காய், கிழங்குகளை உண்டு நீ வாழ்க்கை நடத்த முடியாதா? நான் காய் கிழங்குகளைச் சாப்பிடலாம். என் மனைவி, குழந்தைகள் இவர்களால் காய் கிழங்குகளைச் சாப்பிடமுடியுமா? என்றான் இரத்தினாகரன்.

அப்பா நீ யாருக்காக மனிதர்களைக் கொல்லும் பாவத்தைச் செய்கிறாயோ அவர்கள் உன் பாவத்திற் பங்குகொள்ளப் போகிறார்களா? உன் பாவத்தை நீதான் அனுபவிக்க வேண்டும். என்றார் நாரதர். அப்படி இல்லை. என்பாவத்தினால் கிடைக்கும் பொருளைக்கொண்டு யார் வாழ்க்கை நடத்துகிறார்களோ அவர்கள் என் பாவத்தில் ஒருபங்கை அனுபவிக்கத்தான் வேண்டும். அப்படி இல்லை. நாரதர் உன் பாவத்தில் யாரும் பங்கெடுத்துக்கொள்ளமாட்டார்கள். உனக்குச் சந்தேகமாக இருந்தால் நான் இங்கு நிற்கிறேன் நீ வீட்டிலே கேட்டுவிட்டுவா. ஐயா பெரியவரே நீங்கள் என்னை மடையன் என்று நினைத்துக் கொண்டீர்களா? என்னைவிட்டு நீங்கள் ஓடிப்போகலாம் என்று நினைத்தீர்களா? நாரதர் நான் எங்கும் ஓடிப்போகமாட்டேன் ஆனால் உனக்குச் சந்தேகம் வேண்டாம். நீ என்னை இந்த மரத்தோடு கட்டிவிட்டு உன் வீட்டுக்குச் செல் என்று சொல்லிவிட்டு நாரதர் மரத்தின் அருகிற்போய் மரத்தோடு மரமாக நின்றார். இரத்தினாகரன் நாரதரைக் காட்டுக்கொடியாற் கட்டிவிட்டு வீடுசென்றான். தகப்பனாரை நோக்கி அப்பா நான் தினம் பாவத்தொழிலைப் புரிந்து உங்களைக் காப்பாற்றி வருகிறேன் அந்தப் பாவத்தில் உங்களுக்குப் பங்கு உண்டா இல்லையா? என்று கேட்டான். தகப்பனார் சிறிது யோசித்து விட்டுப் பிள்ளாய். நாங்கள் உன்னை வளர்த்துப் பெரியவனாக்கினோம். இப்பொழுது எங்களுக்கு மூப்பு வந்துவிட்டது. நாங்கள் உம்மைக் காப்பாற்றியதுபோல இப்பொழுது எங்களைக் காப்பாற்றுவது உன் கடமை. அதற்கு வேண்டிய பணத்தை நீ எப்படிச் சம்பாதிக்கிறாய் என்பதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. ஆதலால் உன் பாவத்திலோ புண்ணியத்திலோ எங்களுக்குக் கவலையில்லை. ஆகவே உன் பாவத்திலோ புண்ணியத்திலோ எங்களுக்கு எந்தப் பங்கும் கிடையாது.

**உடலால் மற்றவர்களுக்குக் கைங்கரியம் செய்வது பெரிய புண்ணியம்.**

இரத்தினாகரன் இதே கேள்வியைத் தன் தாயாரிடம் கேட்டான். தகப்பனார் சொன்ன பதிலை அவளும் சொன்னாள். இரத்தினாகரன் இதே கேள்வியைத் தன் மனைவியிடம் கேட்டான். மனைவியைக் காப்பாற்ற வேண்டியது கணவனின் கடமை. அந்தக் கடமையை நிறைவேற்ற நீங்கள் எப்படிப் பொருள் சம்பாதிக்கிறீர்கள் என்பதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆகவே உனது பாவத்தில் எனக்கு எப்படிப் பங்கு ஏற்படும் என்றாள். கடைசியாகத் தன் மகனையும் இதே கேள்வியைக் கேட்டான். அப்பா நான் இப்போது சிறுவன். தாங்கள் என்னைக் காப்பாற்றி வருகிறீர்கள். நாளைக்கு நான் பெரியவனானதும் நான் உங்களைக் காப்பாற்றத் தொடங்குவேன் அவ்வளவுதான் எனக்குத் தெரியும். ஆகவே உங்கள் பாவத்தில் என்னால் எப்படிப் பங்கேற்க முடியும் என்றான். இவர்கள் சொன்ன பதிலைக்கேட்டபின்புதான் இரத்தினாகரனுக்கு ஞானம் பிறந்தது. நாரதரைக் கட்டிப்போட்ட இடத்துக்கு ஓடினான். அவரை விடுவித்து அவர் காலில் வீழ்ந்து அழுதான். சுவாமீ நீங்கள்தான் என் பாவத்துக்குப் பிராயச்சித்தம் சொல்லவேண்டுமென்று கேட்டான். நாரதர் அவருக்கு ஒரு பிராயச்சித்தம் சொல்லிக்கொடுத்தார். ராமநாமம் ஜெபிக்கச் சொன்னார். ஆனால் அவனுக்கு ராம என்ற நாமத்தைச் சரியாகச் சொல்ல முடியவில்லை. நாரதர் தான் கட்டப்பட்ட மரத்தின் பெயரான மரா என்று ஜெபிக்கும்படி சொன்னார். அவ்வளவுதான் இரத்தினாகரன் அங்கேயே உட்கார்ந்து மரா, மரா என்று உச்சரிக்கத் தொடங்கினான். நாளடைவில் அது ராம, ராம என்று மாறிற்று. அவரைச் சுற்றி புற்று எழுந்துவிட்டது. அவர் தவத்தை மெச்சிய பிரமா ஒருநாள் அவர்முன் தோன்றி அவரை வெளியே வரும்படி அழைத்தார். வெளியே வந்தவர் இரத்தினாகரன் அல்லன். புதிய வான்மீகி (வடமொழியில் புற்றை வால்மீகம் என்று அழைப்பார்கள்) ஆகவே வாழ்மீகத்தில் இருந்து வெளிப்பட்ட அவர் வான்மீகி என்று அழைக்கப்பட்டார்.

இந்த வான்மீகிதான் அழியாப்புகழ்பெற்ற இராமாயணத்தைப் பாடியவராவார்.

## அபயமளித்து

அற்புதங்கள் செய்து அடியவரைத்
கவர்ந்தீர்த்து - பெரும்
நற்கதியைத் தருபவனே - என்றும்
நல்லாருள் உறைபவனே!
நாற்பதங்களை நாடுவோர்க்கு
நாமுண்டெனே அபயமளித்து
**ஆற்றங் கரையுறையும் - எங்கள்**
**ஆறுமுகப் பெருமானே!**

***-இராம ஜெயபாலன் அவர்கள்-***

உ

(தொடர்ச்சி....

# 'சிவவ(ம)யப்பேறு'

துணைவியூர் கேசவன் அவர்கள்.

இளங்காற்று மேனிதீண்ட பொய்கையாடிக் களிக்கும் கன்னியர் கூட்டம் தெய்வீக அனுபவத்திற் திளைக்கிறது. சிந்தையும் காட்சியும் வார்த்தையும் இறைவயமாய்க் குவியவே பேரானந்தம் அவர்களை ஆட்கொள்கின்றது. எங்கும் எதிலும் இறையுருக்காணும் நிலை அவர்க்கு வாய்க்கிறது. "திருவைந்தெழுத்'தோதும் வாயும், இறையெழில் தேடுங் கண்ணும், சிவன்புகழ் நாடுஞ் செவியுமென "ஐந்துபேரறிவும்" அவனை நாடிநிற்க அவ்வடியார் கூட்டம் உடலும் உள்ளமும் புத்துணர்வுபெற நீராடி மகிழ்கின்றது.

**திருவாசகத் தேன்துளி**

**மலவிருளகற்றுந் திருவெம்பாவை - 08**

ஐம்பொறிகளும் அவன்வயமாகினமையால் எல்லாம் "சிவமயமா"யாயிற்று அவர்க்கு. அவர் நீராட விழையும் பொய்கைகூட 'பெண்ணோர் பாகத்தர்' காட்சியை அவர்க்கு நினைவுறுத்தி நிற்கிறது. பொய்கையோரத்தில் பூத்துக்குலுங்கும் குவளை மலர்களினால் 'கரியதிறமாய்' காட்சிதரும் பொய்கையின் பகுதியும், இதழ்விரி செந்தாமரைகளால் செந்நிறமான பகுதியும் ஒருங்கே கண்களிற்பட அவை முறையே அம்மை அப்பரது திருமேனிகளை நினைவுபடுத்தி 'மாதொரு பாகனின்' திருக்கோலத்தைக் கண்முன் நிறுத்தி நிற்கின்றன.

**"பைங்குவளைக் கார் மலரால், செங்கமலப் பைம்போதால்'** பொய்கை 'அம்மையப்பரது' கோலம் பெற்றது.

அப்பொய்கையின்மீது நீந்திவிளையாடுகின்ற பறவைகளைக் காண்கின்றனர் அக் கன்னியர். "ஆகா! இவை 'குருகினங்கள்' ஆயிற்றே. எங்கள் அம்மையின் திருக்கரங்களில் 'குருகினங்கள்' தவழ்ந்து விளையாடுவதைப் போலல்லவா உள்ளது என வியந்து நிற்கின்றனர். பறவைகள் விளையாடுதலாலும், வீசுந்தென்றலால் சலசலக்கும் நீரினாலும் பொய்கையில் மெல்லிய சத்தம் கேட்கின்றதல்லவா! அதைக்கேட்ட பெண்களோ, "அடடே! 'அரவங்' கேட்கிறதே. இப்பொய்கை 'அரவத்தை அணியாக்கியுள்ளதைப்போல எங்கள் பெருமானும் 'அரவத்தை'த் தானே அணியாக்கி யுள்ளார்" என எண்ணி மகிழ்கின்றனர்.

**"அங்கம் குருகுஇனத்தால் பின்னும் அரவத்தால்"**

பொய்கை தந்த 'மாதொருபாகனின்' காட்சி உறுதியாயிற்று (குருகு- பறவை, வளையல் என்றும், அரவம்- சத்தம், பாம்பு என்றும் இரட்டைப் பொருள் தரும். இங்கு சிலேடையாய் ஒப்புமை கண்டு வியந்தனர், வியப்போம்)

தங்கள் மேனியிலுள்ள அழுக்குக்களைக் கழுவுவதற்காக, தம்மைத் தூய்மைப்படுத்துவதற்காக பொய்கையை நாடிவரும் மக்களைக் காணும் கன்னியர்க்கோ, தம் பாவங்களை நீக்கிக்கொள்ள, மலங்களை அகற்றிப் புனிதராகிக்கொள்ள

'அர்த்தநாரீசுவரனை' நாடிவரும் மெய்யடியாரின் நினைவே மனத்திலெழுகிறது தோற்றத்தால் மட்டுமன்றி

**"தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்"**

இயல்பாலும் 'பொய்கை' மாதொருபாகனே யாயிற்று. இதனால் அவர்கள் 'பொய்கையை' அம்மையப்பராகவே' கொள்கின்றனர்.

**"எங்கள் பிராட்டியும் எம் கோனும் போன்று இசைந்த**
**பொங்குமடு"**

எனத் தீர்க்கமாய் எண்ணி மகிழ்கின்றனர்.

பொய்கையே அம்மையப்பரானதால் அம்மையப்பரோடு உறவாடுவ்தான எண்ணத்துடனேயே, அந்த எண்ணந்தரும் திவ்வியவுணர்வுடனேயே தம்மைமறந்து ஆபரணங்கள் ஓசையெழுப்பவும், உடல் பூரிக்கவும், உள்ளம் மகிழவும் நீராடிக் களிக்க விழைகின்றனர்.

"(பொங்குமடுவில்) **புகப்பாய்ந்து பாய்ந்து நம்**
**சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்து ஆர்ப்ப,**
**கொங்கைகள் பொங்கக், குடையும் புனல் பொங்கப்**
**பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு"** (ஏல் ஓர் எம்பாவாய்)

என எல்லோரையும் அழைத்து நீராடி மகிழ்கின்றனர்.

பொறிகள் நுகர்வதெல்லாம் 'சிவமயமாய்'க் காணும் 'சிவவயப்பேறு' வாய்த்தமையினால் தம்மை மறந்து அவர்கள் புனலாடுகின்றனர். வேகமாய் நீருள் மூழ்கி நீரை வாரியடித்து அவர்கள் நீராடும் வேகத்தில் அவர்களது காதுகளில் தொங்கும் தோடுகள் (குழை- தோடு) ஆட அவர்கள் அணிந்திருக்கின்ற பசிய பொன்னாலான ஆபரணங்கள் அசைய, கன்னியரின் கூந்தல்......, அக்கூந்தலில் சூடியுள்ள மலர்களில் தேனருந்தவந்த வண்டுகளின் கூட்டமும் மேலெழுந்து ஆடவே புனலாடல் எழில்மயமாய்த் திகழ்கிறது.

**"காதுஆர் குழை ஆடப், பைம்பூண் கலன் ஆடக்**
**கோதை குழல் ஆட, வண்டின் குழாம் ஆடச்**
**சீதப் புனல் ஆடி"க்**

களிப்போரின் நினைவெலாம் சிவன்பாலிருப்பதால் அவர்தம் மனக்கண்களில் அவனே நிழலாடுகிறான். அவர்தம் வாய்களும் அவன்திறம் பேசுகின்றன. ஒளிப பிரவாகமாம் சோதிமயமாகிய அவன் தனது அடியார்க்கு அருட்காட்சி கொடுத்தற்காய் உருவந்தாங்கியருள்கின்றான். சோதிவடிவினனின் அப்பெருந்தன்மையைச் சுட்டி, அத்தன்மையால் விளைந்த கொன்றைமாலை சூழ்ந்துள்ள அவனழகுருவைப் பேசுகின்றன.

"சோதி **திறம்பாடிச், சூழ்** கொன்றைத்தார் பாடி"

எனத் தம்மனத்திரையில் வீழ்ந்த அவனின் தோற்றத்தைப் போற்றிப்பாடிய அவர்கள் தொடர்ந்து ஆதியாயும் அந்தமாயும் அவன் வியாபித்திருக்கும் இயல்பை

**"ஆதி திறம்பாடி, அந்தம்ஆம்ஆ பாடி"**

எனப்பாடி மகிழ்கின்றனர். மகிழ்ந்தோரோ தொடர்ந்து அவனருட்திறத்தையும்

வியந்து பேசுகின்றனர்.

இறைவனே உலக இயக்கத்தின்மூலம். அவன் உலகத்து உயிர்களின் சேமத்திற்காய் உலகை இயக்குகிறார். தனது படைத்தல் முதலிய "பஞ்சகிருத்தியங்களால்" பிரபஞ்சத்தை ஆள்பவன் அவன். பஞ்சகிருத்தியத் திருக்கோலம் நடேசுவரக் கோலம். அது நிகழ்வது சிற்றம்பலத்தில். அதனால் **"சிற்றம்பலம்பாடி"** எனப்பாடிப் புகழ்ந்து பஞ்சகிருத்தியதாரியாய் உலகை இயக்கும் அவனருட்திறத்தை நினைந்துருகி நிற்கின்றனர். இளங்கன்னியர். அதுமட்டுமன்றி எமக்காக வாழ்வியல் நெறியைப் பேசுபவை 'நால்வேதங்கள்' அவ்வேதங்கள் நமக்குப் பயன்படும் வண்ணம் அவற்றின் உட்பொருளாய் அமைபவன் சிவன். அவ்வேதங்களாயும் அவ்வேதங்களின் உட்பொருளாயும் அமைந்து நம்மை ஆட்கொள்ளும் அவனின் கருணையை வியந்து **"வேதப்பொருள் பாடி, அப்பொருள் ஆம்ஆ பாடி"** யென உருகி நிற்கின்றனர் அவர்கள்.

பொங்குமடுவில் அம்மையப்பனைக்கண்டு, களிகொண்டு அப்பனை வியந்த கன்னியர், அம்மையின் திறத்தையும் பேசுவர். ஆன்மாக்களாகிய எம்மை எமது பக்குவநிலைகளுக்கு ஏற்ப வேறுபடுத்தி, வளர்த்து, மேம்படுத்திக் கருணைக்கடலாகிய இறைவன்பாற்சேர்க்கும். அவ்விறைவனின் அருட்சக்தியாகிய வளையல்களை அணிந்திருக்கும் 'அம்மையின்' திருவடியின் சிறப்புக்களைப் பாடிச் சிலிர்க்கின்றனர்.

**"பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளைதன்**
**பாதத் திறம் பாடி ஆடு"** (ஏல் ஓர் எம்பாவாய்)

எனத் தம் தோழியர்க்கு, அன்னையின் திருப்பாதங்களோ தம்மையடைவாரை உயர்த்தி இறைவனின் பேரருட்கடலில் திளைக்க வைக்கும் பெருஞ்சிறப்புக் கொண்டவையென்பதை நினைவுபடுத்தி, அழைத்து நீராடிக்களிக்கின்றனர். பொங்கு மடுவில் மட்டுமல்ல, அம்மையப்பனின் நினைவுச் சாகரத்திலும் தான். 'சிவவயப்பேறு' பெற்ற இக்கன்னியரைப் போன்றே அம்மையின் பாதங்களில் சரண்புகுந்து அப்பனின் அருட்கடாட்சத்தில் திளைத்து எதையும் "சிவமயமாய்"க் காணும் பேறுபெற எம்மைத் தயார்ப்படுத்துவோம்.

(தொடரும்...

## சந்நிதி கதிர்காம வேலவர் பாமாலை

இகபர சௌபாக்கியம் தரும் சந்நிதி வேலவனே
ஆற்றங்கரையினில் குடிகொண்ட குகனே
இம்மையில் உன்னை மறவாத இன்பம்
எமக்கருள வேண்டும் சிவநாதனே
தந்தைக்கு உபதேசம் செய்த குருநாதனே
தமியேற்கு அருள்புரிய வாராயோ
எஞ்ஞான்றும் உன்னை அனைவோர்க்கு என்றும்
இன்னருள் தரும் சந்நிதி கதிர்காம வேலவனே.

*-அமரர் S.K. சிவபாலன் அவர்கள்-*

பட்டைப் பையிலுள்ள ஒரு பூந்தோட்டத்தைப் போன்றது புத்தகம்.

உ

# முருகன் திருவடிச்சிறப்பு

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள்

"ஓங்கார மூலத் தொருவன் இருபாதம்
ஆங்காரம் தீர்க்கும் மருந்து"

கலியுகவரதனாய், கண்கண்ட கடவுளாய் விளங்கித் தன்னை வழிபடும் அடியவர்க்கு அனைத்து நலன்களையும் அருள்பவன் முருகன். செந்தமிழுக்கும் சிவசுப்பிரமணியக்கடவுளுக்கும் நீங்காத தொடர்புண்டு. எங்கெல்லாம் தமிழ் இருக்கிறதோ அங்கெல்லாம் பெருமான் பேரருள் நிறைந்து இன்பம் பெருக்கும். தமிழ்த்தெய்வம் முருகன். தமிழர் தெய்வம் முருகன். தமிழ் தந்த தெய்வம் முருகன் என்றால் தமிழைத் தந்த தெய்வம் முருகன், முருகனைத் தந்த தமிழ் என்றும் கூறலாம். வேண்டுவார்க்கு வேண்டுவன அருளும் தண்டமிழ்த் தெய்வமாய் விளங்குகிறான். அவன் இல்லாத இடமில்லை. அவனை எண்ணாத உள்ளமில்லை. அங்கிங்கெனாது எங்கும் நிறைந்து காணப்படும் மெய்ஞ்ஞானத்தெய்வம் முருகன்.

ஆயிரம் தெய்வங்கள் இருந்தாலும் அழகுதெய்வம் முருகன். அழகுக்கு மறு பெயர் முருகன். "முருகு" என்பதற்கு இனிமை, இளமை, அழகு, எழில் என்று பொருள். "என்றும் இளையாய், அழகியாய், ஏறூர்ந்தான் ஏறே" என்கிறார் நக்கீரர். அவன் அழகிய சிவந்த மென்மலர்ப்பாதங்களின் சிறப்பினைப் பார்ப்போம்.

இறைவனைப்பற்றிப் பாடும்போது பாதத்திலிருந்து உச்சிவரை வருணிப்பதே வழக்கம். திருப்பாணாழ்வார் ஸ்ரீரங்கநாதரின் கமலபாதந்தொடக்கம் "அமலனாதிப்பிரான்" என்று அங்கமங்கமாக உருகிப்பாடுகிறார். அருணகிரிநாதர் முருகனுடைய திருவடி தரும் பலன்களைக் கந்தரலங்காரப்பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார். அவன் பாதகமலங்களைப் பிடித்தால் பாதகமலங்கள் அறும்.

மாவலிச்சக்கரவர்த்தியின் செருக்கடக்க வாமன அவதாரமெடுத்த மகாவிஷ்ணு மூவடி மண்கேட்டு அதற்கு அவன் இணங்கவே தன்னுடைய பிரமாண்டமான நீண்ட அடியாலே மண்ணையும், விண்ணையும் அளக்கிறார். ஆனால் அவர் மருகனோ தன் சிற்றடியைத்தான் நீட்டுகிறார். தாவடியோட்டு மயிலிலே அவன்சிற்றடிபடுகிறது. கந்தன் கருணை வைதாரையும் வாழவைப்பது. சூரன் தன்னை மண்ணவரும், விண்ணவரும் துதிக்கவேண்டுமென்று விரும்பினான். முருகப்பெருமான் அவன் விருப்பத்தை நிறைவேற்றுகின்றார். மயில்மீதிலே தன் சிற்றடியை வைத்து ஏறி நின்றான். முருகனைத் துதிப்பவர்கள் அவன் சிற்றடியைத் தாங்கிநிற்கும் மயிலையும் துதிக்கிறார்கள். "செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க" என்ற வாழ்த்தையும் மயில் பெறுகிறது. முருகப்பெருமானுடைய திருவடிகளிலே தலைகளை வைத்து வணங்கிய தேவர்களுடைய தலையிலே முருகப்பெருமானுடைய சிற்றடிபட்டதனால் அவர்கள் தேவர்களாக உய்ந்தனர். முருகனையே பாடும் பணியே பணியாய்க் கொண்ட அருணகிரி நாதருடைய பாவடியேட்டிலும் முருகன் பாதம் பட்டது.

**இறைவனுக்காகத் துன்பப்படும் அளவுக்கு உனக்கு இன்பம் கிடைக்கும்.**

இறைவனின் திருப்பாதங்களின் பெருமையைப் போற்றி நாயன்மார்களும், ஆழ்வார்களும், அருளாளர்களும் பாடியுள்ளனர். தேவாரங்களிலும், திருவாசகத்திலும், திருப்புகழிலும், திருமுருகாற்றுப்படைப் புராணங்களிலும், திருக்குறள் இன்னும் பல நூல்களிலும் திருவடிச்சிறப்பு பாடப்பட்டுள்ளது. இறைவனின் திருவடி சென்னியிலே சூட்டப்பெறுவதே பேறுகளுள் தலையாய பேறு. சிவபெருமான் மாலும் அயனும் காணாத தமது மலரடியைத் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு சென்னிமிசை சூட்டினார். அபிராமிப்பட்டர் அம்பிகையின் பாதம் எனும் வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட நேசத்தை அபிராமி அந்தாதியிலே பாடுகிறார். வள்ளலார் திருத்தணிகை முருகனைப் பலமுறை சென்று வழிபட்டவர். அவர் சிறு குழந்தையாக இருந்தபோது முருகன் காட்சி கொடுத்து முடிமேல் திருவடி சூட்டியருளினார். அருணகிரிநாதர் சென்னிமிசை ஆறுமுகவள்ளல் வேத ஆகமங்களுக்கும் எட்டாத தன் திருவடித் தாமரையைச் சூட்டினார். "அவன் கால்பட்டழிந்தது இங்கு என்தலைமேல் அயன்கையெழுத்தே" பிரமன் தலையிலே எழுதிய கையெழுத்து பரமன் மகன் கால்பட்டு அழிந்துவிட்டது. அயனார் நமது தலையிலெழுதிய எழுத்து அறுமுகனார் திருவடிபட்ட மாத்திரத்தில் அழிந்துவிடும். உன் தலைஎழுத்தையும் நிச்சயம் மாற்றலாம். "முருகனிடம் வா" என்று நம்மையும் அழைக்கிறார் அருணைமுனிவர். 'அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்". நமதுள்ளத்தில் ஏதேனும் அச்சம் தோன்றினால் நமக்கு ஆறுதல் அளித்துக் காப்பாற்ற ஆறுமுகம் தோன்றும். கொடிய போரில் ஈடுபட்டால் அஞ்சாதே! இதோ நான் இருக்கிறேன் என்று "வேல்" தோன்றும். முருகனை ஒருகால் நினைத்தோமானால் அவன் இருகாலும் தோன்றும். "முருகா"! என மனமுருகி ஒருமுறை சொன்னாலே போதும் வேண்டிய நலன்கள் கிட்டும் என்கிறது திருமுருகாற்றுப்படை.

முத்திக்கு வித்தான முருகன், தேவர்களும் காணவொண்ணாத தேவதேவன், நேயக்காரனாக இரங்கி ஆன்மாக்களுக்கு அருள்புரிகிறான். இந்த உடம்பு இறைவனை அடைவதற்காகவே வந்தது. அது அழியுமுன் நற்கதிக்குரிய நலத்தைத் தேடிவிட வேண்டும். "முருகா! அடியேனுடைய உடம்பைவிட்டு உயிர்போகுமுன், சிறியேன்முன் தேவரீர் எழுந்தருளி வந்து எளியேனுக்கு உமது பொன்னார் திருவடிகளைத்தந்து காத்தருள வேண்டும்" என்று உள்ளம் உருகி முறையிடவேண்டும். ஆண்டவனைக் காணவேண்டும் என்ற ஆவல் உள்ளத்தில் துடித்துக்கொண்டிருக்கவேண்டும். அந்தத் துடிப்பில் இறைவன் தோன்றி அருள்புரிவார். நூறுகோடி சூரியப்பிரகாசம் போன்ற ஒளிபொருந்திய திருவடியின் பெருமையை வேதங்களாலும் போற்றுதற்கு ஒண்ணாது. அவன் திருவடி அத்துணைப் பெருமை வாய்ந்தது.

"விழிக்குத் துணை திருமென்மலர்ப்பாதங்கள்"
"மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்"
"காவிக்கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருள்வாய்"
"பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி"
"துய்யதோர் மறைகளாலும் துதித்திடற்கரிய செவ்வேள்

செய்யபேரடிகள் வாழ்க"

"தண்டைக் கால் எப்பொழுதும் நம்பியே கைதொழுவேன் நான்"

"காஞ்சிமாவடி வைகுஞ்செவ்வேள் மலரடிபோற்றி"

உலகத்தின் உய்திவேண்டி உதித்தவன் உமைபாலன். அவன் திருவடிகளிலே மனத்தை நிறுத்தி, அவனுக்கு ஆட்பட்டு, அவன் சேவடிகளை அடைய வேண்டும். சண்முகனின் இனிமையான மென்மையான, அழகான, குளிர்ச்சியான, சிவந்த சரணகமலங்களை அரைநிமிட நேரமாவது மனமொன்றித் தியானிக்கவேண்டும். ஆன்மாக்கள் ஒடுங்குமிடமாகிய தேவரீருடைய திருவடிகளை அரைநிமிடநேரமாயினும், புலன்களை அடக்கித் தவமுறைப்படி தியானம் செய்ய அறியாதவனும், அறிவிலியும், குற்றமுடையவனும், மூடனும், மட்டியும், பிறவிக்குக் காரணமான தீவினையாற் பிறந்து, பிறந்து உழல்பவனுமாகிய அடியேன் அருட்செல்வமில்லாத வறுமையால் மயக்கமடைந்து துன்புறுவது முறையோ? எல்லையில்லாப் பேரின்பத்தையும், மிகுந்த செல்வமிக்க பெருவாழ்வையும், நல்ல தகுதியையும், பதிஞானத்தையும், மரணமில்லாப் பெருவாழ்வாம் மோட்சநிலையையும் அடியேனுக்குக் கொடுத்துத் துணைபுரிந்து காத்தருள வேண்டுமென அருணகிரிப்பெருமான் வேண்டுகிறார்.

சரணகமலாலயத்தை அரைநிமிடநேரமட்டில் தவமுறை தியானம்
வைக்க அறியாத, சடகசடமூடமட்டிபவவினையிலே ஜனித்ததமியன்
மிடியால் மயக்க முறுவேனோ? (திருப்புகழ்)

"அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்பதற்கிணங்க அவனுடைய சிவந்த இதழ்களுடைய தாமரை மலர்போன்ற மென்மலர்ப்பாதங்களை வழிபட அவனருள் வேண்டும். நம்முடைய குறிக்கோள் முருகனின் திருவடி பற்றிவாழுதலாக இருக்க வேண்டும். குறக்குலக்கொடியாம் வள்ளியை ஆட்கொண்ட வடிவேலன் அடியார்களையும் வலிந்துசென்று ஆட்கொள்வான். குமரேச வள்ளலின் பாதாரவிந்தங்களைக் கும்பிடும் பேறுபெற்றால் துன்பதுயரங்கள், மனக்கவலைகள் நீங்கி பிறவிப்பிணி ஒழிந்து, பேரின்பநிலை எய்தலாம். திருவடி வழிபாடு பிறவிப்பிணி நீக்கி முத்தி அருளும். அவன் அடியிணைகளை நெஞ்சினுள் வைத்துப் பூஜிக்கும் அநுபவத்தை நமக்கு வழிகாட்டிய நாயன்மார்கள், அடியார்கள், அநுபூதிமான்கள் பாடிய அருட்பாடல்களைப் பாடிப்பெற முயலவேண்டும். மனப்பக்குவம் பெற்றால் இறைவனுடைய பாதமலர்களிலே மனமொன்றிப் பற்றிநிற்கலாம். திருவடியே பற்றுக்கோடாக, உறுதுணையாக வழிபடவேண்டும். பொய்யான உலகப்பற்றுக்களிலிருந்து விடுபட்டு பயந்த தனிவழிக்கு அவன் சேவடிகளைத் துணையாகக்கொள்ளவேண்டும். அவன் அருள்தரும் முருகன், அற்புதத் தெய்வம், நித்திய சொரூபன், மனோகரன், கருணைப் பெருங்கடல், வினைதீர்க்கும் வெற்றிவடிவேலன், சுந்தரக்கடவுள், பேரழகன், செழுஞ்சுடர், அவனை நம்பினோர் கெடுவதில்லை.

சிவந்தகாலும் தண்டையுமழகிய பெருமானின், சூரனே வியந்துநின்ற விமலமாம் சரணந் தன்னில் சரணடைந்து, ஒப்பற்ற, அழகிய சரணாரவிந்தங்களை நெஞ்சக்கனகல்லும் நெகிழ்ந்துருகித் துதித்துப் பிறவிநோய் நீங்குவோமாக. "காலனெனை

அணுகாமலுனதிருகாலில் வழிபட அருள்வாயே'' அருணைமுனிவர் வேண்டுவதுபோல நாமும் அந்த மாலோன் மருகனை, மன்றாடி மைந்தனை, வானவர்க்கு மேலான தேவனை, மெய்ஞ்ஞான தெய்வத்தை, சிவகாமிபாலனை, பழநிக்குன்றினிலிருக்கும் சின்னக்குழந்தையைப் போற்றி நற்கதியடைவோமாக.

"முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன்மகனே ஒருகைமுகன்
தம்பியே, நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கை தொழுவேன் நான்"
சரணம் சரணம் சந்நிதி முருகா
சரணம் சரணம் சண்முகா சரணம்.

**2006ஆம் ஆண்டு உற்சவம் (23.08.2006) தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்**

| | | |
|---|---|---|
| திருமதி பொ. இரத்தினசோதி கதிரவேற்பிள்ளை வீதி | பருத்தித்துறை | 12000. 00 |
| K.V. துரைசாமி ஞாபகார்த்தமாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. கிருபாகரன் | அச்சுவேலி தெற்கு | 2000. 00 |
| ஸ்ரீஸ்கந்தராசா இராஜேஸ்வரி | ஜேர்மனி | 1000. 00 |
| அற்புதராசா வதனா யாட்புலம் | கரவெட்டி கிழக்கு | 500. 00 |
| ச. சுதர்சன் | பருத்தித்துறை | 1000. 00 |
| V. முருகவேள் முத்திரைகட்டை ஒழுங்கை | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| கனகசபாபதி | மிருசுவில் வடக்கு | 1000. 00 |
| நடராசா சிவதாஸ் துன்னாலை மேற்கு | கரவெட்டி | 4000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் J.P | பத்தமேனி | 1000. 00 |
| இ. சண்முகசுந்தரம் ஆசிரியர் | மந்திகை | 500. 00 |
| திருமதி Dr கு. பத்மராணி பல் வைத்தியர் | அச்சுவேலி | 3000. 00 |
| கி. சிவப்பிரகாசம் | புலோலி தெற்கு | 3000. 00 |
| பேராசிரியர் V. சிவசாமி மூலம் அ. சண்முகராசா | லண்டன் | 19000. 00 |
| தேவகாந்தன் | ஏழாலை | 1000. 00 |
| பா. முரளிதரன் செட்டித்தெரு | பருத்தித்துறை | 500. 00 |
| வை. க. சிற்றம்பலம் | இணுவில் | 1000. 00 |
| ஏகாம்பரம் ரெக்ஸ் பெரியகடை | யாழ்ப்பாணம் | 1/2 மூடை அரிசி |
| செல்வி ச. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| A.S.S. இராமச்சந்திரன் மாலிசந்தி | அல்வாய் | 1000. 00 |
| திருமதி யோ. நவரத்தினராசா | இளவாலை | 1000. 00 |
| திருமதி Dr N. நகுலேந்திரன் | U.S.A | 21340. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் | மயிலியதனை | 3000. 00 |
| சி. நவரத்தினம் ஆசிரியர் தல்லையப்புலம் | கரவெட்டி | 3000. 00 |

(தொடரும்...

உ

# எந்த இடரையும் நீக்கி வாழ்விக்கும் கந்தர் அநுபூதி

மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்.

**உ**லகத்தின் தெய்வீக நூல்களெல்லாம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்கள் பற்றி விளக்க உரைகளே ஆகும். "பசு" என்பது உயிர் அல்லது ஆன்மா, "பதி" என்பது இறைவன். பசுவும் பதியும் இரண்டறக்கலந்து நிற்றலே பேரின்பம் இந்தப் பேரின்ப நிலையைத் தடைசெய்வதே ஆணவம், கன்மம், மாயை என்ற பாசத்தளையாகும். இந்த ஆசாபாசம் நீங்கினால் கிடைக்கும் சச்சிதானந்தநிலையே அநுபூதி என்பதாகும்.

அந்தநிலை எய்துவதற்காகப் பாடிய பெரியார்களில் ஒருவர் அருணகிரிநாதர். கந்தன் என்ற சொல்லுக்கு பற்றுக்கோடாய் இருப்பவன் என்பது பொருள். கந்தன் என்ற சொல்லுக்கு ஒன்றுசேர்ந்தவன், ஒன்றாகச் சேர்பவன் என்றும் பொருள் கூறுவார்.

சரவணப்பொய்கையில் கார்த்திகைப் பெண்களிடம் பால் உண்டு ஆறு குழந்தைகளாக இருந்த பெருமானை உலக மாதாவான உமாதேவி வாரி எடுத்து அணைத்த காலத்தில் ஆறுமுகங்களுடன் பன்னிரு திருக்கரங்களுடனும் ஒரே குழந்தையாகமாறிய பெருமானுக்கு சிவபெருமான் "கந்தன்" எனப் பெயரிட்டார் என்றார் கந்தபுராணமுடையார்.

தாயென ஆரல் போந்து தனங்கொள் பால் அருந்தலாலே
ஏயதோர் கார்த்திகேயன் என்றொரு தொல்பேர்பெற்றான்
சேயவன் வடிவமாறும் திரட்டி ஒன்றாய்ச் செய்தாய்
ஆயதனாலே கந்தனாமெறு நாமம் பெற்றான்

இவ்வாறாக கந்தப்பெருமானின் கருண்ணையைப் பெற்றுள்ள ஆனந்த நிலையையே, பேசாது உள்ளம் புளகித்து நிற்கும் நிலையையே அநுபூதி என்கிறார். அநுபூதி பெற்ற பெரியாரான அருணகிரிநாதர் தாம்பெற்ற பேற்றை இவ்வையகமும் அடைய வேண்டும் என்பதற்காக கந்தரநுபூதி நூலைப் பாடினார். அநுபூதிபெற்றவர்தான் அநுபூதி பாடமுடியும் என்றார் தாயுமானவர்.

கந்தரநுபூதியை மந்திரநூல் என்பர். எந்த மந்திரத்தை ஓதினாலும் "ஓம்" என்ற எழுத்துடன் ஆரம்பிக்கும் வழக்கம் அ,உ,ம் என்ற மூன்று எழுத்துக்கள் சேர்ந்து "ஓம்" என ஆயிற்று என்பர். அதனாலேயே தமிழிலுள்ள அநேக நூல்கள் "உ" என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் வழக்கம் "உலகெல்லாம்..." என்று பெரியபுராணம், "உலகம் யாவையும்...." என்று கம்பராமாயணமும் "உலகம் உவப்ப" என்று திருமுருகாற்றுப்படையும் ஆரம்பிக்கின்றன. தமிழ் மறையாகிய வள்ளுவத்தை "அகரம்" என்ற முதல் எழுத்துடன் தொடங்குகின்றார் வள்ளுவப்பெருமான். தமிழ் மறையான திருமுறைகளில் முதல் திருமுறையான தேவாரம் "தோ" என்ற எழுத்துடன் ஆரம்பமாகின்றது. ஞானசம்பந்தர் பாடியது தமிழ்மறை. "த" என்ற எழுத்தின் ஒன்றாகிய "த்" என்ற எழுத்துடன் ஓங்காரத்தைச் சேர்த்து "தோ" என்று ஆரம்பித்தார்.

இதேமாதிரி அநுபூதி ஆசிரியரும் தமது மந்திரநூலாகிய கந்தரநுபூதியை "ஓம்" என்ற எழுத்தில் தொடங்கி அருளுகிறார். "ஆடும் மயில் ஓங்காரத்தை நினைவுறுத்தும் மேலும் "ஆடும்" என்ற சொல்லில் "ஆ" அகரத்தையும் 'டு' உகாரத்தையும் 'ம்' மகாரத்தையும் குறிக்கின்றது. "ஓம்" என்ற குறிப்பில் ஆரம்பிக்கும் இவ்வழகிய நூலை 51 பாடல்களில் நிறைக்கின்றார்.

"ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

என ஆரம்பித்து "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்று அருள்வாய் என முடிக்கின்றார். "நெஞ்சக்கனகல்..." என்ற விநாயக வணக்கம் செஞ்சொற் புனைமாலையின் குஞ்சம்போன்று விளங்குகின்றது.

முருகனை அடைய எத்தனை வழிகள் உள்ளனவோ, அத்தனை வழிகளையும் கூறுகின்றது அநுபூதி. யாவற்றுக்கும் முதன்மையானது அவனைப் பாடவேண்டியதே என்பதை "பாடும்பணியே பணியா யருள்வாய்" என்பது முதல்பாடல். மனிதனுக்கு அவனது முன்னேற்றத்தைக் கெடுக்கும் பெண்ணாசை ஒழியவேண்டும் என்பதை "மட்டூர்குழல்" (8) "கூர்வேல்விழி" (24) சிங்கார மடந்தையர் (34) பாடல்கள் கூறுகின்றன. ஆசையும் மயக்கமும், பாசமும் ஒழியவேண்டுமென்பதை "வளைபட்ட" (4) "மகமாயை" (4) "அமரும்பதி" (8) "கைவாய் கதிர்" (14) "பேராசையெனும்" (16) "பாழ்வாழ்வு" (31) "சிந்தாகுல" (33) "மாவேழ் சனம்" (39) "வினையோட" (40) "மதிகெட்டற" (50) ஆகிய பாடல்கள் கூறுகின்றன.

நான் என்னுடையது என்ற அகந்தை நீங்கவேண்டுமென்பதை "உல்லாச" (37) "ஆனவமுதே" (28) "கிரிவாய்விடு" (37) என்ற பாடல்கள் குறிப்பிடுகின்றன. முருகப்பெருமானின் திருவடிப்பெருமையைப்பற்றி "திணியான" (6) "கருதாமறவா" (21) "விதிகாணுமுடம்பு" (31) "ஆசாடும் தனிவேல்" (44) ஆகிய பாடல்கள் உரைக்கின்றன.

மௌன உபதேசகுருவாக முருகன் வந்ததை "செம்மான் மகளை" (12) பாடலும் அந்த உபதேசத்தினால் கிடைத்த பயனைக் கூறமுடியாது என்ற ஆனந்தத்தை "செவானுருவில்" (30) என்ற பாடலும் அநுபூதி கிடைத்த ஆனந்தத்தை "தூசாமணியும்" (43) பாடல் கூறுகின்றன. ஆறாரையும் நீத்து அதன்மேல் நிலையிலுள்ள முருகன் தன் தந்தைக்கு உபதேசித்த பெருமையை "நாதகுமரா" (36) என்ற பாடலும் கூறுகின்றது. தனது தாழ்வையும் தன்னையாட்கொண்டு உயர்ந்தோனாகிய முருக வள்ளலின் பெருமையையும் "ஆதாரமிலேன்" (26) "ஆதாளியை" (38) "ஆறாரையும்" (47) என்ற பாடல்களும், நமது கல்வியறிவை முருகனைப் பாடவே உபயோகிக்க வேண்டும் என்று "யாமோதிய கல்வியும்" (17) பாடலும் படித்தோமென்ற அகந்தை கூடாது என்று "கலையே பதறி" (32) பாடலும் தரித்திரம் நீங்கவேண்டுமென்று "வடிவும் தனமும்" (19) பாடலும், என்ன இருந்தாலும் மனிதன் உயிரோடிருந்தால்தான் இறைவனது கருணையை அனுபவிக்கமுடியும், ஆதலால் யமவாதனையில்லாது காக்க வேண்டுமென்பதை "கார்மாமிசை" (10) "கூகாஎன" (11) "சாகாது" (41) என்ற

பாடல்களிலே வேண்டிக்கொண்டு தெய்வமான முருகா! நீயே எனக்கு குருவாக "கரவாகிய" (45) தாய்தந்தையாக "எந்தாயும் எனக்கு" (46) வரவேண்டுமெனக்கூறி பூரணமான அடைக்கலம் புகுந்து குருவாக வந்து அருள்புரிந்து என்மனமான குகையில் இருப்பாயாக "அருள்வாய் குகனே" என்ற கந்தரநுபூதி நிறைவு பெறுகின்றது.

"நெஞ்சக்கனகல்"லை முருகன், குமரன், குகனென்று மொழிந்து உருகும்படி செய்து அவனை அடையச்செய்கின்ற கந்தரநுபூதி ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு நூலே எழுதலாம். இவ்வழகிய அநுபூதி நூலைப்பாடி முருகனையடைய நமக்கு வழிகாட்டிய அருணகிரிப்பெருமான் திருவடி வணங்கி அவரது அருளால் முருகனது அருள்பெற்று உய்வோமாக.

அருணகிரிநாதர் திருவடிகளே சரணம்.

---

*(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி....*

| | | |
|---|---|---|
| இராசநாயகம் பிரதீப் | கரணவாய் மத்தி | 1000. 00 |
| முரளி கணபதிப்பிள்ளை | மீசாலை மேற்கு | 1000. 00 |
| இரா. சுந்தரலிங்கம் முன்னாள் கல்விப்பணிப்பாளர் | | 5000. 00 |
| திரு பாலசுப்பிரமணியம் | கனடா | 29500. 00 |
| P.T. பாலச்சந்திரன் (வல்வெட்டித்துறை) | அவுஸ்திரேலியா | 8000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆத்தியடி | பருத்தித்துறை | 3000. 00 |
| பாலசுந்தரம் நவமணியம்மா | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| தி. சந்திரன் முகாந்திரம் வீதி | மல்லாகம் | 5000. 00 |
| S. சறோஜினிதேவி இளை. அதிபர் | தொண்டைமானாறு | 4000. 00 |
| செந்தூரன் கபிலன் விஷ்ணு பவனம் | மானிப்பாய் | 1500. 00 |
| இரத்தினம் பரமலிங்கம் கரந்தன் | நீர்வேலி | 10000. 00 |
| த. கணேசமூர்த்தி குடும்பம் இ. வங்கி | யாழ்ப்பாணம் | 6000. 00 |
| துர்க்கா தேவஸ்தானம் | தெல்லிப்பளை | 10000. 00 |
| வேணி ஸ்ரோர்ஸ் மூலம் கேமாவதி ரவிராஜ் | லண்டன் | 15000. 00 |
| A. சுரேந்திரன் | சிறுப்பிட்டி தெற்கு | 2000. 00 |
| திருமதி ஏ. கந்தசாமி | அச்சுவேலி தெற்கு | 500. 00 |
| இ. தங்கவேல் கேம்பிறிச் கல்வி நிறுவனம் | நவிண்டில் | 2000. 00 |
| நா. சின்னப்பு நாவலடி | உடுப்பிட்டி | 5000. 00 |
| திரு இராமலிங்கம் குடும்பம் | சுவிஸ் | 17000. 00 |
| திரு லோகநாதன் குடும்பம் | கரவெட்டி மேற்கு | 1000. 00 |
| சி. கதிர்காமநாதன் | அவுஸ்திரேலியா (நவிண்டில்) | 2000. 00 |
| திருமதி அ. சாவித்திரி தும்பளை | பருத்தித்துறை | 1000. 00 |
| செல்லத்துரை அரியானந்தம் வன்னியசிங்கம் | வீதி தாவடி வடக்கு | 3000. 00 |
| சி. மதன் | குப்பிளான் வடக்கு | 1000. 00 |
| சி. நடேசமூர்த்தி மூலம் ந. பிரசாத் | அச்சுவேலி | 6000. 00 |

(தொடரும்...

**உறுதியின்றிச் செய்யப்படும் வழிபாடுகள் போலியாகவே முடியும்.**

உ

(தொடர்ச்சி....

# வாரியார் சுவாமிகள் அருளிய ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகள் புராணம்

**வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்.**

"ஆறுமுகத்தண்ணலின் எண்ணப்படியே எல்லாம் நடந்தது. இந்த நிலை என் உள்ளக் கருத்துக்கும் ஒத்ததே. இந்தத்தோற்றம் தெய்வம் தந்தது. இந்த உடலுடன் இருந்து இசைக்கும் பாடல்களுக்கும் இறைவன் செவிமடுப்பான். பேரறிவுப் பிழம்பான முருகனை விரும்பி வாழுங்கள்! அவனது திருவடியை உபாசித்து வாருங்கள். சம்பந்தாண்டானை எவ்வித ஊறும் விளைவிக்காமல் விட்டுவிடுங்கள். அறுமுகச்செல்வன் நிச்சயம் அனைவருக்கும் அனுக்கிரகம் செய்வான்" எனக் கூறிய அருணகிரிக்கிளி கோபுரத்திலிருந்து நீங்கி விரைந்து பறந்து வான்வழி சென்று மறைந்தது. (வல்லாளன் கோபுரத்து உச்சியிலே அலகினில் பாரிஜாத மலருடன் பச்சை வண்ணக்கிளி ஒன்று வீற்றிருப்பதை இன்றும் காணலாம்) மன்னனும் மக்களும் கிளியை வணங்கி இனிதே இருந்தனர். சம்பந்தாண்டான் அங்கிருந்து ஓடி மறைந்தான்.

பிரபுடதேவ மன்னன், கடலைப்போன்ற அளவிடமுடியாத பெருமை வாய்ந்த திருப்புகழைப்பாடிய புலவர் கோமான் அருணகிரிநாதரின் திருமேனி புதைக்கப்பட்ட இடத்தில், குளிர் நிழல் பரப்பும் குடை பொருந்திய மண்டபம் ஒன்றை அழகுற அமைத்துப், பரமனைப் போற்றிய வண்ணம் உலகத்தை அறநெறியுடன் பரிபாலித்து வரலானான். (ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத்துக் (கிருத்திகை) கார்த்திகை நட்சத்திரத்தில் குடையைத் தாங்கும் நியதி இன்றளவும் நின்று நிலவச் செய்தான் மன்னவன்)

அங்கே தன்னருகே வந்தமர்ந்த வண்ணக்கிளியைக் கந்தப்பெருமான் கண்டனன். களியுவகை கொண்டனன். "பச்சை வண்ணக்கிளியே! என் அன்பு மகனான அருணகிரிக்கிளியே" என்று அழைத்த வேலவன், "பகர்வதற்கு அரிதான செந்தமிழ்ப் புகழ்மாலையை இயற்றி எம் தோளில் மணம் பொருந்தச் சூட்டினாய். இனிதாக உன்னை நம் புயத்தில் ஏந்திக்கொள்ள எண்ணியே, நின் உடலை ஒழியச்செய்தேன்" என்று கூறிக் கிளியை அழைத்துக் கடம்பு மணக்கும் தன் தோளில் தொத்திக் கொள்ளச் செய்தனன். அழகுமிகு கிளி அனைத்துப் பேற்றையும் பெற்றது.

அண்ணலின் அழகிய புயத்தில் அமர்ந்திட்ட கிளி முருகனை நோக்கி, "என் பணி யாது" என்று பணிந்துகேட்க "எல்லையில்லா நம் புகழை இன்னமும் பாடி வாழ்வாய்" என்று வேற்பரமன் விடை பகர்ந்தான். வண்ணக்கிளி கந்தப்பெருமான் தம் அநுபூதியை, இவ்வுலகம் ஈடேற, தொடக்கமும் முடிவுமாக ஐம்பத்தொரு பாடல்களைப் பாடியது. பாடலைக்கேட்ட பன்னிரு விழியுடைப்பரமன் மகிழ்ந்தான். வள்ளி, தேவசேனை மனம் மகிழ்ந்து பூரித்தனர். கூடியிருந்த கூட்டத்தினர் கும்பிட்டு வாழ்த்தினர். ஏற்றம்மிகு அருணகிரிக்கிளியின் தவப்பெருமைக்கு எல்லையே இல்லாது போயிற்று. மனிதர்களில் மகத்துவம் மிகுந்த முனிவர்களுக்குள்ளே யாரும் பெறமுடியாத

பேற்றினைப் பெற்ற சங்கத்தமிழ்ச் சதுரராம் அருணகிரிநாதர் வெற்றிக்குமரவேளாம் அழகனின் திருத்தோளில் மகிழ்வுடன் இன்றும் இனிது வாழ்கின்றார்.

திருமுகம் வாழ்க! திருத்தோள்கள் வாழ்க! திருவடித் தாமரை வாழ்க! வள்ளி தேவயானை வாழ்க! சேவலும் மயிலும் வேலும் வாழ்க வாழ்கவே!!!

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே!

(முற்றும்)

***(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி....***

| | | |
|---|---|---|
| ராகினி கதிர்காமத்தம்பி | கொற்றாவத்தை | 500. 00 |
| அமரர் ஆலாலசுந்தரம் நினைவாக செல்லம்மா சந்தைவீதி | ஆவரங்கால் | 10000. 00 |
| அ. ஆறுமுகம் | இமையாணன் வடக்கு | 1500. 00 |
| ம. சிறிகாந்தன் | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| Dr. G. பவானி மகப்பேற்று நிபுணர் | யாழ்ப்பாணம் | 30000. 00 |
| S. சுகிர்தலிங்கம் குடும்பம் | பருத்தித்துறை | 1500. 00 |
| பாமா திருவேந்திரன் சால்பன் றோட் | வெள்ளவத்தை | 5000. 00 |
| S. தர்மலிங்கம் மூலம் தனபாலசிங்கம் கமலபதி | சித்தன்கேணி | 10000. 00 |
| த. வேலுச்சாமி | இன்பர்சிட்டி | 2000. 00 |
| த. காசிநாதன் | சிறுப்பிட்டி தெற்கு | 1500. 00 |
| க. மணிபவன் அராலி தெற்கு | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| செல்வி அ. கந்தையா இளை அதிபர் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சு. அன்னம்மா கோவிற்கடவை | துன்னாலை | 1000. 00 |
| திரு செல்லையா | ஊரெழு கிழக்கு | 500. 00 |
| திருமதி பா. தங்கராசா இளை ஆசிரியர் | நீர்வேலி | 10000. 00 |
| நீர்வை கு. தியாகராஜசர்மா (நீர்வை மணிஐயர்) | | 3000. 00 |
| தி. சிவசோதிப்பிள்ளை இடைக்காடு | அச்சுவேலி | 1000. 00 |
| S. நடேசன் மூலம் வரதீசன் | கொழும்பு | 20000. 00 |
| சு. ஜீவசங்கரசர்மா | தாவடி | 500. 00 |
| பொன்னம்பலம் நடராஜா | வரணி (கனடா) | 3500. 00 |
| கோபிகண்ணா வர்த்தக வங்கி | திருமலை | 5000. 00 |
| இ. இலட்சுமணன் | அச்செழு | 1000. 00 |
| மதுரா நகைமாடம் கஸ்தூரியார் வீதி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | கோப்பாய் | 5000. 00 |
| ச. சண்முகவடிவேல் | ஆவரங்கால் | 1000. 00 |
| சுந்தரலிங்கம் செல்வம் | சிவலிங்கப்புளியடி | 5000. 00 |

(தொடரும்...

உ

# மரணபயம் நீக்கவல்லது தெய்வீக இறைநாம பஜனை ஒன்றே

**திரு சி.சி. வரதராசா அவர்கள்.**

எல்லாம் வல்ல இறைவனுக்கு பல நாமங்கள் உண்டு. அந்தத் தெய்வீக நாமங்களை இடையறாது உச்சரிப்பதன்மூலம் நாம் உண்மையில் நற்கதி அடையலாம். இறைநாம தெய்வீக பஜனை - கூட்டுப்பிரார்த்தனை செய்வதன் பயன் ஆன்ம ஈடேற்றமே. மலபந்தப்பட்டு உழலும் உயிரானது பக்குவமடைந்து வீடுபேற்றை அடைவதற்கு தெய்வீக நாமபஜனையே உண்மையில் வழிகோலவல்லது.

"நாமஞ் சொல்லுவோம், நமனை வெல்லுவோம்" என்பது கொழும்புத்துறையூர் ஸ்ரீ சிவயோகர் சுவாமிகள் நல்வாக்கு. இறைநாம தெய்வீக பஜனை மக்களுக்கு இன்பந்தரவல்லது. நமக்கு வழிகாட்டியாகத் திகழும் நாயன்மார்களும்கூட இறைவன் நாமத்தைத் தினசரி உச்சரித்தே அற்புதங்கள் பலவற்றைச் செய்தனர்.

"தமிழோடிசைபாடல் மறந்தறியேன், உன் நாமம் என்நாவில் மறந்தறியேன்" என்ற திருநாவுக்கரசரின் வாக்கு இங்கு நோக்கத்தக்கது.

நாவினுக்கருங்கலமாக விளங்கும் நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தை இடையறாது ஓதி நாம் உய்திபெறலாம். நாம் எல்லோருமாகச் சேர்ந்து இறைவன் நாமத்தை பஜனை செய்தால் நிச்சயம் நிம்மதி, மன அமைதி கிடைக்கும். இறைவன் அருள் கிட்டும். ஆதிபராசக்தியான அன்னை பார்வதிதேவிகூட வாமபாகம் பெறுவதற்கு இறைநாம பஜனையையே வழியாகக்கொண்டு உய்திபெற்றாள் என்பது வரலாறு.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்று நாவுக்கரசர் கூறியது போல், "மரணப்பிரமாதம் நமக்கில்லையே" என்று அருணகிரிநாதர் கூறியதுபோல் இறைவனின் அடியவர்களுக்கு யமபயம் நீங்கிவிடும்.

நெஞ்சக்கனகல்லு நெகிழ்ந்துருக வேண்டுமானால், வாயே வாழ்த்துகண்டாய் என்று, அவன் நாமத்தை உச்சரிப்பதைத் தவிரவேறுவழியில்லை. அவனருளாலே அவன்தாள் வணங்கி சிவனருள்வாரிதியில் திளைக்க வேண்டுமாயின் தினசரி இறை நாம பஜனையே வழியாகும்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் போன்றோர் தம் அனுபவ வாயிலாகக் கண்ட உண்மை- இறைநாமபஜனையே கடவுளை அடையும் பாலம்- என்பதாகும். ஆன்மாவானது லயப்பட்டு மன ஒருமைப்பாட்டுடன் இறைவன் வசப்படுவது இறைநாம பஜனையின்மூலந்தான்.

எமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் நாம் ஒன்று சேர்ந்து பஜனை- கூட்டுப்பிரார்த்தனைகளில் ஈடுபடுவதன்மூலம் இறைசக்தியை உள்ளத்தில் வேரூன்றச்செய்து மனப்பயம் நீங்கிச் சந்தோஷமான நல்வாழ்வு வாழ வழிவகுக்கின்றது இறைவன் நாமத்தை உள்ளன்போடு- புனிதமாக தினசரி மூன்றுநேரமும் (காலை- மத்தியானம்- மாலை) உச்சரியுங்கள். சகலரது முகத்திலும் தெய்வீகம், ஒளி, இலட்சுமி

காட்சி தரும். நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும், படுக்கையிலும் என்றும் உள்ளன்போடு நினையுங்கள், தியானியுங்கள் சகலதும் நல்லபடியாக நடக்கும். நீங்கள் அந்த இன்பத்தை நிச்சயம் அனுபவிப்பீர்கள்.

எமக்கு மக்களைப் போற்றித், துதித்து வாழ்த்த வாயைத்தந்தது இறைவன் அவ்வாயால் மக்களை இன்சொல்லால், புனித சிரித்த முகத்துடன் போற்றி வாழ்த்த வேண்டும். அவ்வாயால் அவச்சத்தம் போடக்கூடாது. சிவச்சத்தமே இசைக்கப்பட வேண்டும். சாதனை செய்து பாருங்கள். உங்கள் வாழ்க்கையில் தெய்வீகம் வேரூண்றிச் சகலரும் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேருண்றி கல்வி- செல்வத்தில் சிறந்து நல்ல சந்தோஷமான வாழ்க்கை வாழவழிவகுக்கும் என்பது உண்மை.

## வாழையடி வாழையென.....

**இராகம்: கர்நாடகதேவகாந்தாரம் தாளம்: ஆதி**

### எடுப்பு

எப்படி எடுத்துரைப்பேன் - முருகன்
குருவடிவாய் இங்கு குறைகள் களைவதனை

### தொடுப்பு

ஆட்டிடையனாக வந்து அருட்கதிர்காமருக்குக்
காட்டிய பூசைமுறை கச்சிதமாய் நடப்பதனை
(எப்படி...

தொன்மை மிகு தென்னந்தோப்புதனில் ஆங்கோர்
அன்னம் வழங்கும் நல்ல ஆனந்த ஆச்சிரமம்
முன்னம் அமைத்த மயில் வாகனனாரைத் தந்த
கந்தக் கடவுளிவன் கருணையினை உமக்கு
(எப்படி...

புற்றுநோயால் வருந்திப் பூவரச மிலைச்சாற்றால்
முற்றிய நோய்தீர்த்து முருகேசுச் சுவாமியாரை
பற்றுடன் பணியாற்றிப் பலரது பிணிபோக்கி
வற்றா இவ்வாச்சிரமம் வழிகோல வைத்ததனை
(எப்படி...

அன்னப் பணியூடு அரிவையர், அங்கவீனர்,
முன்பள்ளிச்சிறார், முதியோர்கள், முத்தான ஞானச்சுடர்
மோகனதாஸுடன் மூத்த மகனுஞ்சேர
முருகனின் திருவருள் முழுமையாய்ப் பொழிவதனை
(எப்படி...

*-கவிமணி அன்னைதாஸன்-*

**வைராக்கியம் வலிமைபெறும் அளவு மனிதன் அமைதியை அனுபவிக்கிறான்.**

உ

(தொடர்ச்சி....

# ஈழத்துச் சித்தர்களுள் குடைச்சாமியார்

திரு இ. சாந்தகுமார் அவர்கள்.

இவர் இறைவனது அழகிய கோலத்தைத் தன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்து ஆனந்த வெள்ளத்தில் அழுந்தி இடையறா இறையன்புடனும் குறைவிலா நிறைவுடனும் வாழ்ந்து காட்டியவர் குடைச்சுவாமிகள். இதன் நிலையினை ஒளவையார்

"கண்ணாடி தன்னில் ஒளியோ உடம்பதனுள்
ஒண்ணாடி நின்ற ஒளி" எனக் கூறுகிறார்.

இத்தகைய நிலையினைத் திருமந்திரம் எடுத்துக் கூறுகின்றது.

"தன்னை அறியத் தனக் கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்....."

"ஏழு ஊர் சுற்றுபவர்" என்று ஒரு பட்டம் உண்டு. குடைச்சாமியைப் புரிந்தவர் சிலர் புரியாதவர் பலர். ஒன்றும் தெரியாதவர் போல் இருந்தால் - புரிந்தவர் போற்றினார். அவர் நடந்த பாதைதான் பாதை இல்லாத பாதை எல்லாம்வல்ல இறைவனோடு கலக்கும் பாதை. இதைத் தடம்பிடித்து நடப்பவர் விவேகிகள் செம்மைநெறி கண்டவர்கள் கந்தையன் பாதை கட்டில்லாத பாதை நித்திய சாந்தியும்தரும் பாதை. தொடர்பவர் தொடரட்டும். முடியாதவர் விட்டுத் தள்ளட்டும்.

குடைச்சுவாமிகள் பின் நடக்கப் போகின்றவற்றை முன்னறிவிக்கும் ஆற்றல் படைத்த ஓர் மகாசித்தர். இவருடைய பார்வை இறை அருட்பார்வையாக இருக்கும். யாரும் கூப்பிட்டாலோ சந்திக்க வந்தாலோ போகவும் மாட்டார். அவர்கள் நினைத்துவந்தால் அவர் மறைந்து விடுவார். திடீர் என்றுபோய் ஒரு வீட்டில் கூறுவார் உனது வீட்டில் அவல ஒலி கேட்கும் என்று அது அவ்வாறே நடக்கும். சிலவற்றினைச் சொல்லாது தனது செயல்கள் மூலம் அவர்களை விளங்க வைத்தார். பல அற்புதச்செயல்களைச் செய்தார். இவருடைய அருட்பார்வையே கிடைத்தற்கரிய பேறாகும். ஏழைகளோடு தானும் ஒரு ஏழையாக இருந்து அவர்களுக்கு வரும் துன்பங்களை எல்லாம் போக்கிக்கொண்டு வாழ்ந்தார்.

கமக்காரன் ஒருவனுக்குச் சுவாமிகளிடம் திருவடி தீட்சை பெறவேண்டுமென்று நீண்டகால விருப்பம். சுவாமி அவரைத் தேடிச்சென்று

"எம்பெருமான் சொல்லுகிறார் உங்களுக்குத்
திருவடி தீட்சை செய்யும்படி" என்று கூறித் திருவடி தீட்சை செய்தார். இன்னொரு அன்பருக்குச் சொப்பனத்திலேயே திருவடிதீட்சை அளித்தார். சுவாமி தினமும் பலாலி வீதிவழிநடந்து யாழ்ப்பாணம் போகும்போது கந்தர்மடம் சந்தியிலே போய் அப்பாலே போகாமல் யாழ்ப்பாண நகரை நோக்கி வெக்கையாய் இருக்கு என்றார். அதன்பின் யாழ்ப்பாணம் நூலகம் எரியூட்டப்பட்டது என்று கூறப்படுகின்றது. இதன்மூலமும் பின்னர் நடக்கப்போகும் நிகழ்வினை அநுபூதி நிலையில் நின்று அறிந்து தெரிவிக்கின்ற நிலையினைக் காணுகின்றோம்.

தந்தை பிள்ளைக்கு நல்கத் தக்கது கல்விச்செல்வமே ஆகும்.

மனத்தில் அழுக்குள்ளோரைக் கண்டால் சுவாமிகள் குடையால் தனது முகத்தை மறைத்துக் கொண்டு ஓடி மறைவர். இவர் போய் தேநீர்க்கடையில் தேநீர் குடித்தால் அந்தக் கடையின் வியாபாரம் நல்லாய் நடக்கும் என்றும் கூறுகிறார்கள். சுவாமிகளுடன் நன்கு பழகியவர்கள் நீண்ட நாட்கள் சுவாமிகளைக் காணவில்லையே என நினைக்கவே சுவாமிகள் அவர்களைப் போய்க்கண்டு கதைப்பார். இது அவருடைய அநுபூதி நிலையின் உச்சக்கட்ட நிலையைக் காட்டுகின்றது.

குடைச்சுவாமிகள் பல சுவாமிகளினால் போற்றப்பட்டவர். நடக்கும் செயலில் எல்லாம் நடக்கும்" என்பது சுவாமிகளின் ஆப்த வாக்கியம். அரும்பணி செய்து வந்தார். மக்களிடம் சொல்லிச் செய்யமுடியாதவற்றினை மக்கள் விளங்கிக் கொள்ளத் தகுந்த உதாரணமூலம் விளக்கினார். இவர் மடியில் ஏதோ எடுத்து உள்ளங்கையில் கசக்கிப்போடுவார் வாயில். ஏதோ இலைதான் அது என அறிந்தோர் கூறுகின்றனர்.

ஓங்கார ஆனந்தத்தை உயிரிற் பாய்ச்சிய உத்தமஞானி குடைச்சுவாமிகள். இவர் தனிவழிப்பயணம் தக்கோராற் போற்றப்படுகிறது. எனின் அவர்களின் அவதாரம் ஒரு வாழ்வியல் தத்துவம் எனலாம். இவர் பேச்சினாலும், ஏச்சினாலும், குடையடியாலும், திருவடி தீட்சையாலும் அருள் நோக்கினாலும் அடியார்க்கு வாழ்வளித்தார். சுவாமிகள் மனிதனாகப் பிறந்து இறைவனாக அருள் பாலிப்பவர். பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் இவரைக் கண்டால் அன்று ஏதோ நல்ல கருமம் நடக்கும். இவர் எப்பொழுது வருவார் நேரடியாக அருள் தருவார் என்று மனத்தில் ஒரு ஆதங்கம் உண்டு. இதனை நாம் பின்வருமாறு சிந்திக்கலாம்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே - நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே - அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று"

என்ற கருத்தானது குடையிற் சுவாமியினால் வலிமைபெறுகின்றது.

சுவாமிகள் பிங்கள வருடம் மாசி 2ஆம் திகதி (14-02-1978) செவ்வாய்க்கிழமை கார்த்திகை நட்சத்திரத்தன்று மகாசமாதி எய்தினார். அன்று முழுமையும் "அருள் பார் பாஞ்சசன்யம்" என்று சொல்லிக்கொண்டே இருந்தார். இந்தத் தூலத்துடன் இன்னும் ஆறு மணித்தியாலங்கள்தான் இருப்பேன் என்று வடிவேற் சுவாமிக்குக் கூறிய வண்ணம் சமாதிநிலை கூடினார். வடிவேற்சுவாமி இவருடைய சீடன் ஆவார். இவருடைய சமாதி கோண்டாவில் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் உள்ளது. இவை கனவில் தோன்றிக் கூறியபடி 16-02-1978ஆம் திகதி சமாதி வைக்கப்பட்டது. (முற்றும்)

---

தண்ணீர் வைக்கப்படும் பாத்திரத்தின் அடியில் மிகச்சிறிய ஓட்டை இருந்தாலும், பாத்திரத்திலுள்ள தண்ணீர் முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே போய்விடும்.

அதுபோல், சாதகனிடம் உலகப்பற்று சிறிது இருந்தாலும் அவனுடைய ஆன்மீக முயற்சிகள் அனைத்தும் வீணாகிவிடும்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

**தெரிந்தோ தெரியாமலோ செய்த சிவபுண்ணியம் நிச்சயமாகப் பயனைத்தரும்.**

உ

# அன்னதானம் அல்லது மகேஸ்வர பூசையின் பெருமை

**திரு சி. நவரத்தினம் அவர்கள்.**

அன்னதானம் என்றால் என்ன? அதன் பெருமைகள், சிறப்புக்கள், பலாபலன்கள் பற்றிய உண்மைகளை நாம் பெரியபுராணத்தின்மூலம் கற்று உணர்ந்துள்ளோம். ஆனால் அதன் யதார்த்த நிலையைச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளாந்தம் நடைபெற்று வருகின்ற அன்னதான நிகழ்வுகள்மூலம் நாம் நேரடியாகக் காண்கின்றோம். இந்நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுவதற்கு அன்னதானக்கந்தன் என அழைக்கப்படும் சந்நிதி முருகப்பெருமானே காரணர் என ஆச்சிரம சுவாமிகள் அடிக்கடி கூறுவதை நாம் கேட்டுள்ளோம்.

வித்தியாதானம், அன்னதானம், சொர்ணதானம், பூதானம், கோதானம், வஸ்திர தானம், கன்னிகாதானம் முதலான தானங்கள்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இவை எல்லாவற்றிலும் மிகமிகச் சிறந்ததானம் அன்னதானமேயாகும். மேற்கூறிய தானங்களுள் அன்னதானம் தவிர்ந்த ஏனைய தானங்களையும் செய்யும்போது இவற்றை ஏற்பவர்களுடைய மனம் போதும் போதும் என்றோ அல்லது திருப்தியடையுமென்றோ நாம் எதிர்பார்க்கமுடியாது. ஆனால், அன்னதானத்தை ஏற்பவர்கள் மட்டும்தான் மன நிறைவோடு போதும் போதும் எனக்கூறுவர். அன்னதானம் பெரிய அளவிற்செய்ய வேண்டுமென்பது கட்டாயமன்று. எமது இல்லம் நோக்கிப் பசியுடன் வருகின்ற ஓர் ஏழைக்கு ஒருபிடி அன்னம் கொடுப்பதே போதுமானதாகும்.

இந்த அன்னதானத்தின் பெருமைபற்றி மகாபாரதத்தில் வரும் கதாபாத்திரமாகிய கர்னனது மரணத்தின்பின் நிகழ்ந்த ஒரு நிகழ்வின்மூலம் அறிந்துகொள்வோம். கர்னன் குந்தியின் மூத்த மைந்தன். அவன் தன்நாட்டை நீதியாகவும் நேர்மையாகவும் ஆண்டவன்; செஞ்சோற்றுக் கடனுக்காகத் தன் இன்னுயிரையே நீத்தவன். தன் வாழ்நாளில் தன்னிடம் யாசிக்க வருவோர்க்கு இல்லையென்னாது வாரிவாரி வழங்கிய வள்ளலவன். இதனால் அவன் கொடைக்குக் கர்னன் என்று அழைக்கப்பட்டான். பாரதப்போர் நடைபெற்றபொழுது கர்னன் போர்க்களத்திற் குற்றுயிராய்க் கிடந்தவேளையிலும்கூடப் பிராமண வேடத்தில் அவனிடம் யாசிக்க வந்த கிருஸ்ணருக்குத் தனது தர்மம் அனைத்தையும் தானம் செய்த பெருமைக்குரியவன்.

கர்னன் இறந்தபின்பு தேவலோகத்திற்குச் சென்றுகொண்டிருந்தான். அவனுக்கு ஏற்பட்ட யானைப்பசியினால் அவனால் தொடர்ந்து தேவலோகத்திற்குச் செல்ல முடியாமல் இடைநடுவில் நின்றுவிட்டான். அவ்வேளையில் நாரதமுனிவர் அவ்வழியால் வந்தார், அவனைக் கண்டார். "கர்னா தேவலோகம் போகின்றாயா போய்வா" என்று கூறிவிட்டு அப்பாற் சென்றார். கர்னன் பசிமயக்கத்தினால் அவ்விடத்திலேயே மயக்கமடைந்து வீழ்ந்துவிட்டான். நாரதமுனிவர் மீண்டும் அவ்வழியால் வந்தார். "கர்னா நீ இன்னும் தேவலோகம் போய்ச்சேராமல் ஏன் இவ்விடத்திற் கிடக்கின்றாய்" என்று கேட்டார். அதற்குக் கர்னன் "சுவாமி எனக்கு யானைப்பசி, மயக்கமாக

இருக்கின்றது. யாரும் உணவு தருவாரும் இல்லை" என்று கூறினான். "நீதான் கொடை வள்ளலாயிற்றே, உனக்கு ஏன் யாரும் உணவுதர முன்வரவில்லை" என்று கேட்டதன்பின் சற்றுநேரம் யோசித்துவிட்டு "கர்ணா உன் வாழ்நாளில் நீ யாருக்காவது அன்னதானம் செய்திருக்கின்றாயா? என்று கேட்டார். இல்லை, சுவாமி ஒருமுறை நான் ஒரு பாதையால் சென்றுகொண்டிருந்தபோது ஒருவன் என்னிடம் வந்து "ஐயா, இங்கு எங்கேயாவது அன்னசத்திரம் இருக்கின்றதா" என்று வினாவினான். கர்னனும் தன் சுட்டுவிரலால் ஒரு திசையைக்காட்டி அங்கே போய்ப்பாருங்கள் உணவுகிடைக்குமெனக் கூறினான்.

சிறிது நேரத்தின்பின் நாரதர் கர்னனின் சுட்டுவிரலை அவனது நாக்கில் வைக்கும்படி கூறினார். கர்னனும் அவ்வாறே செய்தான் உடனே அவனது வயிறு நிறைந்து பசியும் நீங்கியது. தன் சுட்டுவிரலை நாவில் வைத்ததும் பசிநீங்கிவிட்டதே இதற்குக் காரணம் என்னவென்று கேட்டான் நாரதரை. அந்த ஏழை வழிப்போக்கனின் பசிப்பிணியைப்போக்குவதற்குக் காரணமாக இருந்தது உன் சுட்டுவிரல்தான். அதனாற்றான் உன் சுட்டுவிரலை உன் நாவில் வைத்ததும் உன் பசிப்பிணி நீங்கியது" என்று நாரதமுனிவர் கூறினார். அப்பொழுதுதான் கர்னன் அன்னதானத்தின் பெருமையை உணர்ந்தான். தன்வாழ்நாளில் தான் செய்த கொடைகள் தன்பசியைத் தீர்க்க உதவவில்லை என்று கவலைப்பட்டுக்கொண்டு சுவர்க்கலோகம் நோக்கிச் சென்றான்.

எனவே எமது பொன்னான வாழ்வை வீணாக்காமல் எம்மாலான அன்னதானப் பணியையோ, அல்லது எம்மாலான அன்னதானப்பணிக்குரிய தொண்டையோ செய்வது எமது கடமையென உறுதிபூண்போமாக.

## ஆன்மீக சாதனைக்குத் தடைகள்

1. எண்ணெய் தடவிய காகிதத்தின்மீது எழுத முடியாது. அதுபோல, பெண், பொன் ஆசைகள் என்னும் எண்ணெயினால் கெடுக்கப்பட்ட மனம் ஆன்மீக சாதனைக்குத் தகுதியாகாது. ஆனால், அந்த எண்ணெய்க்காகிதத்தின்மீது சுண்ணாம்பைத் தடவினால் எழுத முடியும். அதுபோல் மனத்தின்மீது தியாகம் என்ற சுண்ணாம்பைத் தடவினால் அது ஆன்மீக சாதனைகள் செய்வதற்குத் தகுதி ஆகிவிடுகிறது.

2. வேறொரு புதிய மிருகம் பசுக்கூட்டத்திற்குள் நுழைந்தால், பசுக்களெல்லாம் ஒன்று சேர்ந்து எதிர்த்து அதை ஓட்டிவிடும். ஆனால் வந்த பிராணி ஒரு பசுவாகவே இருந்தால், மற்றப் பசுக்களும் அதுவும் ஒன்றுக்கு ஒன்று நக்கிக்கொடுத்து நட்பாகி விடுகின்றன.

அதுபோல, பக்தன் ஒருவன் மற்றொரு பக்தனைச் சந்தித்தால் அவர்கள் ஆன்மீக விஷயங்களைப்பற்றிப்பேசி, சந்திப்பால் ஏற்பட்ட ஆனந்தத்தால் பிரிவதற்கே வருத்தப்படுகிறார்கள்.

ஆனால் பக்தன் ஒருவன், ஏளனம் செய்து திரியும் ஒருவனோடு நட்புரிமை கொண்டாட விரும்புவதில்லை.

**பிறரிடம் குற்றம் காண்பதால் உன் மனம் மாசு அடையும்.**

உ
(தொடர்ச்சி....

# தவமுனிவனின் தமிழ் மந்திரம்

**சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்.**

இறைவனைப் போல ஆன்மாக்களும் அநாதியானவை எனக்குறிப்பிடும் திருமந்திரம் ஆன்மாக்களை மூன்றாகப் பிரித்து மூவகைச் சீவவர்க்கம் எனக்குறிப்பிடுகிறது. மூவகைச் சீவவர்க்கத்தினுடைய அமைப்பு, அதனைத் தடுத்திருக்கின்ற தடைகளின் ஏற்றத்தாழ்வு அவற்றை நீக்கிய அந்த ஆருயிர்கள் அடையும் பயன் என்பனபற்றியெல்லாம் மூவகைச்சீவவர்க்கம் என்ற பகுதியில் திருமந்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது.

சைவசித்தாந்த சாத்திரம் பதி, பசு, பாசம் ஆகிய மூன்றுபொருட்களைப் பற்றிக்கூறும். இவற்றுள் பாசம் ஆன்மாஈடேற்றத்துக்குத் தடையாக உள்ளது ஆணவம், கன்மம், மாயை என்பன அவை ஆகும். மூவகை ஆருயிர்வர்க்கத்திலே மிக உயர்ந்த நிலையிலே விஞ்ஞானகலர் கூறப்படுகிறார்கள். ஆணவமலம் ஒன்று மட்டுமே உடையவர்கள் விஞ்ஞானகலர். ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களால் பீடிக்கப்பட்டவர்கள் பிரளயாகலர். ஆணவமலத்தால் மட்டும் பீடிக்கப்பட்டவர்கள் விஞ்ஞானகலர். மூவகைச் சீவவர்க்கத்தினுள்ளே ஆணவமலம் ஒன்றுமட்டுமே உடைய விஞ்ஞானகலருக்கு ஞானபரிபாகம் முதிரமுதிர திருவருளும் உதவ அதனாலே அவர்கள் சுத்தர்கள் ஆகிச் சிவமே ஆகும் தன்மையைப் பெறுகிறார்கள். ஆணவம், கன்மம் ஆகிய இருமலங்களையுடைய பிரளயாகலருக்கு இறைவன் கரசரணாதி அவயவங்கள் உடையவராகக் காட்சி அளித்து அருள்புரிகின்றார். அதனால் அவர்களுடைய மலமும் கன்மமும் தொலையும். சகலருக்கு மூன்று தடைகள் உண்டு. இவற்றில் இயற்கையான தடை ஆணவம். இறைவன் கூட்டும் தடை மாயை, நாமாகத் தேடியும், குவித்தும், திளைத்தும் வைத்திருப்பது கன்மம். இம்மூன்று தடைகளால் கட்டுண்டு இருப்பதால் சகலான்மாக்கள் என்ற பெயரைப் பெறுகின்றோம்.

இறைவன் குருவாக வந்து அடித்து, திருத்தி, உபதேசித்து, நூலாலும், பார்வையாலும், தீண்டுதலாலும் உணர்த்த உணர்கின்ற ஆன்மக் கூட்டங்களைச் சகலர் என்றும், இறைவன் முன்நின்று உணர்த்த உணர்கின்ற ஆன்மாக்களைப் பிரளயாகலர் என்றும் இறைவன் உள்நின்று உணர்த்த உணரும் ஆன்மாக்கூட்டங்களை விஞ்ஞானகலர் என்றும் மூவகை ஆருயிர்வர்க்கமாகத் திருமந்திரம் காட்டுகிறது.

விஞ்ஞானகலர் எடுத்த பிறவியில் ஞானம் பெற்றுச் சிவப்பேறு அடைவர். பிரளயாகலர் சில பிறப்பில் ஞானம் எய்திச் சிவப்பேற்றை அடைவர். சகலர் பல பிறவியிலே ஞானம் உற்றுச் சிவப்பேற்றை அடைவர். மூவகை ஆன்மாக்களும் இறுதியில் முத்திப்பேற்றினை அடைவார்கள்.

விஞ்ஞான கன்மத்தால் மெய் சுகம் கூடி
அஞ்ஞான கன்மத்தினால் சுவர் யோணிபுக்கு
எஞ்ஞான மெய் தீண்டியே இடையிட்டுப் போய்

ஒன்றினைச் செய்யும்முன் அதன் பொருளை உணர்ந்து இருக்கவேண்டும்.

மெய்ஞ்ஞானர் ஆகிச் சிவம் மேவல் உண்மையே

பிரபஞ்சத்திலே மானுடர்களாகப் பிறந்த நாம் அனைவரும் உயிர் என்றும் உடம்பு என்றும் இரு பொருள்களைப் பெற்றிருக்கின்றோம். நாம் உயிருக்கும் ஆக்கம் தேடவேண்டும். உடலுக்கும் ஆக்கம் தேடவேண்டும். அருள் உயிரைப்பற்றிய செய்தி, பொருள் உடலைப்பற்றிய செய்தி, உலகியல் வாழ்க்கைக்குப் பொருள் அவசியம். இறையருளைப் பெறுவதற்கு அருள் அவசியம். பொருள் அருள் ஆகிய இரண்டும் மூன்றெழுத்து வார்த்தைகள் பொருட்செல்வம் இல்லாதவர்க்கு இவ்வுலக இன்பம் இல்லாததுபோல அருட்செல்வம் இல்லாதவர்க்கு வீட்டுலக இன்பம் இல்லை என்பதை

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு

எனத் திருக்குறள் தெளிவுபடுத்துகிறது.

சிவஞானியர்கள் எல்லாம் சிவன்செயல் என்று தம்மை மறந்திருப்பார்கள். மானிடர்களாகிய நாம் அனைவரும் கருவிகள், இறைவனே கர்த்தா, அவன் ஆணைப்படியே உலகில் எல்லாம் நடக்கும். போகாதிவஸ்துக்கள் எல்லாம் வரவேண்டியிருந்தால் வந்தே சேரும் அவையெல்லாம் போகுங்காலத்தில் வந்த சுவடு தெரியாமல் போயே தீரும். இதேபோல விட்டொழிக்கப்பட வேண்டிய காரியங்கள் யாவும் தாமேபோகும். மேற்கொள்ளவேண்டிய யாவும் வந்து பொருந்தியே இருக்கும். இவற்றையெல்லாம் இறைவன் தான் முன்னிருந்து வெளிக்காட்டிக் கிருபைபாலித்து அருள் செய்கிறான் என்ற உண்மையைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

ஆவன ஆவ அழிவன
போன போவ புகுவ புகுவன
காவலன் போ்நந்திக் காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இளங்கிளையோனே.

"பாத்திரம் அறிந்து பிச்சையிடு" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி ஆகும். ஞான விசயங்களை உணர்கின்ற பக்குவம் உள்ளவர்களுக்கே அவற்றை வெளிப்படுத்த வேண்டும். ஒழுக்கமும் நோன்பும் இல்லாதவர்களுக்கு ஒன்றை ஈவது அழகான வறட்டுப் பசுவிற்கு குனிந்து நிமிர்ந்து பசுந்தழைகளை இட்டுப் பாலைக்கறந்து குடிப்பது போலாகும். அதுவேயன்றிப் பருவம் தவறிச் செய்த பயிரையும் போன்று பயன் அற்றதுமாகும்.

கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்
பாலைக்கறந்து பருகுவதேயொக்கும்
சீலமும் நோன்பும் இல்லாதவர்க்கீந்தது
காலங் கழிந்த பயிரது ஆகுமே.

பஞ்சமாபாதகங்கள் பொய், கொலை, களவு, கள், காமம் என்பன. காமாதி என்பவை காமம், குரோதம், கோபம், மோகம், மதம், மாச்சரியம் (பொறாமை) என்பனவாகும். ஐம்பெருங்குற்றங்களைச் செய்பவன் நல்லவர்க்குக் கொடுப்பதன் பயனை அறியாது கெடுவான். குற்றம் இல்லாத ஞான குருவிற்கும் தூய பெரியவர்க்கும்,

காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றை நீக்கியவருக்கும் ஈதல் வேண்டும். தகாதார்க்குக் கொடுக்கப்படும் பொருள் தீய வழியிற் சென்று பலர்க்கும் தீங்கு விளைவிக்கும். ஆதலால் அக்குற்றம் பொருளை ஏற்றவரிலும் பார்க்க ஈர்ந்தவரையே சார்ந்துவிடும்.

மற்றவர்க்குத் தீமை செய்வதிலே இன்பம் காண்பவர்கள் பலரை இவ்வுலகில் காணலாம். கொம்புள்ள மிருகத்திற்கு ஐந்து முழமும் குதிரைக்குப் பத்து முழமும், மதங்கொண்ட யானைக்கு ஆயிரம் முழமும் தள்ளிநிற்க வேண்டும் என்று கூறும் நன்நெறிப்பாடல் அதர்மம் செய்ய அஞ்சாத வம்பரைக் கண்டால் அவர்கள் கண்ணில் படாமல் இருக்கவேண்டும் என்பதை

வம்புசெறி தீங்கினரைக் கண்டால் அவர்கண்
தூரத்தே விட்டு நீங்குவதே நல்லநெறி
எனக்குறிப்பிடுகிறது.

கொடிய சொற்களால் மற்றவர் மனதைப் புண்படுத்தும் வம்பர்களை, பிறரை வருத்தும் ஈனச்செயல் செய்பவர்களை, உடலைமட்டும் ஓம்பி வாழும் தேகான்ம வாதிகளை, காம இச்சை கொண்டு அலைபவர்களை, அதர்மமே வடிவாக நிற்கும் மூடர்களை நல்லோர் வாழும் நெறியினை அறியாதவர்களை உயர்ந்த பனைபோல ஏன் படைத்துவிட்டாய் என்று பட்டினத்தார் குறிப்பிடுவதைப் பின்வரும் பாடலில் காணலாம்.

கடுஞ்சொல்லின் வம்பரைக் ஈனரைச்
குண்டரைக் காமுகரைக்
கொடும் பவமே செய்யும் நிர்மூடர்
தம்மைக் குவலயத்துள்
நெடும்பனை போல் வளர்ந்து நல்லோர்
தம் நெறியறியா
இடும்பரை ஏன் வகுத்தாய்
இறைவா கச்சியேகம்பனே

இளநீர் தாகத்தை தீர்க்கிறது. திருமூலர் பேசுகிற தீர்த்தம் ஆன்ம தாகத்தை தீர்ப்பதோடு நம்முடைய மாசுகளை வினைகளையெல்லாம் கழுவுகிறது. ஆன்ம ஞானக் கல்வி இல்லாதவர்கள் தீர்த்தங்களை நாடிப் பள்ளமும் மேடும் பரந்து திரிகிறார்கள்.

உடற் சுத்தத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் புனித நீர் தேவைப்படுவது போன்று அகச் சுத்தத்திற்கும் அக வளர்ச்சிக்கும், அறிவு விளக்கத்திற்கும் ஒருவகையான தீர்த்தம் மிகவும் அவசியமாகின்றது. அதனைத் திருவருள் ஜலம் எனலாம். நமக்கு உள்ளத்தூய்மை ஏற்படுவதற்கு வேண்டப்படுவது ஆண்டவனின் திருவருளே ஆகும்.

நம்முடைய உள்ளத்திற்குள்ளேயே தீர்த்தங்கள் பல இருக்கின்றன. ஆன்ம ஈடேற்றத்தை தருவதற்கு இவை துணையாக அமைகின்றன. எப்படித் தேங்காய்க்குள் இளநீர் இருக்கிறதோ, அப்படி இந்த உள்ளத்திற்குள்ளே அந்தத் தீர்த்தம் இருக்கிறது. அந்தத் தீர்த்தத்திலே மூழ்கி வினை மாசுகள் அகன்று பேரின்பநிலையை அடைவதுதான்

மின்மினிப்பூச்சி எவ்வளவு ஒளியுடன் திகழ்ந்தாலும் அது தீ ஆகாது.

சைவ ஞானத்தின் இலட்சியம் ஆகும். அகத்தூய்மையின்றிப் புறத்தே தீர்த்தத்தில் மூழ்குவதால் பயன் எதுவும் இல்லை என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

உள்ளத்தின் உள்ளே உள பல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியிலோரே

அகத்திலே தோன்றும் மாசுக்களை கழுவுவதற்கு உரிய முக்கிய பொருளாக இருப்பது திருவருள். அந்தத் திருவருளிலிருந்து நமக்கு நல்ல குணங்கள் பல உள்ளத்திலே உதிக்கின்றன. அவைகளெல்லாம் நம்மைத் தூய்மைப்படுத்தும் திருக்கோயில் திருவருளை வழங்கும் இடங்களில் ஒன்றாக மிளிர்கிறது. திருக்கோயிலுக்கும் உள்ளத்திற்கும் இருக்கின்ற சம்பந்தத்தை

"இறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலத்தும்
என் சிந்தையுள்ளும் உறைவான்"

என மணிவாசகப் பெருமான் தனது தெய்வ வாசகமாகிய திருவாசகத்திலே குறிப்பிடுகின்றார். சிந்தை உள்ளே உறைகின்றவன் திருச்சிற்றம்பலத்திலும் உறைகின்றான் என்கிறார். நமக்கு எப்படி இருதயம் உடம்பு முழுவதும் செல்லக்கூடிய செந்நீர் என்று சொல்லப்படும் இரத்தத்தைச் சேர்த்து உடம்பு முழுவதற்கும் கொடுப்பதுபோல ஆண்டவனுடைய திருவருளைப்பெற்று மக்களுக்குக் கொடுக்கக்கூடிய இடமாகத் திருக்கோயில்கள் திகழ்கின்றன.

இல்லறத்தானுக்குரிய பஞ்சமகா யக்ஞங்களில் தேவ யக்ஞமும் ஒன்று என்றே இந்து தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. இறைவனுடைய சந்நிதானத்தில் இடம்பெறும் அன்றாடப் பூசைகளும் வருடாந்த விழாக்களும் ஒழுங்காக நடைபெறாவிட்டால் வானம் வரண்டு விடும். பூமியில் மழை பெய்யாது. தானிய விளைச்சல்கள் எதுவும் ஏற்படாது. இதனைச்

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

எனத் தமிழ் மறையாகிய திருக்குறளும் விளக்குகிறது.

சிவாலயங்களில் நித்திய நைமித்தியக் கிரியைகளுக்கு முட்டுப்பாடு ஏற்பட்டால் நாட்டிற்கும் மக்களுக்கும் பல தீமைகள் ஏற்படும். அரசனுக்குத் தீங்குகள் ஏற்படுவதோடு மழைவளமும் குறையத் திருட்டுக்களும் நாட்டில் அதிகரிக்கும் எனத் தனது குருநாதராகிய திருநந்திதேவர் தனக்கு எடுத்துரைத்தார் என்கிறார் திருமூலர்.

முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுந்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே

அன்பும் அறிவும் அருளுக்கு அடையாளம் ஆகும். அன்பும் அருளும் கொண்டு சிவத்தை அகத்தும் புறத்தும் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கும் இயல்புடையோர் பார்ப்பார் எனப்படுவர். இவர்களை அறவோர் என்றும் அழைப்பர். எல்லா உயிர்கள் மீதும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவர்களே அந்தணர் என்று அழைக்கப்படுவார்கள் என்பதை

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்

எனத் தமிழ்மறையாகிய திருக்குறளும் கூறுகிறது.

பிராமணருக்குரிய குல ஒழுக்கங்களையும் பண்புகளையும் பேணாதவர்கள் இறைவன் சந்நிதானத்தில் பூசாகாரியங்களைச் செய்தால் வீரம் கொண்ட மன்னர்களுக்குக்கூட பொல்லாத நோய்கள் ஏற்பட்டுவிடும். செல்வச்செழிப்பு மிக்கநாடு பஞ்சத்தில் வாடும் நிலைக்குத் தள்ளப்படும். தனி மனித வாழ்வில் ஒழுக்கத்தைப் பேணாத அந்தணர்கள் பிரதிஷ்டா குருவாக இருந்தால் அரசனுக்கும் நாட்டிற்கும் மக்களுக்கும் துன்பந்தான் ஏற்படும் என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாம் என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே.

(தொடரும்....

## சந்நிதி வேலவனே வந்தோம் துயர் தீருமையா

ஆற்றங்கரையருகே
அழகான பூவரசும்
போற்றும் அடியவரின்
பொல்லாத வினை யறுக்கும்
சாற்று கவி வாணவர்களும்
சந்நியாசித் தொண்டர்களும்
போற்றியே பாடி நின்றார்
தோற்றங் கொண்ட வேலவனை
தேற்றுவோம் உள்ளம்தனை
தூயவனை போற்றி நிற்போம்

*-இரா அருட்செல்வம் அவர்கள்-*

உ

# இலங்கை வாழ் இந்துக்கள் எதிர்நோக்கும் சவால்கள்

திரு பா. ஞானச்சந்திரன் குருக்கள் ஜே.பி அவர்கள்.

அனுராதபுரம் வாழ் தமிழ் மக்கள் (இந்துக்கள், கிறீஸ்தவர்) எதிர்நோக்கும் பிரச்சினைகளை மையமாக வைத்தும், ஊடகங்களின் வாயிலாகவும் மக்கள் மூலமாகவும் இலங்கையின் பல பாகங்களிலும் குறிப்பாகத் தமிழ் மக்கள் குறைவாக வாழும் பிரதேசங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வைத்தும் கீழ்வரும் விபரங்களை மக்கள் முன்வைக்கிறேன். 1985இல் அனுராதபுரத்தில் ஏற்பட்ட வன்செயல்களுக்கு முன்னர் மிகவும் சிறப்பாகச் சைவமும், தமிழும் வளர்க்கப்பட்ட இடமாகவும், பல இந்திய மகான்கள், அறிஞர்கள் கால்பட்ட இடமாகவும் இப்புனிதபூமி அறியப்படுகிறது. 1985இல் 99.9 வீதமான தமிழ் மக்களின் இடப்பெயர்வுடன் ஆலய மணிகளும் ஓய்ந்திருந்தன. 2000ஆம் ஆண்டு கதிரேசன் ஆலய நிர்வாகத்தினரின் முயற்சியினாலும் மறைந்த சபாநாயகர் கே.பி. இரத்நாயக்க அவர்களின் உதவியினாலும் ஆலய மணிகள் ஒலிக்க ஆரம்பித்ததையடுத்து அனுராதபுரம் விவேகானந்த சபையும் புனரமைக்கப்பட்டு இயங்கத்தொடங்கியது. அனுராதபுரத்தின் நிலைமைகள் தொடர்பாக அவ்வப்போது உரியவர்களுக்கு விண்ணப்பித்தும் ஊடகங்களினூடாகவும் தெரியப் படுத்தியிருந்தோம். முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர், அவரது பிரதிநிதிகள், நல்லை ஆதீன முதல்வர், இந்து கலாச்சார திணைக்கள அதிகாரிகள், அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் போன்ற பலர் இந்து சமயம் வளர்க்க அர்ப்பணிப்புடன் பணிபுரிய அனுராதபுரத்திற்கு விஜயம் செய்தார்கள். பலன் பூஜ்யம். எனினும் அவ்வப்போது கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் உதவி கிடைப்பதுவும், சமயக்கல்விப் பணிக்காக அமுதகலாயோகி மோகனதாஸ் சுவாமிகள் அவர்களின் மாதாந்த நிதி உதவியும் தொடர்ந்து கிடைப்பதும் குறிப்பிடத்தக்கன.

சைவமும் தமிழும் பிரிக்கமுடியாதவை. இவை சேர்த்து வளர்க்கப்பட வேண்டியவையே. எமது நாட்டில் இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் சக்திமிக்க, எல்லா வளமும் பொருந்திய, வெளிநாட்டு உதவிகள் பெறுகின்ற, அரச செல்வாக்குப்பெற்ற பல இந்துசமய ஸ்தாபனங்கள் இருக்கின்றன. பாரிய வருமானம் பெறும் ஆலயங்கள். இருக்கின்றன. இவைகள் அறநெறிப் பாடசாலைகள், பாலர் பாடசாலைகள், அநாதை இல்லங்கள், வயோதிபர் இல்லங்கள் போன்ற பல சமுதாயத்திற்குத் தேவையான அரியபணிகளைச் செய்கின்றன. சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்குடன் பல விழாக்கள் கருத்தரங்குகள், மாநாடுகள் போன்றவற்றைப் பாரிய செலவில் சர்வதேச, தேசிய மட்டங்களில் நடாத்துகின்றன. மேலும் இவைகள் கட்டடங்களையும், மண்டபங்களையும், தேர்களையும், வாகனங்களையும் ஏட்டிக்குப் போட்டியாகச் செய்கின்றன. இவைகள் எல்லாம் சைவத்தையும் தமிழையும் வளர்க்க எம்மை அர்ப்பணித்து இவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டதாகவும் அறிவிக்கிறார்கள். குறிப்பாக இவைகளின் பாரிய

செயற்பாடுகள் வடகிழக்கு மாகாணங்களிலும், தலைநகரிலும் குறிப்பிட்ட சில நகரங்களிலும் மட்டுமே என்பதும் வெளிப்படை.

தற்போது இந்து மக்கள் குறைவாக வாழும் பிரதேசங்களில் இப்படியான ஸ்தாபனங்களின் சேவைகள் கிடைத்தனவா? குறைந்தது இலவச சீருடை, இலவச அப்பியாசக்கொப்பிகளாவது கிடைத்தனவா? அல்லது ஆலயங்களுக்குப் பூசை உபகரணங்களாவது கிடைத்தனவா? அல்லது ஊடகங்கள் வாயிலாகவும், வேறுவித மாகவும் தங்களது பிரச்சினைகளை வெளிப்படுத்தும் மக்களுடன் அதைத் தீர்ப்பதற்காக ஏதாவது தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார்களா? இப்படியான பகுதிகளிலே சிறையில் வாடும் இந்துக்களுக்கு விசேட பண்டிகைக் காலங்களிலாவது ஏதாவது உதவினார்களா? இப்படியான இடங்களிலுள்ள ஆலயங்களிற்குக் குறைந்தது ஒரு நந்திக் கொடியாவது கொடுக்கப்பட்டதா? தற்போது இந்து மக்கள் குறைவாக வாழும் பிரதேசங்களில் எத்தனை ஆலயங்களில் மணியோசை ஓய்ந்திருக்கிறது? எத்தனை ஆலயங்கள் கூரைகள் இன்றி இருக்கின்றன. வன்செயலினால் அழிக்கப்பட்ட எத்தனை கோவில்கள் இன்னும் திருத்தப்படவில்லை? இப்படியான கோவில்களில் அத்துமீறிக் காணிகள் அபகரிக்கப்பட்டதுடன் சமயத்திற்கு ஒவ்வாத முறையில் எத்தனை கோவில்கள் நடாத்தப்படுகின்றன? எத்தனை பாடசாலைகளில் இந்துசமயம், கிறீஸ்தவம் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை? எத்தனை பாடசாலைகளில் கலாச்சாரம் (இசை, நடனம்) கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை? அறநெறிப்பாடசாலைகள் நடாத்தப்படுகின்றனவா? எத்தனைத் தமிழ்ப்பிள்ளைகள் சிங்களமொழி படிக்கிறார்கள்? சிங்களமொழியில் கல்விகற்கும் இவர்களின் சமயக்கல்வியின் நிலை? எத்தனை தமிழ்ப்பாடசாலைகளில் தமிழ் ஆசிரியர்கள், அதிபர்கள் இல்லை? இவர்களின்றித் தமிழ் மாணவர்களின் மத, கலாச்சாரங்கள் பாதுகாக்கப்படுகின்றனவா? தமிழ்ப்பாடசாலைகள் இல்லாத இடத்தில் முஸ்லீம் பாடசாலைகளிற் கற்கும் தமிழ் மாணவர்கள் தங்களது கலாச்சார உடையுடன் செல்கின்றார்களா? இவர்களது சமயக்கல்வியின் நிலை என்ன? இந்து மதகுருமார் இடத்திற்கு இடம் பயணிக்கும்போது இலங்கையில் எங்காவது இவர்கள் தற்காலிகமாகத் தங்குவதற்கும் இடம் உண்டா? குறைந்தது பிரபல ஸ்தாபனங்கள் பல உள்ள தலைநகரிலாவது இருக்கின்றதா? இவர்கள் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த அரச அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டுள்ளதா? இந்து கலாசார உத்தியோகத்தர் எத்தனைபேர் இப்படியான பிரதேசத்தில் கடமையாற்றுகிறார்கள்? இப்படியானவற்றை உற்று நோக்கும்போது சைவமும் தமிழும் வளர்க்கப்பட வேண்டியது எங்கே என்ற கேள்வி எழுகின்றது. நிதியும் ஆளணியும் இன்றிச் சைவத்தை வளர்ப்பது கடினம் என்பது வெளிப்படை. இந்து ஸ்தாபனங்களைச் சேர்ந்த பலர் பல விபரங்களை ஊடகங்களினூடு தெரியப்படுத்துகிறார்கள். அகில இலங்கை இந்து வாலிபர் சங்கச் செயலாளர் திரு த. மனோகரன் அவ்வப்போது பல விடயங்களை வெளியிடுவது குறிப்பிடத்தக்கது. காலத்திற்குக் காலம் சேதமடைந்த ஆலயங்களின் விபரம், அறநெறிப் பாடசாலைகளின் விபரம், பாலர் பாடசாலை விபரம் அடையாளஅட்டை கொடுக்கும் விபரம் போன்றவை அவ்வப்போது சேகரிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. எனினும்

இப்படியான இடங்களில் உருப்படியான செயல்கள் நடந்ததாகத் தெரியவில்லை. மதம் மாறுவதற்கான சந்தர்ப்பங்களைக் குறைப்பதற்காகவேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மற்றைய மத ஸ்தாபனங்கள் கீழேயிருந்து இதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்து எத்தனையோ காலமாகிய பின்பும் எம்மவர் இன்னும் எமது சமயத்தின் தொன்மையைப் பற்றிப் பேசிக்கொண்டும் பிரச்சினைகளைத் தேடிக்கொண்டும் இருப்பது வேதனைதான். இதற்கு உரியவர்கள் கீழ்வரும் திட்டத்தைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

மேற்கூறப்பட்ட சக்திமிக்க ஸ்தாபனங்களும் ஆலய தர்மகர்த்தாக்களும் நிர்வாகிகளும், வர்த்தக வள்ளல்களும் ஒன்று சேர்ந்து ஒரு குழுவைத் தெரிவு செய்ய வேண்டும். இக்குழுவே எல்லாவற்றிற்கும் பொறுப்பாக இருக்கவேண்டும்.

1. மேற்படி ஸ்தாபனங்கள், பாரிய வருமானம் பெறும் ஆலயங்கள் இந்து மக்கள் செறிந்து வாழும் பகுதியிற் செய்யும் அபிவிருத்தியில் ஒரு குறிப்பிட்ட வீதத்தைக் கீழ்வரும் விடயங்களுக்காக ஒதுக்கவேண்டும். கோடிக்கணக்கான ரூபாய் செலவில் கோபுரங்கள், தேர்கள், மண்டபங்கள் அமைக்கப்படும்போது இலட்சக் கணக்கில் எத்தனை விடயங்கள் செய்யப்படலாம்?

2. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு இந்துமத ஸ்தாபனத்தைத் தெரிவுசெய்து அதற்கு அறநெறிப்பாடசாலை, பாலர் பாடசாலை, அரச உத்தியோகத்தர், பிரயாணிகள் தங்குமிடவசதி, கலாச்சார மண்டபம், சைவ உணவகம், இந்து மதகுருமார் தற்காலிகமாகத் தங்குவதற்கு வசதி, சமயப் பணிகளுக்குப் பயன்படுத்த ஒரு சிறிய வாகனம், அரச கலாச்சார உத்தியோகத்தர் அலுவலகம் போன்ற சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும். இது உத்தியோக பூர்வமாகச் செயற்பட வழி பிறக்கும். மாற்றலாகி வரும் தமிழ் அரச உத்தியோகத்தர் குறிப்பாக ஆசிரியர்களது தங்குமிட உணவுப்பிரச்சினைகளுக்கு ஒரு சிறு தீர்வாகவும் அமையும்.

3. இவ் ஸ்தாபனத்தினூடு அம்மாவட்டத்திற் செயற்படுத்தப்படவேண்டிய திட்டங்களைப் பெற்றுச்செயற்படுத்தப்பட வேண்டும்.

4. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கோவிலைப் பூரணமாக்கி நித்திய நைமித்திய பூஜைகள் நடைபெற ஒழுங்கு செய்ய வேண்டும்.

5. அம்மாவட்டத்தில் உள்ள சேதமாக்கப்பட்ட அல்லது புனரமைக்கப்பட வேண்டிய ஆலயங்கள் புனரமைக்கப்பட்டு நித்திய பூஜைகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

6. இவ்வாலயங்களுக்கு நிரந்தர வருமானங்கள் பெறக்கூடிய திட்டங்களை ஏற்படுத்துதல்.

7. இவ்வாலய அர்ச்சகர்களது வேதனம், பராமரிப்பிற்கான செலவுகளைப் பொறுப்பெடுத்தல்.

8. ஆலயங்கள், சமய ஸ்தாபனங்கள் போன்றவற்றின் காணிகள் அபகரிக்கப் பட்டிருப்பின் அல்லது அத்துமீறல்கள், சமயத்திற்கு ஒவ்வாத நிகழ்வுகள், நிர்வாகப் பிரச்சினைகள் ஏற்படின் இதற்குச் சட்டரீதியாகவும் உடனடியாகவும் தீர்வுகாணச் சட்டவல்லுநர்களின் உதவியுடன் நேரடியாக மேற்படி குழு தலையிட்டு இலவசமாகத்

தீர்வுகாண ஒழுங்குகள் மேற்கொள்ளவேண்டும்.

9. இப்பிரதேசங்களில் இருக்கும் கோவில் மற்றும் தமிழ்ப்பாடசாலைகள் தொடர்ந்தும் சுய கௌரவத்துடன் இயங்க, தேவையேற்படின் மற்றைய பகுதிகளில் உள்ள இந்து அநாதைச் சிறுவர் இல்லங்களின் கிளைகளை ஏற்படுத்துதல்.

10. இங்கு வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

11. மேற்படி குழு தமிழ் ஆசிரியர் சங்கங்களுடன் கலந்தாலோசித்து நாடு முழுவதிலுமுள்ள தமிழ் மக்கள் குறைவாக வாழும் பிரதேசங்களில் உள்ள தமிழ் மொழிப் பாடசாலையில் கற்பிக்கவும், அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் (குறிப்பாக இந்துசமய, கிறீஸ்தவ சமய, இசை, நடன ஆசிரியர்கள்) கல்விக் கடமைகளை ஒரு சுழற்சிமுறையில் (குறைந்தது ஒரு வருடம்) ஏற்க ஒரு இதய சுத்தியுடன் கூடிய ஆர்வமுள்ள ஆசிரியர் குழாத்தை உருவாக்கித் தேவையான இடத்திற்கு நியமித்தல். தமிழ்ப்பாடசாலையில் தமிழ்மொழிமூல கிறீஸ்தவ சமய பாடத்திற்கு ஆசிரியர் கடந்த இருபது வருடமாக இல்லாதநிலையைச் சுட்டிக்காட்டி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் ஒரு பிரதியை அனுராதபுர மறை மாவட்ட ஆயருக்கு அனுப்பியபோது அவர் ஒரு கிழமையில் ஒரு தொண்டர் ஆசிரியரைத் தமது செலவில் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதே பாடசாலையில் முன்னாள் இந்து அமைச்சர்கள் இருவர் இருந்தும் ஒரு ஆசிரியரை இந்துசமய பாடத்திற்கு நியமிக்கமுடியாமற்போனதும் குறிப்பிடத்தக்கது.

12. தமிழ் மாணவர்கள் பயிலும் ஏனைய பாடசாலைகளில் (தமிழ்ப் பாடசாலைகள் அற்ற நிலையில் பயிலும் முஸ்லீம் பாடசாலைகளில்) இந்து சமயம் கற்பிக்க ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

13. சிங்கள மொழிகளில் இந்து சமயம், இசை, நடனம் கற்பிக்க ஒரு தொண்டர் ஆசிரியர் குழுவை (இவர்களுக்கான முழுச்செலவையும் மேற்படி குழு பொறுப்பேற்க வேண்டும்) தயார் செய்து தேவையான இடத்திற்கு மாவட்ட ரீதியில் அனுப்பவேண்டும். இதையும் ஒரு வருட சுழற்சிமுறையில் அனுப்பலாம்.

14. மேற்படி தொண்டர் ஆசிரியர் குழுவை அரசுடன் தொடர்புகொண்டு நிரந்தர நியமனம் பெற முயற்சிக்க வேண்டும்.

15. ஒவ்வொரு தமிழ்ப்பாடசாலையிலும் ஒரு சிறிய கோவிலை அமைத்து மத வழிபாடுகளை நடாத்த ஒலிபெருக்கி வசதிகளும் செய்து கொடுக்கவேண்டும்.

16. தமிழ்ப்பாடசாலைகள் இல்லாத நிலையில் முஸ்லீம் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களது மத, கலாச்சார நடைமுறைகளுக்கு உத்தியோக பூர்வமாக அமைச்சின்மூலம் அனுமதிக்கு முயற்சி எடுக்கவேண்டும். சில பாடசாலைகளில் அதிபரின் நன்மனத்தால் இதற்கு இடமளிக்கப்பட்டிருப்பதும் சில பாடசாலைகளில் இதற்கு இடமளிக்கப்படாமையும் இன்னும் தமிழ்ப்பாடசாலைகளிலேகூட கலாச்சார அழிவுகள் நடைபெறுவதையும் அறியக்கூடியதாக இருக்கிறது.

17. இந்து மக்கள் செறிந்துவாழும் இடங்களில் இருந்து தமிழ்ப்பாடசாலை தூரத்தில் இருப்பின் இலவச பாடசாலை பஸ்சேவையை மேற்கொள்ளல்.

**எதற்கும் தயாராக இருப்பவனை நோக்கித்தான் வாய்ப்புகள் தேடிவரும்.**

18. இப்படியான பிரதேசங்களில் இந்து ஆலயங்கள், ஸ்தாபனங்கள் பொலீசாரின் உதவியுடனும் உள்ளூர்ச்சபைகளின் உதவியுடனும் பாதுகாப்பான புனிதப் பிரதேசமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

19. குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒரு தடவையேனும் மேற்படி குழு இப்பிரதேசங்களுக்கு விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும்.

மேற்படி நடவடிக்கைகள் குறிப்பிட்ட மாவட்டங்களில் இயங்கும் இந்து ஸ்தாபனங்கள், கோவில்களின் நிர்வாகத்தின் சுயாதீன இயக்கத்தினைப் பாதிக்காமல் மேற்கொள்ளப்பட வேண்டும். சக்திமிக்க ஸ்தாபனங்கள் மாவட்டரீதியாகவோ அல்லது கோவில், பாடசாலை, சமூகநலன் போன்ற ரீதியிலோ பொறுப்பெடுக்கலாம்.

பல இடங்களில் தமிழ் மக்களின் இருப்பிடங்கள், கோவில்கள், பாடசாலைகள் போன்றவை தமிழ் மக்கள் வாழ்ந்த சுவடுகூடத் தெரியாமல் மாறிவிட்டன. உதவிக்குரல் எழுப்பியும் உதவி கிடைக்காவிடில் அழியவிடுவதைத் தவிர வேறு வழியில்லை. அழிந்ததன் பின்னர் அதைப்பற்றி கதைப்பதாற் பிரயோசனம் இல்லை. கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம். சைவமும் தமிழும் வளர அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்கள் சைவமும் தமிழும் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பிரதேசங்களை அழிய விடுவதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கட்டும். இப்படியான பிரதேசங்களில், சைவமும் தமிழும் வளர அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களது கட்பார்வை இதயசுத்தியுடன் பட எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

## உண்மையான துறவி யார்?

கடவுளை நம்பாத நாத்திக மனப்பான்மை படைத்த ஒரு செல்வந்தர் ஒரு தடவை இராமகிருஷ்ண பரமஹம்சருடன் உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது அவர், "சுவாமி தாங்கள் கடவுளுக்காகத் தங்கள் வாழ்க்கையைத் துறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன்" என்றார்.

பரமஹம்சர் புன்னகை தவழும் முகத்துடன், "நான் ஒரு துறவியாக இருக்கலாம் ஆனால் என்னைவிட நீர்தான் பெரியதுறவி" என்றார்.

செல்வந்தருக்கு தூக்கிவாரிப்போட்டது. "உங்களைவிட நான் பெரிய துறவியா?" என்று திகைப்புடன் கேட்டார்.

"ஐயா, நானோ கடவுளுக்காக என் வாழ்க்கையைத் துறந்தேன். நீரோ சுகபோக வாழ்க்கைக்காகக் கடவுளையே துறந்துவிட்டீர். ஆகவே என்னைவிட நீர்தான் பெரிய துறவியாகிறீர்" என்றார் இராமகிருஷ்ணர்.

செல்வந்தர் வெட்கத்துடன் தலைகுனிந்து கொண்டார்.

---

காலையில் எழுந்ததும் அவரவர் உள்ளங்கையை ஒருமுறை பார்த்துக்கொள்ள வேண்டும். உள்ளங்கையின் அடிப்பாகத்தில் பார்வதியும், மத்தியில் சரஸ்வதியும், மேற்புறம் லஷ்மியும் இருப்பதாக சொல்லப்படுவதால் அவ்வாறு செய்வது நல்லது.

# அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர்.......

செல்வி தி. வரதவாணி அவர்கள்.

சமய விழுமியக்கருத்துக்களை வெளிக்கொணர்ந்து உணர்வூட்டும் வகையில் மக்களுக்கு முக்கிய பங்கு வகிப்பவை சமயச்சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கங்கள் ஆகும். அருட்கவி விநாசித்தம்பி ஐயாவினது சமய, சமூகக் கருத்துக்களும் அவரது சொற்பொழிவு, கதாப்பிரசங்கங்களூடாக பரப்பப்பட்டன என்றால் மிகையாகாது. இளம் பராயம் தொடக்கமே பாடசாலைகளில் பிரசங்கம் நடாத்தி வந்தார். அவரது இசை ஞானத்தாலும், சொல்வள ஞானத்தாலும், இறை ஞானத்தாலும் இவருக்குக் கதாப்பிரசங்கம் செய்யும் பாக்கியம் நன்றாகவே அமைந்திருந்தது. ஐயா அவர்கள் முதன்முதல் செய்த கதாப்பிரசங்கம் "கண்ணப்ப நாயனார்" என்பதாகும்.

1945ஆம் ஆண்டு அருட்கவி ஐயா. அவர்கள் ஆசிரியப்பணியாற்றிக் கொண்டிருந்த சமயம் அங்கு விஜயம் செய்த ஆத்மஜோதி முத்தையா அவர்கள் கதாப்பிரசங்கம் ஆற்றிய அருட்கவி ஐயாவைப் பாராட்டி மென்மேலும் வளரவேண்டும் என்று ஊக்கமளித்தார். இதன்பின்னர் 1947ஆம் வருடம் திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஐயா பயின்று கொண்டிருந்தார். அப்பொழுது திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் சகவாசமும் இவருக்குக்கிட்டியது. திரு கி. வா. ஜெகநாதன் அவர்களது நூல்களும் திருமுருக கிருபானந்தவாரியார் நூல்களுமே அருட்கவி ஐயாவினைப் பொருள் பொதிந்த சமயப்பேச்சாளராக்கின. இத்துடன் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திரு S. சுவாமிநாதன் (அதிபர்) என்போர்களது ஆக்கமும் ஊக்கமும் இவருக்கு நல்வழிகாட்டின.

மன்னார் திருக்கேதீச்சரம் திருத்தலத்தில் சிவராத்திரி தினத்தன்று 1964ஆம் ஆண்டு "பக்த நந்தனார்" என்ற நாடகக் கதாப்பிரசங்கம் நடாத்த ஏற்பாடாயிற்று. பாத்திரம் போதியளவு கிடைக்காமையால் அருட்கவி ஐயா அவர்களது இந் நாடகத்தை நிகழ்த்தத் தடை ஏற்பட்டது. இவரது கதாப்பிரசங்கத்தைக் கேட்டவர்கள் நிர்வாகத்தினருக் குக்கூற அவர்கள். நீங்கள் அந்நேரம் கதாப்பிரசங்கம் செய்யுங்கள் எனக் கேட்டுக் கொண்டனர். அதற்கமைய வயலின் திரு ச. வைத்தீஸ்வரக்குருக்கள். திரு பிச்சையப்பா மிருதங்கம் M.N. செல்லத்துரை, கெஞ்சிரா திரு குமுக்கா கணபதி என்போர்கள் அணிஇசைக்கலைஞராக அமையக் கதாப்பிரசங்கம் செய்தாராம். இதனால் கவரப்பெற்ற வர்கள் தமது ஆலயங்களிலும் இவரது கதாப்பிரசங்கங்களை மகோற்சவ காலங்களில் தொடக்கம் முதல் இறுதித் திருவிழாவரை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்தனர்.

ஏனையோரின் கதாப்பிரசங்கத்துக்கும் இவரது மரபுக்கும் இடையே மிகுந்த வேறுபாடுகள் உண்டு. அத்தகைய தனித்துவமுண்டு. எந்த ஆலயத்துக்காயினும் பிரசங்கத்துக்குச் சென்றால் சொற்பொழிவு ஆற்றுமுன்பு அம்மூர்த்தியைப்பற்றி ஒரு வெண்பாவோ தோத்திரமோ பாடிவிட்டே ஆரம்பிப்பார். தொடர் பிரசங்கமாக இடம்பெறும் ஆலயத்தின்மீது திடீரெனப்பாடப்படும் இப்பாடல்கள் திருவிழாக்காலம் முடிவுற்றுச் சில காலங்களில் தோத்திரமாலை என்ற பெயரில் வெளிவரும். உதாரணமாக

நல்லூர்க்கந்தன் கவிமாலை, செல்வச்சந்நிதிக் கந்தன் கவிமாலை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவரது சொற்பொழிவுகள் யாவும் சமய மேம்பாட்டைக் கூறுவனவாகவும் சமயத்தின் அரும்பெறும் கருத்துக்களையும் எடுத்துக்கூறுவனவாகவும் அமைந் திருப்பதுடன் நமது சமயத்தை வளரவிடாது தடுக்கும் நமது சமய மூடப்பழக்க வழக்கங்களை களைவனவாகவும் சமூக மேம்பாட்டுக்கு உதவுவனவாகவும் இருந்தன.

இன்றுவரை சில ஆலயங்களில் பலியிடும் வழக்கம் இடம்பெற்ற வண்ணமே இருக்கிறது. ஆயினும் இப்பலியிடும் வழக்கம் இருந்த ஆலயங்களில் முக்காற்பங்கு வீதம் ஐயா அவர்களது சமயச் சொற்பொழிவுகள்மூலம் நிறுத்தப்பட்டுள்ளன. பலியீடு நடைபெறும் ஆலயங்களுக்குச் சொற்பொழிவுக்குச் சென்றால், உயிரின் மதிப்பு இதனால் எமக்கு ஏற்படும் அவல நிலை, எமது அறியாமை போன்ற விளக்கங்களையும் எல்லாவற்றுக்கும் மேலாக எமக்குக் கிடைக்கும் மறுபிறப்புப் பலாபலன்களையும் கதைமூலமாகவும் கவிதை மூலமாகவும் விளக்கிநிற்பார்.

"ஆசை மகனே என் அன்பான கண்மணியே
நேசத்துரையே நெடும் பயணம் போனாயோ"

என்கின்ற சோமசுந்தரப்புலவரது "ஆடு கதறியது" என்னும் பாடலைப்பாடி விழிநீர் சொரிய நிற்பார். உண்மையில் இப்பாடலும் அதனை ஐயா அவர்கள் பாடும் விதமும் இப்பாடலில் இருந்து கிடைக்கும் சோக அனுபவமும் உள்ளம் உருக்குவதாய் இருந்தது. அவ்வூர் மக்களே பலியீட்டின் அநாகரிகத்தன்மை உணர்ந்து இனி வேண்டாம் என இங்ஙனமாக எண்ணிப் பலியீட்டை நிறுத்தினர்.

இவ்வாறு இவரது சொற்பொழிவு, கதாப்பிரசங்கம் மூலம் ஒருகாலத்தில் பலியிடும் வழக்கம் உச்சமாக அமைந்துள்ள ஆலயங்கள் இன்று ஆகமமுறைக்கு உட்பட்ட தேரோடும் ஆலயங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பலியிடும் வழக்கம் தடுக்கப்பட்ட ஆலயங்கள் என்ற ரீதியில் அளவெட்டி வெளிவயல் முத்துமாரி அம்மன் ஆலயம், உரும்பராய் காட்டுவைரவர் கோயில், அளவெட்டி குருவளை வைரவர் ஆலயம், சுதுமலை ஈச்சடி வைரவர் கோயில், சுன்னாகம் ஐயனார் கோயில், பருத்தித்துறையில் அமைந்த காளி கோயில், நீர்வேலியில் இருக்கின்ற காளி கோயில் எனக் கூறிக்கொண்டே போகலாம். பலி நிறுத்தம் என்பது ஓர் சமய, சமூகச் சீர்திருத்தம். இத்தகைய சீர்திருத்த முறைக்கு அவரது சொற்பொழிவும் கதாப்பிரசங்கமும் முக்கிய பங்கு வகித்துள்ளன.

இவ்வாறு எமது சமயப்பழக்கவழக்கங்களில் இன்றுவரை எம்மில் ஆதிக்கம் செலுத்துவது பலியிடல் வழக்கம். உண்மையில் ஓர் ஆலயத்தின் பழக்க வழக்கத்தை மாற்றுவது பெரும் கஷ்டம். அதிலும் அவர்களது நம்பிக்கையை மாற்றுவது என்பது மிக மிகக் கஷ்டம். இதில்பல எதிர்ப்புக்கள் நேரிடும். அவற்றை எல்லாம் ஈடுசெய்து அம்மக்களை நல்வழிப்படுத்தி அவ்வழக்கமுறையை மாற்றியமைத்தவர் என்ற இரீதியில் இவரது சொல்லாற்றலின், செயலாற்றலின் வெளிப்பாடு நன்கு துலங்குகின்றது.

(தொடரும்....

**யாரும் பாராட்டாத இடத்தில் சாதனை நிகழ்த்துவதில் பயனில்லை.**

உ

# இரணியன் - பிரகலாதன் கதை பிறந்த கதை

திரு நா. நல்லதம்பி அவர்கள்.

தந்தை தாய் வாக்கிய பரிபாலனஞ்செய்த இராமன், வனவாசஞ்செய்து கொண்டிருந்தபோது, இலங்கை மன்னனாக இருந்த இராவணன், சூழ்ச்சிசெய்து சீதையைக் கவர்ந்து செல்கிறான். தன்னை மணஞ்செய்துகொள்ளும்படி சீதையை வற்புறுத்திய இராவணன், அவள் தன்னை விரும்பவில்லையென்பதை அறிந்தும் அவளைச் சிறையில் அடைத்து வைக்கிறான்.

ஏகதார விரதம் பூண்ட கற்புடை நங்கையான சீதை, ஒருபொழுதும் வேறு ஒரு மணம் விரும்பமாட்டாள். அன்றி, அவளுக்கு ஏதாவது தீங்கு நிகழக் கூடுமாயின் அவள் தன்னுயிரை மாய்த்துவிடுவாள்.

"மயிர்நீப்பின் வாளைக் கவரிமான் அன்னார்

உயிர் நீப்பர் மானம் வரின்" என்பது வள்ளுவன் காட்டிய கற்புத்திறன்.

"இராவணன் மேலது நீறு" எனத்திருமுறையிற் சிறப்புப்பெற்ற சிவபக்தனான இராவணன், தனது தாயார் வணங்குவதற்கு வசதியாக வட இந்தியாவிலுள்ள கைலாசமலையைப் பெயர்த்து இலங்கைக்குக் கொண்டுவர முயன்று தோற்றுப் போனவன்.

"முக்கோடி வாழ்நாளும் முயன்றுபெற்ற

பெருந் தவமும், முதல்வன் முன் நாள்

எக் கோடி யாராலும் வெலப்படாய்

எனக் கொடுத்த வரமும்....." இருப்பதனால் நல்லனவற்றைச் செய்வதை யாரும் தடுப்பதற்கில்லை.

ஆனால், இராவணன் காமம், வெகுளி, மயக்கம் முதலியவற்றின் வசப்பட்டுப் பிறன்மனையாள் - சீதையை அடைய விரும்பிய பெரிய குற்றம் அவனுக்கும் அவன் குலத்துக்கும் பேரிடியாக அமைந்துவிடுகிறது. அவதார புருஷனான இராமனது நல்லிணக்க வேண்டுதலையும் புறக்கணித்துப் போர்புரியத் தீர்மானிக்கிறான்.

இந்த நிலையில், அவனது சகோதரர்களான கும்பகர்ணனும் விபீடணனும் யுத்தஞ்செய்யப் போகவேண்டாமென இராவணனுக்கு அறிவுரை கூறுகின்றனர். திருமாலின் அவதாரமான இராமனைப்பற்றி ஒற்றர்மூலம் அறிந்த அவர்கள், இராமனை எவ்வகையிலும் பகைக்கக் கூடாது; சீதையைச் சிறைவிடுவதே விவேகமானது; இல்லையேல் அரக்கர் குலமே அழிந்துபோகும் என எச்சரிக்கின்றனர்.

இராவணன் எதனையும் உள்வாங்கவில்லையெனத் தெரிந்ததும் கும்பகர்ணன், அண்ணனுக்காகப் போர்புரியத் தீர்மானித்து, அகன்று செல்கிறான். ஆனால், விபீடணன், பொறுமையிழக்காமல், தொடர்ந்து அறிவுரை கூறும் பொழுது, இரணியன் - பிரகலாதன் கதை விபீடணன் வாயிலிருந்து பிறக்கிறது. இக்கதை இனித் தொடர்கின்றது.

இரணியன் என்பவன், தான் மேற்கொண்ட தவத்தினாலே, வேதங்களிலே சொல்லப்பெற்ற எல்லா நலன்களும் பிரமதேவனால் வழங்கப்பெற்றவன்.

**புத்திசாலிகள் எதையும் உபயோகமில்லாததாக நினைப்பதில்லை.**

இந்திரலோகம், பிரமலோகம், நாகலோகம் ஆகிய மூவுலகங்களிலும் தனது ஆணையைச் செலுத்திக்கொண்டிருந்தவன்.

ஐம்பூதங்களையும் அடக்கி ஆளும் வல்லமை படைத்தவன். பகலிலோ, இரவிலோ நீரினாலோ, நெருப்பினாலோ, காற்றினாலோ சாகா வரம் பெற்றிருந்தவன். அதனாலே தனக்கு இத்தனை வரங்களையும் வல்லமையுந் தந்த அந்த முதல்வனை - இறைவனை மறந்துபோகிறான்; இரணியன் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்கின்ற ஆணவ முனைப்பால் 'ஓம் நமோ நாராயணாய' என்பதற்குப் பதிலாக 'இரணியாய நம' என்று சொல்லியே எக்கருமமுந் தொடங்க வேண்டும் என்ற பணிப்புரையோடு ஆட்சி நடாத்துகின்றான்.

இந்த இரணியனுக்குப் பிரகலாதன் என்று ஒரு மகன் பிறக்கிறான். தன்னை அழிப்பதற்கு எதிராளியே இல்லை என்று இறுமாப்போடிருந்த இரணியன் தனது மகனே தனக்கு எதிரியாக அவதரித்திருப்பதை எப்படி உணர்வான். பிரகலாதன் கருவிலே திருவுடையவனாக, வேதங்களிலே வல்லவனாக, சிறந்த அறிஞனாக, தூயவறிற்றூயனாக, அறத்தின் முதல்வனாக, தாயன்பு கொண்டவனாக வளர்ந்து வருகிறான்.

ஆயினும், தனது மகன் முறையாகச் சகல கலைகளையும் கற்கவேண்டும் என்னும் விருப்பத்தினால் இரணியன் பிரகலாதனை ஒரு அந்தணக் குருவிடம் அனுப்புகிறான். அந்த அந்தணக்குரு இரணியனின் ஆட்சி அதிகாரங்களின்கீழ் வாழ்பவர். அதனால், "இரணியாய நம" என்று சொல்லிப் பாடத்தை ஆரம்பிக்கிறார்.

ஆனால் பிரகலாதன், ஓம் நமோ நாராயணாய" என்று சொல்லித் தொடங்குகிறான். தந்தை பெயரைச் சொல்லிக்கொண்டு கருமந்தொடங்குவது எவ்வகையிலும் அறமாகாது என்பது பிரகலாதனின் வாதம்.

தம்பீ, பிரகலாதா, என்னையும் உன்னையும் அழிவுக்கு இட்டுச்செல்லக் கூடியதாக இவ்வாறு "ஓம் நாராயணாய நம" என்று சொல்லுகிறாயே, ஏன்? எனக் குரு கேட்கிறார். அதற்குப் பிரகலாதன், 'என்னையும், என் தந்தையையும், தங்களையும் உய்விக்க வல்லதான மந்திரத்தைத்தானே சொன்னேன். இதில் என்ன தவறு கண்டீர்கள்' என்கிறான். குருவுக்கோ தர்மசங்கடமான நிலை. பிரகலாதன் சொன்னதை அப்படியே ஏற்றுக்கொண்டு, பாடத்தைத் தொடர்ந்து நடாத்தவும் இயலாது, அவ்வாறு நடாத்தினால், பிரகலாதனுக்கு அனுசரணையாக இருந்தார் என்று குரு தண்டிக்கப்பெறுவார்! அதனால், பாடத்தை மேற்கொண்டு நடாத்தாமல், இரணியனிடம் போகிறார்.

"நான் கூறுவதைச் சொல்லாமல், தங்கள் மகன் வேறு எதையோ சொல்கிறார்" என்று அந்தணக்குரு அச்சத்துடன் உரைக்கிறார். இரணியனுக்குக் கோபம் மேலிட்டது. "அந்தணரே அந்தணருக்கு அடாத முறையிற் பேசுகிறீரே, உள்ளதை உள்ளவாறு சொல்லும்" எனச் சினந்து கேட்கிறான். அந்தணர் அப்பொழுதும் உள்ளது சொல்லாமல், 'சொல்லுவதற்கு நான் அஞ்சுகிறேன்' என்று தலைமேல் கைவைத்து நிற்கிறார்.

உடனே, மகனை அழைப்பித்த இரணியன், மகனை அன்போடு அணைத்துத் தன்பக்கத்திலிருத்தி, 'என்ன அந்தணன் கேட்டதற்குப் பிழையான வேறு ஏதோ சொன்னது ஏன்' என்று கேட்கிறான்.

**அவசியமில்லாமல் ஒரே நேரத்தில் இருபதவிகளை வகிக்கக்கூடாது.**

'நான் யாவருக்கும் நன்மைதரும் ஒரு நாமத்தைத்தான் சொன்னேன்; அது "ஓம் நமோ நாராயணாய" என்று சொல்லி எட்டெழுத்து மந்திரத்தின் மகிமையைத் தொடர்ந்து சொல்லுகிறான். அப்பொழுது, கோபத்தின் வசப்பட்ட இரணியன் 'இவ்வாறு துர்ப்புத்தி சொல்லி உன்னை யாரோ மயக்கி விட்டார்கள்; மகனே குரு சொன்னபடி செய்வாய்' என்று இதமாகப் பேசுகிறான்.

ஆயினும், பிரகலாதன் தனது அறிவுரையைத் தொடர்கிறான். தந்தையே, வித்து இல்லாமல் ஒன்றும் விளைவது இல்லை. உலகத்தைப் படைத்து, அவ்வுலகத்தில் நின்று திருவிளையாடல்களைச் செய்கின்ற ஒப்பற்ற அந்தத்தலைவனைப்பற்றி யாரும் உணரமாட்டார்கள். நீங்கள் மயக்கமின்றி மெய்யுணர்வோடு கேட்பீர்களாயின், உள்ளங்கை நெல்லிக்கனிபோல உங்களுக்கு விளக்குவேன் என்று மேலும் உரைக்கிறான்.

அதனாற் சினமடைந்த இரணியன், மகனைக் கொல்லும்படி ஏவலாளருக்குப் பணிக்கிறான். ஆயினும், பிரகலாதனுக்கு யாராலும் ஊறுவிளைவிக்க முடியவில்லை. பின்னரும் பிரகலாதன், தந்தையோடு பேசுகிறான். அப்பொழுது, "நாராயணன் தூணிலும் இருப்பான், வேறு எல்லாப் பொருள்களிலும் இருப்பான் என்றும் சொல்கிறான்.

சாணினும் உளன்; ஓர் அணுவினைச் சதகூறிட்ட
கோணினும் உளன்; மாமேருக் குன்றினும் உளன்; இந்நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்; இத்தன்மை
காணுதி விரைவின் என்றான்; 'நன்று' எனக் கனகன் சொன்னான். என்பது கம்பர் வாக்கு.

அப்பொழுது, இரணியன் வெகுண்டெழுந்து, பிரகலாதனை நெருங்கி, இப்பொழுது இந்தத் தூணில், நீ சொன்ன அவரைக் காட்டவேண்டும்; இல்லையேல் உன்னைக் கொன்று உனது இரத்தத்தைக் குடிப்பேன் என்கிறான். அதற்குப் பதிலாகப், பிரகலாதன், நீ என்னைக் கொல்வது என்பது எளிதான காரியம் அன்று; அப்படி நான் சொன்ன இடங்களிலிருந்து நாராயணன் தன்னைக் காட்டாவிட்டால் நானே எனது உயிரை மாய்ப்பேன்; அவ்வாறு செய்யாவிடின் நாராயணனுக்கு யான் அடியவன் ஆகேன் என்று சபதஞ் செய்கிறான்.

அப்பொழுது இரணியன், அங்குள்ள ஒரு தூணில் ஓங்கி உதைக்கிறான். உதைத்ததும், அத்தூணிலிருந்து நரசிங்கம் ஒன்று வெளிப்பட்டுச் சிரித்தது. வேத விற்பன்னனான பிரகலாதனுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகி ஆடிப்பாடி தொழுது நிற்கிறான். பிரமதேவனாலும் காணமுடியாத நாராயணன், நரசிங்கமாகத் தோன்றியபோது, இரணியனோ, அந்த நரசிங்கத்தோடு போர்புரியத் தொடங்குகிறான்.

நரசிங்கம் இரணியனது மார்பைப் பிளக்கிறது; இரத்த வெள்ளம் பூமியை நனைக்கிறது. உலகம் இன்றோடு அழிந்தது என்று தேவர்கள் எல்லோரும் பிரமதேவனோடு சேர்ந்து அஞ்சி ஒடுங்கி, நாராயணனைத் துதித்துநிற்க, நரசிங்க வடிவத்தை விட்டு, நாராயணன் தனது சுயவடிவுகாட்டியருள் செய்கிறான். அபயகரம் காட்டி, நரசிங்கமூர்த்தி பிரகலாதனை நோக்கி, அன்பனே, உன் தந்தையின் உடலை உன் கண் முன்னாலேயே பிளந்து கொன்றோம்; அப்பொழுதும் நீ சிந்தை கலங்காது, என்மேல் வைத்த அன்பு குறையாது நின்றாயே, இதற்கு யான் என்ன கைம்மாறு

செய்வேன், உன் பக்தியைப் பாராட்டுகிறேன்.

இனி, உன் குலத்தவர் ஒருவரையும் கொல்லமாட்டோம். அவர்கள் தவறு செய்தாலும் மன்னித்து விடுவோம் இது உறுதி எனக்கூறி, உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்கிறார். அதற்குப் பிரகலாதன், இதுவரை யான் பெற்ற பேறு மிகப்பெரிது. இனிமேல் எனக்கு என்ன வேண்டும்! அப்படி ஏதும் தேவையெனக் கேட்பதாயின், "என்பு இல்லாத இழிபிறவி எய்தினும் நின் அன்பு பெறும் பேறு அடியேற்கு அருள்வாயாக" என்கிறான். "அவ்வண்ணமே யாகுக" என்று அருளிச் செய்த பரந்தாமன், "என்னைத் தொழுவோர் எல்லாம் நின்னையுந் தொழும்பேறு பெற்று என் பக்கலில் இருப்பாய்; எல்லா நற்குணங்களும் வாய்க்கப்பெற்று வளர்க" என வரமருளிச்செய்கிறார்.

எல்லா உலகமும் கைகூப்பித்தொழ, நான்முகன் தலைமையிலே தேவர்கள், பிரகலாதனுக்கு மாமன்னனாக முடிசூட்டி வைக்கிறார்கள். இவ்வாறாக, இரணியன்-பிரகலாதன் கதை கூறிய மேதாவியான விபீடணன், 'அண்ணா, எனது யோசனையை ஏற்காது நின்வழி செல்வாயாயின், தீமை விளைவது திண்ணம்' என்று கூறி அவ்விடம் விட்டு நீங்கி, திருமால் அவதாரமான இராமபிரானிடம் அடைக்கலம் தேடுகிறான்.

முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய
பெருந்தவமும், முதல்வன் முன்நாள்
எக்கோடி யராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும், ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும், தின்று மார்பில்
புக்கு ஓடி உயிர்பருகி, புறம்போயிற்று
இராகவன் தன் புனித வாளி.

எனக் கம்பர் காவியம் காட்டுவதுபோல, இராவணன், பிறன்மனையாளை விரும்பிய குற்றமும் அதனால் உண்டான வெகுளி, மயக்கமும் காரணமாகப் போர் புரிந்து குலத்தோடு அழிகிறான்.

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் அன்றோ ஆன்ற ஒழுக்கு" என்னும் வள்ளுவர் நீதியை உதாசீனம் செய்து மடிகிறான் இராவணன்.

நீதி நியாயங்களை மதித்துநடப்பவனும் மேதாவியுமான விபீடணனை இலங்கை அரியணையில் ஏற்றியருளுகின்றான் இராமபிரான்.

## யாரோடு பேசுவது

பேசத்தகுந்த மனிதர் கிடைத்து அவரோடு பேசுவதற்கு நீங்கள் தவறி விடுவீர்களேயானால் தகுதியான ஒரு மனிதரை இழந்துவிட்டீர்கள் என்று அர்த்தம்.

பேசத் தகுதி இல்லாத ஒரு மனிதர் கிடைத்து அவரோடு நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் உங்களை நீங்கள் இழந்துவிட்டீர்கள் என்று அர்த்தம்.

**ஒரு நல்ல காரியத்தில் எப்போதும் உற்சாகத்துடன் ஈடுபட்டிருப்பது நல்லது.**

உ

# ஒரு மனிதனை அழிவு வழிக்கு கொண்டு செல்பவை

திரு S.S. ரஜீந்திரன் அவர்கள்.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, புகழ்ஆசை இவற்றில் பெண்ணாசை என்பது மிகவும் கொடியது. இதை பட்டினத்தார் பல பாடல்களில் மிகச்சிறப்பாக சொல்லியிருக்கிறார். எல்லா உயிர்களிடத்தும் அன்பு வைக்கலாம். ஆனால் ஆசை கொள்ளக்கூடாது.

சூர்ப்பனகை இராமனிடம் ஆசை கொண்டதால் அழிந்தாள். ஆண்டாள் கிருஸ்ணரிடம் அன்பு கொண்டதால் உயர்வு பெற்றாள். இராவணன் சீதாபிராட்டியிடம் ஆசை கொண்டதால் இலங்கை எரிந்தது. அனுமன் சீதாபிராட்டியிடம் அன்பு கொண்டதால் எரியூட்டிய அனுமன் வாலின் வெம்மை தணிந்தது.

இவ்வாறே பொதுமகளிர் மீதான காமத்தை அறுக்குமாறு கதிர்காமக் கந்தனை வேண்டுகிறார் அருணகிரிநாதர்.

பாடல்

சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசைய வீதிக்குள் மயில்போலுலாவியே
சரியைக்கிரியை யோகத்தின் வழிவருக்கு பாசுத்தர்
தமையுணர ராகத்தின் வசமாக மேவியே
உமதடியு னாருக்கு மனுமரண மாயைக்கு
முரியவர் மகாதத்தை யெனுமாய மாதரார்
ஒளிரமளி பீடத்தி லமடுபடு வேனுக்கு
முனதருள்க்கு பாசித்த மருள்கூர வேணுமே
இமகிரிகு மாரத்தி யனுபவைப ராசத்தி
யெழுதரிய காயத்ரி யுமையாள்கு மாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோகித்து
இதணருகு சேவிக்கு முருகாவி சாகனே
அமரசிறை மீள்விக்க அமர் செய்துப்ர தாபிக்கு
மதிகவித சாமர்த்ய கவிராஜ ராஜனே
அழுதுலகை வாழ்வித்த கவுணியகு லாதித்த
அரியகதிர் காமத்தி லுரியாயி ராமனே.

பொருளுரை

சமரமுக வேல் ஒத்த விழி புரள வார் இட்ட
தனம் அசைய வீதிக்குள் மயில் போல் உலாவியே

போர் செய்வதற்கு ஏற்ற (மிகக்கூரிய) வேல்களைப் போன்ற விழிகளைச் சிமிட்டியும் உடை அணிந்த தனங்கள் அசையவும் தெருவில் மயில் போல் மெல்ல நடந்து

**சரியைகிரியை யோகத்தின் வழிவரு கிருபா சுத்தர்**
**தமை உணர் அராகத்தின் வசம் ஆக மேவியே**

சரியை, கிரியை, யோகம் என்ற நெறிகளில் நிற்கும் அருளும் தூய்மையும் உடைய பெரியவர்களும் தம்மை மோசிக்குமாறு ஆசைகாட்டி

**உமது அடி உணாருக்கும் அனு மரண மாயைக்கு**
**உரியவர் மகாதத்தை எனும் மாய மாதரார்**

நின் திருவடியை நினையாதவர்களுக்கு மரணம் எனும் மாயைக்குள் வீழ்ந்தவர்களுக்கும் சிறந்த கிளிகள் போன்ற மாயத்தில் வல்ல பொதுமாதர்களுடைய

**ஒளிர் அமளி பீடத்தில் அமடு படுவேனுக்கு**
**உனது அருள் கிருபா சித்தம் அருள்கூர வேணுமே**

மிளிர்கின்ற படுக்கையில் சிக்கிக்கொண்ட எனக்கு உனது திருவருள் உள்ளத்தை தந்தருள வேண்டும்.

**இமகிரி குமாரத்தி அனுபவை பராசக்தி**
**எழுத அரிய காயத்ரி உமையாள் குமாரனே**

இமயமலையின் மகளும் சுகபோகங்களை உயிர்களுக்கு வழங்கும் பராசக்தியின் எழுதுவதற்கு அரிய காயத்ரி மந்திர சொரூபியாகிய உமைபவானின் பாலகனே

**எயினார் மடமானுக்கு மடல் எழுதி மோகித்து**
**இதன் அருகு சேவித்து முருகா விசாகனே**

வேடர்குல பாவையாகிய வள்ளிபிராட்டியின் பொருட்டு மடற்பனையின் அவளுருவை வரைந்து பரண் அருகில் சேவித்து நின்ற முருகப்பெருமானே! விசாக மூர்த்தியே!

**அமரர்சிறை மீள்விக்க அமர் செய்து பிரதாபிக்கும்**
**அதி கவித சாமர்த்ய கவிராஜ ராஜனே**

தேவர்களை சிறையில் இருந்து மீட்கும் பொருட்டு போர் புரிந்து வெற்றிபெற்ற மிகவும் திறமைபூண்ட கவிச்சக்கரவர்த்தியே

**அழுது உலகை வாழ்வித்த கவுணிய குல ஆதித்த**
**அரிய கதிர் காமத்தில் உரிய அபிராமனே**

(முருக சாருபம் பெற்று மூன்று வயதில்) அழுது உலகை வாழ்வுபெறச் செய்த கவுணியர் குலத்தின் சூரியனே (திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்) அரிய கதிர்காம மலைக்கு உரிய அழகரே.

(தொடரும்...

**சரியாகப் பார்க்க முடியாதவன் நிதானமாகப் போகட்டும்.**

உ

# சித்தர்கள்

திருமதி சிவயோகவதனி லோகேஸ்வரன் அவர்கள்.

*சி*த்தர் என்னும் சொல் சித் என்னும் வடமொழி வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது. நிறைமொழி மாந்தர், அறிவர் என்னும் சொற்களால் மிகப் பழைய காலத்தில் சித்தர்கள் குறிக்கப் பெற்றனர்.

சித்தி என்னும் சொல் தொடக்ககாலக் கைகூடுதல் என்னும் பொருளில் தோன்றியிருத்தல் வேண்டும். காலப்போக்கில் அது சித்துக்களைக் குறிப்பதாக வளர்ச்சி பெற்றது. யோக சாதனைகளில் தெளிதல்,மந்திரங்களைச் செபித்தல், மௌனத்தில் இருத்தல், இறை வழிபாடு முதலானவற்றால் சித்திகளைப் பெறலாம் என்பர் சித்தர்கள். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனச் சித்திகள் எண்வகைப்படும். இதனை அட்டமா சித்தி என்றும் வழங்குவர். இவ் எண்வகைச் சித்திகளையும் பெற்றவர்கள் சித்தர்கள். யோகச் செயல்முறை களினால் உடலினை நிலைக்கச்செய்து மெய்ம்மையுணர்ந்து சமுதாய மக்களை நன்நெறியிற் செலுத்த விரும்பிய சித்தர்கள் தம் குருவின் ஆணைப்படி இவ்வுலகில் வெளிப்படுவர். தமக்கென எந்தப்பற்றும் இல்லாத பேராண்மையாளர். உண்ணாமல், உறங்காமல், இடம்பெயராமல் வெயில், மழை, பகல், இரவு என்றும் பாராமல் இருப்பதே சித்தர்களின் சமாதிநிலை. அத்தகைய சமாதியிலிருந்து பின் வெளிவரும்போது தாம் பெற்ற ஞானத்தை மக்களுக்கு எடுத்துரைப்பர். அதன் பயனைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. தம்மிடம் வியத்தகு ஆற்றல்கள் இருந்தமையைத் தம் வியத்தகு செயல்களாற் காட்டினர்.

பதினெண் சித்தர் என்ற தொகைத்தொடர் பரவலாகக் காணப்படினும் பதினெண் சித்தர்கள் யார் யார் என்பது பற்றிக் கருத்துவேறுபாடுகள் உள்ளன. பதினெண் சித்தர்கள் யாவர் என்பது இன்னும் உறுதிசெய்யப்படாமலே உள்ளது. சித்தர்களின் பெயரில் அமைந்துள்ள நூல்களில் யாப்பும் சொல்லும் நுவல் பொருளும் அவர்கள் பிற்காலத்தவர்கள் என்பதற்குச் சான்று தருகின்றன. சித்தர் என்னும் மரபு திருமூலர் முதல் தொடங்கியிருக்கலாம்.

இவர்களுடைய இலக்கியங்கள் எளிய பாவகைகளால் ஆனவை. கும்மி, சிந்து முதலான பாவகைகளைக் கொண்ட மக்கள் இலக்கியமாகக் காணப்படுகின்றன. எளிமையான நடை அமைப்புக்களைக் கொண்டவை. உதாரணமாக கேள்வி நடை, மொழிநடை, பேச்சுநடை என்பனவாகும். மறைபொருள் சித்தர் இலக்கியத்திற்குச் சிறப்பைத் தந்தன. ஒரு சொல்லே மேற்போக்காகப் படிக்கும் பொருளையும் ஆழ்ந்து அதன் உள்ளீட்டுப் பொருளை அறிந்துகொள்ளும்போது வேறு பொருளையும் தரும் வகையில் அமைந்துள்ள தன்மையே இங்கே மறைபொருட்கூறு எனக்கொள்ளப்படுகிறது. சித்தர்களின் கடவுட் கொள்கைகள் எளிய மக்கள், யோகியர், ஞானியர் எனும் மூவர்க்குமுரிய வழிபாட்டு முறைகளை விளக்குகின்றன.

**மற்றவர்களின் வடுக்கள் நமக்குப் பாடமாக அமையவேண்டும்.**

சித்தர்கள், சக்தி சிவம் இரண்டும் இணைந்த வழிபாட்டைப் போற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல், தரையில் தலைபட வணங்குதல், ஐம்புலன்களையும் வழிபாட்டில் செலுத்துதல், பொய் கூறாது உண்மையுடன் ஒழுக்கநெறியில் நின்று இறைவனிடம் பக்தியும், அன்பும் கைக்கொள்ளுதல் இறைவனை வணங்குவதால் ஏற்படும் பயன்கள் முதலானவற்றை மக்களுக்கு ஏற்ற நெறியாகக் குறிப்பிடுவர்.

# அரிசியின் மகத்துவம்

ஒருநாள் பகவான் ரமணமகரிஷி அவர்கள் தனது ஆச்சிரமத்தில் அமர்ந்து நிலத்தில் ஆங்காங்கே சிதறிக்கிடந்த அரிசி மணிகளை ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்து ஒரு பாத்திரத்தினுள் போட்டுக்கொண்டிருந்தார். இதைக் கண்ணுற்ற ஆச்சிரமத்தில் உள்ள இவரது சீடர்களுக்கு இது பெரும் வியப்பையும் ஆச்சரியத்தையும் உண்டு பண்ணியது. ஆச்சிரமத்தின் ஒரு பக்கத்தில் போதியளவு அரிசி மூடைகள் அங்கே அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. இப்படியிருக்கும்போது பகவான் ரமணமகரிஷி அவர்கள் ஏன் இவ்வாறு செய்கின்றார்? என்ற ஐயம் அவர்களுக்கு ஏற்படலாயிற்று.

ஆச்சிரமத்திலிருந்த பகவான் ரமணமகரிஷியின் சீடர்களில் ஒருவன் ஆச்சிரமத்தில் போதியளவு அரிசி மூடைகள் இருக்கும்போது தாங்கள் ஏன் இவ்வாறு ஒவ்வொரு அரிசிமணியாகப் பொறுக்கிக் கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டான்? அதற்கு அவர் கூறிய பதில் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது.

அரிசி என்பது சும்மா வரவில்லை. பலபேருடைய உழைப்பு அதில் அடங்கியிருக்கின்றது. நிலத்தைப் பண்படுத்தி உழுது நெல்லை விதைத்து நெற்றி வியர்வை நிலத்திற்சிந்த பாடுபட்டுழைக்கும் விவசாயிகளின் பணி அதில் அடங்கியிருக்கின்றது. அதனோடு ஏர் பூட்டி எருத்து மாடுகளும் நிலத்தை உழுகின்றன. மழைநீர் ஆகாயத்திலிருந்து பொழிகிறது. நிலம் குளிர்கின்றது. கதிரவன் தன் ஒளியை அதன் மீது பாய்ச்சுகின்றான். நிலத்திலிருந்து நெற்கதிர்கள் தோன்றி அவை அரிசி மணியாகின்றன. இவை அகிலத்திலுள்ள மக்களின் பசியைப் போக்குகின்றன. இவ்வாறு பகவான் ரமணமகரிஷி கூறவே கூடியிருந்த அவர்களின் சீடர்களுக்கு அரிசியின் மகத்துவம் புரியலாயிற்று.

பகவான் ரமணமகரிஷி அவர்கள் எந்த ஒரு பொருளையும் வீணாக்கமாட்டாராம். ஆச்சிரமத்திற்கு அன்றாடம் வரும் தினசரிப் பத்திரிகைகளில் ஒன்றும் பிரசுரிக்காத வெற்றுப்பக்கத்தைக் கத்தரிக்கோலால் கத்தரித்துவைத்துக் கொள்வாராம். ஏன் எனில் அதில் விடயங்கள் ஏதும் எழுதலாம் என்ற நோக்கிலாகும்.

அதேபோன்று, அன்றாடம் ஆச்சிரமத்திற்கு வரும் சஞ்சிகைகள், பத்திரிகைகளின் மேலுறைகளையும் கிழித்து எறியமாட்டார்கள். ஏனெனில் ஆச்சிரமத்திலிருந்து ஏதாவது நூல்கள் அனுப்புவதாக இருந்தால், அதை உபயோகிப்பது அவருடைய வழக்கம்.

*திரு கு. நவரத்தினராஜா அவர்கள்.*

உ

# சமய வாழ்வில் பெண்

**செல்வி கார்த்திகா சரவணபவன் அவர்கள்.**

*பெ*ண்மைக்குப் பெரும் சிறப்புக்கொடுத்த சமயம் இந்து சமயம். பெண்மைக்குப் பெருமை சேர்க்க இறைவன் மாதொருபாகனாய் அருள்கிறார். பெண்ணை அம்பிகையாக, காளியாக, சரஸ்வதியாக, ஸ்ரீதேவியாகத் தகைமை பெற்றது இந்துசமயம். இதன் வழியே சாக்தம் என்னும் ஓர் நெறியும் உருவானது.

வரலாற்றுப் பார்வையில் சிந்துவெளிக்காலத்திலே காணப்பட்ட தடயங்கள்கூட பெண்மை சிறப்புற்றிருந்தமையைக் காட்டுகின்றது. தரையைப் பெண்ணாக வழிபட்டமையை ஒப்பிடும் சான்றுகளும் இதனுள் அடங்கும்.

வேதப்பாடல்களில் உஷஷ், ராத்திரி, அதிதி, பிருஷ்னி, ஆண்யாணி, ஊர்வரா போன்ற பெண் வழிப்பெயர்கள் காணப்படுகின்றன. வேத மந்திரங்களில் சிறப்புறுவது காயத்திரி. காயத்திரியைப் பெண்மை வடிவாகவே போற்றினர். வேதங்களில்

1. சத்யவதி - உண்மையின் சிறப்பு
2. அன்யவதி - உலகம் முழுவதும் பஞ்சபூதங்கள் நிறைந்தன. இவற்றின் மொத்த உரு இறைவன்
3. அங்கவதி - இறையின் வெளிப்பாடுகள்
4. நிதானவதி - இறையை அடையும் மார்க்கம்

இந்தப்பெயர்களில் உள்ள பெண்மை வேதங்களுடன் இணைத்துப் பேசப் படுகின்றது. (சனாதனசாரதி 1998 பக்கம் 18-19)

வாஜசனேயி சம்ஹிதையில் அம்பிகா என்றும் தைத்திரிய ஆரண்யகம், முண்டக உபநிடதம் என்பவற்றில் துர்க்கா, கன்யாகுமாரி காத்யாயனி என அம்பாள் அழைக்கப்படுகிறாள். கேன உபநிடதம் சக்தியை முழுமுதலாகப் போற்றும், தேவி மகாத்மியமும் பெண்மையே அனைத்தும் என்று புகழும் சாக்த ஆகமங்கள் அம்பிகை வழிபாட்டைப் பலபட சிறப்பிக்கும்.

இதிகாச புராணங்களிலும் பெண்மை மேலும் சிறப்புப்பெறுகின்றது. மகாபாரதம் துர்க்கையைப் போற்றும் பல துதிகளைக் கூறும். சாக்த புராணங்கள் சக்தியின் பருவங்களைச் சிறப்பிக்கும்.

இவ்விதமே சங்ககாலக் கொற்றவை வழிபாடு சிறப்பிடம்பெறும். சப்தமாதர் வழிபாடும் பெண்மை சமயத்தில் பெற்ற சிறப்பை கூறுவதே தெய்வநிலையில் பெண் சிறப்புற்றது போலவே வாழ்வு முறையிலும் பெண் சமயத்துடன் இறுக்கமாகத் தொடர்பு பட்டாள்.

சங்ககாலம் பெண்மை பெற்ற சிறப்பை உணரச்செய்வது வேத சுலோகங்களை ஆக்கிய ரிஷிகளில் பலர் பெண்கள் தவிர அக்கால வேள்விச் சடங்குகளைக் கணவனுடன் மனைவியும் சேர்ந்து ஆற்றியமையை வேதங்கள் அறியத்தருகின்றன. சாமவேதப்பாடல்களை இசையோடு பாடும் பொறுப்பையும் பெண்களே ஏற்றனர்.

**அழகற்ற அகத்தைவிட அழகற்ற முகம் மேல்.**

உபநிடதங்களில் மைத்ரேயி யாக்ஞவல்கியருடன் வாதித்த ஆன்ம விடயங்களை அறியமுடிகின்றது. தா்மசாஸ்திரமும் மனைவி அருகில்லாது கணவன் எதுவித யக்ஞமும் செய்ய ஏற்றவன் அல்லன் எனக்கூறும். சேக்கிழாரது பெரியபுராணம் சில இலட்சியப் பெண்களை நிலைநிறுத்தும். மங்கையா்க்கரசியார், இளையான்குடிமாற நாயனார் மனைவியார், பரவையார், சங்கிலியார் ஆதியோர் ஆன்மவாதிகளே.

ஸ்திரி என்பது

ஸ - ஸாத்வீக குணம்
ஸாலோக்யம்
ஸாருப்யம்
ஸாமீப்யம்
ஸாயுஜ்யம்

இந்தத் தத்துவங்களைக் குறிப்பது. தகரம் - விநயம், அடக்கம், கௌரம் இவற்றையும், ரகரம் - தியாகத்தையும் குறிக்கும். (ச.சா 1998) கோயில்களில் கிரியைகள் ஆற்றும் ஆசாரியா்கள் தங்கள் தா்மபத்தினி இல்லாமல் எக்காரியமும் செய்யத் தகுதியற்றவா் ஆகின்றனா்.

பெண்கள் பக்திக்கு உருவம் போன்றவா்கள். தகுந்தவாறு இல்லக்கிரியைகளைச் செய்விக்கும் பெண் கிருஹலஷ்மி, தா்மபத்தினி எனப்படுகிறாள். இறைவனைக் குழந்தையாக்கியவளும் பெண்ணே. தினமும் அதிகாலையில் கண்விழித்ததும் கையைப் பார்த்து வழிபடும் வழக்கம் எம்முன்னோரிடம் நிலைத்த ஒன்று. கையின் நுனியில் லஷ்மியும் கையின் மத்தியில் சரஸ்வதியும் கையின் அடிப்பாகத்தில் கௌரியும் இருப்பதை "கராக்தே வஸதே லஷ்மி" என்ற சுலோகம் கூறிநிற்கும். இதுபோல அதிகாலையில் பதிவிரதாலட்சியம் அடைந்த பெண்களை நினைப்பது பாவங்களை அழிக்கும். (அன்னை சாரதா வாழ்க்கை வரலாறு) அகலிகை, திரௌபதை, சீதை, தாரை எனும் பெண்களுடன் சாவித்திரி அனுசூயையும் சேர்ப்பர். ஏழு ரிஷிகளுடன் சப்த மாதா்களையும் நினைவுகூா்கின்றமை பன்னெடுங்காலம் கடுந்தவமாற்றிய முனிவா்க்கீடாக மங்கையா் போற்றப்படுதலை காட்டி நிற்கிறது.

இவ்வாறாக பெண் தெய்வநிலையிலும் தொண்டு நிலையிலும் சமயத்துடன் இணைந்தவா்களாக மேம்பட்டமையை நோக்கலாம்.

---

**உலகம் உபதேசிக்கிறது!**

இருள் நிறைந்த உன் அறையைவிட்டு வெளியே வா! ஆத்ம சக்தியுடன் அனைவரையும் நீ நேசி. அழுக்கடைந்த ஆடை உடுத்தியிருக்கும் ஆலைத் தொழிலாளியிடம் கடவுளைக் காண்பாய்.

---

காந்த ஊசி எப்பொழுதும் வடக்குத் திசையையே காட்டுவதால், கப்பல்கள் கடலில் திசை தப்பிப்போவதில்லை; அதுபோலவே மனிதனுடைய மனம் இறைவனையே நாடியிருக்கும்வரை, அவன் வாழ்க்கைக் கடலில் திசை தப்பிப்போவதில்லை.

**கோபம் களை போன்றது, வெறுப்பு மரம் போன்றது.**

உ

# "தன்னைத் தானறிதல்"

**திரு கே. எஸ். சிவஞானராஜா அவர்கள்.**

உன்னையே நீயறிந்தால்
உலகமே புரிந்துவிடும்
தன்னையே தானறிந்தால்
தானே அவனாகிவிடும்.

*நீ*தான் அவன். அவன்தான் நீ. உனக்குள் அவன். அவனுக்குள் நீ. நானே-அவன். அவனே - நான். நீயும் அவனும் ஒன்றேதான். அவனாலே நீ தரப்பட்டாய். அவனால் தரப்பட்ட நீ, மீண்டும் அவனாகின்றாய். இங்கே 'அவன்' என்று சுட்டப்படுவது மேலான இறைவனே. அத்தகு இறைவனை (அவனை), எப்போது மறக்கிறாயோ அப்போதே நீ அவனில்லை என்றாகின்றாய். அப்போதுதான் நீ தனிமையாகிவிடுகின்றாய். தனிமையாகிவிட்ட உன்னை ஆணவம் மயக்குகின்றது. உன்னை இறைவனிடம் இருந்து வேறுபடுத்திக்கொள்கின்றாய். உன்னை நீ பெரிதாக்குகின்றாய். உனக்கு வசதிகளை ஏற்படுத்துகின்றாய். நடை, உடை பாவனைகளை மாற்றுகின்றாய். உன்னை நீ விளங்கப்படுத்துகின்றாய். உன்னை உனக்கு விளங்கவில்லை- ஆதலால் உனது பெயரை முன்பின்னாகக் கூட்டி வடிவமைக்கின்றாய். நன்றாக இருக்கிறது. வண்ணப்படங்களும் அற்புதம். பதவிகளும்! பரிதாபம் தேடிவருகின்றன. தொலைபேசியில் அடிக்கடி தன்னைத்தான் அங்கீகரித்து உயரப்போய் விடுகின்றாய். உன்னால் இறங்க முடியவில்லை. இறைவன் சிரிக்கின்றான். தனது நிலைக்கு கொண்டுவருவதற்குத் தனது மௌனத்தைக் காட்டுகின்றான். நீயோ- மௌனத்தை உதாசீனப்படுத்திக் கொள்கின்றாய். நீ கதைப்பதற்குச் சந்தர்ப்பங்களை உருவாக்குகின்றாய். பணத்தைப் பார்த்துப்பாராமல் செலவழிக்கின்றாய். கையேந்தும் நிலை உருவாகிறது. அடிமைகள் உருவாகின்றார்கள். முகாமைத்துவம் சிறக்கிறது. இறைவனைத் தனியாக வேறுபடுத்திக் கொள்கின்றாய். எல்லாம் அவன் செயல் என்பதற்குப் பதிலாக, "என் செயல், எனது செயல், என்னுடைய தனிப்பட்ட செயல், நானேதான்" என்ற உரிமை வந்துவிடுகிறது. நான் அவனல்லன் என்பதாகி, உங்களுக்குநான், நான் உங்களுக்கு என எழுத்தில் வடிக்கப்படுகிறது. ஆகவே நான் யார்? நீ- நீயில்லை. நீ உன்னைத் தேடு. தேடும்போதுதான் உனக்குள் இறைவன் ஒளிந்து, ஒளிர்ந்து இருப்பது உனக்குப் புரியும். புரியும்போது நீ அடக்கமாக இருப்பாய். அவசரப்படமாட்டாய். அர்த்தமுள்ள பிறவியாக இருப்பாய். அளவுக்குமீறி ஆசைப்படமாட்டாய். அடிமைப்படுத்த மாட்டாய். உனது கடமையை ஒழுங்காகச் செய்வாய். பலவற்றிற்கு ஆசைப்படமாட்டாய். பாவத்திற்கு அஞ்சுவாய். பரபரப்படையமாட்டாய். பவுத்திரமாகப் பேசுவாய். மற்றவர்களையும் அரவணைத்துச் செல்லுவாய். மற்றவர்களுள்ளும் இறைவன் இருக்கின்றான் என்பதைப் பரிபூரணமாக ஏற்று மதிப்பளிப்பாய். மூத்தவர்களுக்கு வழிவிடுவாய். இளையவர்களுக்கு வழிகாட்டுவாய். சமவயதினரையோ, ஏனையவர்

களையோ ஏளனம் செய்யாதிருப்பாய். அயலவருக்கு இடையூறு விளைவிக்காதிருப்பாய். உனக்குக் கீழே உன்னைச் சுமந்தவண்ணம் பலர் இருக்கிறார்கள்- என்பதனை உணர்வாய். உனது பிறவியை எண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்துவாய். இறைவனையே முதன்மைபெறச் செய்வாய். அவனன்றி ஓரணுவும் அசையாது. ஆதலால் உனக்குள் அவனே இருக்கின்றான் என்பதை உணர்வாய். அப்போது நீ யார்? நீ அதுவாகின்றாய். இதை எப்போதும் உணர்ந்து கொள்வாய். மறந்திடாதே!.

ஒருநாள் பட்டினத்துச் சுவாமிகள் ஊருக்கு வெளியில் பயிர் அறுவடையான ஒரு வயலில் வரப்பின்மீது தலை வைத்துச் சயனித்துக் கொண்டிருந்தார்.

சில பெண்கள் நீர் எடுக்க அவ்வழியே சென்றார்கள். அதில் ஒரு பெண் மற்றொரு பெண்மணியைப் பார்த்து கூறினாள், "துறிவியாயிருந்தால் இப்படித்தான் இருக்கவேண்டும். கோடீஸ்வரராகப் பஞ்சுமெத்தையில் படுத்திருந்த இவர், இன்று அறுத்த வயலில் படுத்திருக்கின்றாரே! கடுந்துறவி''

"இவர் சிறந்த துறவிதான். ஆனால் துறவுநிலை இன்னும் பூர்த்தியாகவில்லை. சிறிது குறைவு இருக்கிறது!'' என்று மற்றொரு பெண் கூறினாள். " என்ன குறைவு" முன்பு பஞ்சுத் தலையணைமீது தலை வைத்திருந்தார். இப்போது வரப்பின்மீது தலை வைத்திருக்கிறார். தலையணையைத் துறந்தாரேயன்றித் தலைக்கு உயரம் வேண்டும் என்று எண்ணத்தைத் துறக்கவில்லை.

இதனை அடிகளார் கேட்டார். அப்பெண்மணி கூறுவதும் உண்மை என்று எண்ணி, வரப்பின்மீது தலைவைக்காமல் சமவயலில் படுத்தார்.

நீர் எடுத்துக்கொண்டு திரும்பிவருகின்றபோது அப்பெண்கள் பார்த்தார்கள். "இப்பொழுது பார்த்தாயா?" என்றாள் ஒருத்தி. "துறவுநிலை பூர்த்தியாகிவிட்டது. ஆயினும் இன்னும் ஒரு அணுவளவு குறையுள்ளது" என்றாள் அப்பெண்.

"என்னகுறை" "நம்மைப்பற்றி மக்கள் என்ன பேசுகின்றார்கள் என்று காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கின்றார். ஊரார் பேச்சைக் கேட்கும்வரை துறவு பூரணமாகாது" என்றாள்.

பட்டினத்துச் சுவாமிகள் இதையும் கேட்டார். தலையில் ஒரு தட்டு தட்டிக் கொண்டார். கண்ணீர்ததும்பியது அப்போது.

"வித்தாரமும் கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலத் திரி"

என்று பாடினார்.

நன்றாக நடத்தினாலுங்கூட தீயவர்கள் தீமையையே செய்வர்.

உ

# முன்னோர் சொன்ன கதைகள்

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்.

நம் முன்னோர்கள் கூறிய கதைகள் நமக்கு நல்ல அறிவுரைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ எமது மனங்களில் பதியவைக்கின்றன. சில கதைகளின் பாத்திரங்கள் கூறும் கூற்றுக்களாகவே நல்ல பல விடயங்கள் கூறப்படுவதையும் நாம் காணலாம். அத்தகைய ஒரு கதையைப் பார்ப்போம்.

விஸ்வாமித்திர மகரிஷியின் மகன் அஷ்டகன் அஸ்வமேத யாகமொன்றைச் செய்து முடித்தபின், யாகத்திற்கு வந்திருந்த அரசர்களான பிரதர்தனன், வஸுமனஸ், சிபி ஆகியோருடன் இரதத்திலேறிச் சென்றான். அவர்களின் முன்னே நாரதமுனிவர் வந்தார். அவர்கள் இரதத்தை நிறுத்தி அவருக்கு மரியாதை செய்தனர். நாரதரும் தேரில் ஏறிக்கொண்டார்.

தேர் சென்றுகொண்டிருக்கும்போது ஒருவர் "நாங்கள் நால்வரும் சிறந்த அரசர்களென புகழ்பெற்றவர்கள். தாங்களோ மகாமுனிவர். இப்போது இத்தேரில் நால்வர் மட்டும் சுவர்க்கத்துக்குப் போகலாமென்றால் எவன் இரதத்திலிருந்து இறங்க வேண்டும்?" என நாரத முனிவரிடம் கேட்டார்.

"அஷ்டகன் இறங்கவேண்டும்" என முனிவர் பதிலிறுத்தார். அதற்கான காரணத்தை அவர் முனிவரிடம் கேட்டார்.

"நான் அவனுடைய அரண்மனையிலிருந்தபோது ஆயிரக்கணக்கான பசுக்களைக் காட்டி அவை தன்னால் தானம் செய்யப்பட்டவை என பெருமிதத்துடன் அஷ்டகன் கூறினான். தன்னைத்தானே புகழ்ந்து கொண்டதால் அவன் சுவர்க்கத்திற்குப் போகும் தகுதியை இழந்துவிட்டான்" என முனிவர் காரணத்தை எடுத்துரைத்தார்.

"அதன்பின் மூவர்தான் சுவர்க்கத்திற்குப் போகலாமென்றால் யார் இறங்க வேண்டும்?" என அடுத்த கேள்வி பிறந்தது.

"பிரதர்தனன்" என்று கூறினார் மகரிஷி. அதற்குரிய காரணத்தைக் கேட்டபோது அவர் முன்பு நடந்த ஒரு நிகழ்வை விவரித்தார். "நானும் பிரதர்தனனும் ஒருநாள் மூன்று குதிரைகள் பூட்டிய தேரில் சென்றுகொண்டிருந்தோம். வழியில் வந்த ஒரு பெரியவர் ஒரு குதிரையைத் தானமாகத் தரும்படி கேட்டார். பிரதர்தனனும் கொடுத்தான். இதேபோன்று பின்னர் ஒருவரும் அவரைத் தொடர்ந்து மற்றொருவரும் கேட்டு மற்ற இரு குதிரைகளையுங்கூட தானமாகக் கொடுக்க நேர்ந்தது. அதனால் என்னைத் தேரில் வைத்து பிரதர்தனனே இழுத்தான். அப்போது "இந்தப் பெரியவர்களுக்கு எதைத் தானமாகக் கேட்பது, எதைக் கேட்கக்கூடாது என்பதே தெரியவில்லையே' என நொந்து கொண்டான். தானஞ்செய்துவிட்டு அப்படி மனம் நொந்துகொண்டதனால் அவன் சுவர்க்கத்திற்குப் போகும் தகுதியற்றவனாகிவிட்டான்" என முனிவர் கூறினார்.

"இருவர்தான் சுவர்க்கத்திற்குச் செல்லலாமென்றால் இறங்கவேண்டியது யார்?" என அடுத்த வினா கேட்கப்பட்டதும் "வஸுமனஸ் இறங்க வேண்டும்" என்றார்

**பொறுமையுடன் காத்திருக்கத் தெரிந்தவர்களுக்கு எல்லாம் கைகூடும்.**

மகரிஷி. அதற்கான காரணத்தைச் சொல்லுமாறு கேட்டனர். "வஸுமனஸிடம் தேரொன்று இருந்தது. அதைத் தருமாறு ஒருவன் கேட்டான். "அது எல்லோருக்கும் பொதுவானது. அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை" என வஸுமனஸ் கூறிவிட்டான். சிறிதுகாலம் போனபின் கேட்டபோதும் 'அது தெய்வத்திற்கு அர்ப்பணம் செய்யப்பட்டது. அது பொதுவானது' என பதிலளித்தான். தானமாக அதைக்கொடுக்க விருப்பமில்லாது நயமாகப்பேசி தானம் கொடுப்பதை அவன் தவிர்த்தான் என்றே இதைக்கொள்ள வேண்டும். எனவே அவனும் சுவர்க்கம் செல்லும் தகுதியை இழந்தவனாகிவிட்டான்" என மகரிஷி விளக்கிக்கூறினார்.

"ஒருவர்தான் செல்லலாமென்றால் யார் இறங்க வேண்டும்?" என்று கேட்கப் பட்டபோது நாரதமுனிவர் நான்தான் இறங்க வேண்டுமெனக் கூறினார்.

"சிபி தன்னைச் சரணடைந்த புறாவைக் காப்பதற்காக அதைப் புசிக்கவந்த கழுகுக்கு தன்னையே தானமாகக் கொடுத்தபோது அதைப் புகழுக்காகவோ புண்ணியத்திற்காகவோ செய்யவில்லை. அது தனது கடமையெனக் கருதிச் செய்தான். அவனுக்கு நான் இணையாக மாட்டேன். ஆகவே நான்தான் இறங்கவேண்டும்" என்றார்.

இக்கதையில் தானம் கொடுப்பவர் எத்தகைய மனநிலையில் அதைச் செய்ய வேண்டுமென்பது விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. கொடை வள்ளல்கள் பலரின் கதைகள் உள்ளன. கர்னன் மிகச்சிறந்த வள்ளலாகப் போற்றப்படுபவன். அவன் தான் செய்த புண்ணியங்களின் பலனையே தானமாகக் கொடுத்தான். தானம் செய்வதால் புகழ் கிடைக்கவேண்டுமென நினைப்பவர்களுமிருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலோர் அதனால் தமக்குப் புண்ணியபலன் கிடைக்குமெனக் கருதியே தானம் செய்கிறார்கள். அந்தப் பலனையே தானம் செய்தவன் மிகச்சிறந்தவன் என்பதில் ஐயமில்லை.

நாமும் பிரதிபலன் கருதாது தானம் செய்யும் மனோபாவத்தை எமக்குள் வளர்க்க வேண்டும். அப்படிப்பட்ட மனநிலை ஏற்பட்டால் தானம் செய்தேன் என்ற கர்வமோ அதைப் பிரபல்யப்படுத்தும் எண்ணமோ கொடுத்த பொருளுக்காக வருத்தமோ ஏற்படாது. மேற்சொன்ன கதை புகட்டிய அறிவுரையை நாம் கடைப்பிடிக்கக்கூடியதாக இருக்கும்.

## கடவுளைத்தேடி....

வருகிற துன்பத்தை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள். எதையும் தாங்கிக் கொள்ளும் இயல்புதான் ஆன்மீக சாதனைக்கு அஸ்திவாரமாகும். சிறியதோ, பெரியதோ எல்லாப்பிரச்சினைகளுக்கும் தீர்வு ஒன்றுதான். அதுதான் எதையும் தாங்கிக்கொள்ளும் தன்மை.

பல வகையான ஆன்மீக அறிவுரைகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்வார்கள். அவை எல்லாவற்றிலும் சிறிதளவு உண்மை உண்டு. ஆனால் ஒருவனுடைய மனத்திற்கு எது பிடித்திருக்கிறதோ அதையே அவன் செயல் படுத்த வேண்டும்.

**குடும்பத்தின் புகழைப் பரப்புவோனே நன்மகன் ஆவான்.**

உ

(தொடர்ச்சி...

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து வல்லை உப்புறோட் ஊடாக கதிர்காம யாத்திரைக்காகச் சென்றுகொண்டிருந்த எமது வாகனம் திட்டமிட்டவாறு அன்று மாலை வவுனியாவைச் சென்றடைந்தது. அடுத்தநாள் அதிகாலையில் நாம் வவுனியா விலிருந்து கதிர்காமத்திற்கான எமது தொடர்ச்சியான பயணத்தை ஆரம்பித்தோம்.

மட்டுவிலைச்சேர்ந்த சாரதி கிருபா வாகனத்தை நிதானமாகவும் சீரான வேகத்திலும் செலுத்திக்கொண்டிருந்தார். எமது யாத்திரையில் 10 வயது தொடக்கம் 70 வயதுவரையுள்ள இருபாலரும் இடம்பெற்றிருந்தனர். அதுமட்டுமல்ல வைத்திய அதிகாரி, வங்கி உத்தியோகத்தர், வியாபார ஸ்தாபன உரிமையாளர், சமயச் சொற்பொழிவாளர், சமயத்துறவி, ஆலய பரிபாலனசபையின் உத்தியோகத்தர், பூசை நேரத்தில் தவறாது பறைமேளம் அடித்து ஆலயத்திற்கு தொண்டுசெய்யும் அன்பர், தனது நோயை குணப்படுத்துவதற்காக ஆலயமே தஞ்சமென தங்கியிருந்த 25 வயதுடைய இளைஞர் எனப் பலவகைப்பட்டவர்களும் இந்த யாத்திரையில் இடம் பெற்றனர். ஆனாலும் அவர்கள் அனைவரும் ஒன்றினைந்து ஒரே உணர்வுடன் அந்த புனிதமான யாத்திரையில் அங்கத்தினராக செயற்பட்டுக்கொண்டிருந்தனர்.

காடுகள், மலைகள், பாலங்கள், காட்டுயானைகள் எனப் பல புதிய காட்சிகளுடனும் வித்தியாசமான அனுபவங்களுடனும் எமது பயணம் இடம்பெற்றிருந் தமை பலருக்குப் புதிய அனுபவமாகவே அமைந்திருந்தது. பி.ப 5மணியளவில் கதிர்காமத்தை அண்மித்துவிட்டதை நாம் அனைவரும் உணர்ந்துகொண்டோம். இன்னும் ஒருசில மணித்தியாலங்களில் நாம் கதிர்காமக்கந்தனை வழிபடப்போகின்றோம் என்பதனை தெரிந்துகொண்டதனால்போலும் வாகனத்திலிருந்த அனைவரது முகங்களிலிருந்த பிரயாணக் களைப்புக்களும் நீங்கி அனைவரும் தமக்கிடையே கலகலப்புடனும் மகிழ்ச்சியுடனும் உரையாட ஆரம்பித்தனர்.

அன்றுபிற்பகல் 6மணிக்கு முன்பாகவே செல்லக்கதிர்காமத்தை சென்றடைந்த நாம் முதலில் மாணிக்க கங்கையில் நீராடி செல்லக்கதிர்காமத்திற்கு சென்று அங்கே எமது வழிபாட்டை ஆரம்பித்தோம். அந்த ஆலயம் மாணிக்ககங்கையில் இரு கிளைகளுக்கிடையில் மிகவும் அழகான சூழலில் அழகான அமைப்பில் பார்ப்பவர்களது உள்ளங்களை பரவசமாக்கும் சிறப்புப் பொருந்தியதாக அமைந்திருந்தது. சலசல என ஓடிக்கொண்டிருந்த நீரோடைகளுக்கிடையில் அமைந்திருந்த செல்லக்கதிர்காமத் தினது வழிபாட்டை முடித்துக்கொண்ட நாம் அந்த பசுமையான உணர்வுகளுடன் இரவு 8மணியளவில் கதிர்காமக்கந்தனது ஆலயத்தினைச் சென்றடைந்தோம். அங்கே இடம்பெற்றுக்கொண்டிருந்த கதிர்காமக்கந்தனது பிரமாண்டமான வீதிஉலா காட்சிகள் எங்களது உள்ளங்களை பரவசமாக்குகின்ற ஒரு அற்புதமான காட்சியாக இடம்பெற்றுக் கொண்டிருந்தன. ஆம்! அடியார்களது உள்ளங்களில் ஆன்மீக வெள்ளத்தை

அலைபாயச் செய்கின்ற அந்த கதிர்காமக்கந்தன் அங்கே வீதிஉலாவில் யானைமீது பவனி வந்துகொண்டிருந்தான்.

கதிர்காமக்கந்தனது வீதியுலாவும் அவ்வீதியுலாவின் பொழுது இடம்பெற்ற கலைநிகழ்வுகளும் ஒரு ஆனந்தமான அனுபவமாகவே அனைவருக்கும் அமைந்திருந்தன. அந்த வீதியுலாவில் அலங்கரிக்கப்பட்ட யானைகளின் நளினமும் அவைகளின் அசைவுகளும் பிரமிக்கத்தக்கவையாக அமைந்திருந்தன. கதிர்காமக்கந்தனை தாங்கிவந்த அந்த யானையில் தெய்வீகத்தன்மை அப்படியே வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அதுமட்டுமல்ல கதிர்காமக்கந்தனைத் தாங்கிவந்த அந்த யானையின் கால் அசைவும் அதனுடைய ஆசீர்வாதமும் அனைவருக்கும் தெய்வீக உணர்வை ஏற்படுத்துவதாகவே அமைந்திருந்தது. கதிர்காமக்கந்தனை தன் முதுகின்மீது தாங்கிவருகின்ற இந்தப் பாக்கியத்தைப் பெறுவதற்கு இந்த யானை முற்பிறப்பில் என்ன புண்ணியம் செய்ததோ என்று பலரும் தமக்கிடையே உரையாடியதையும் அங்கு காணமுடிந்தது.

இத்தகைய கதிர்காமக்கந்தனது வீதிஉலாவின்பொழுது இடம்பெற்ற பாடசாலை மாணவர்களது கலைநிகழ்வுகள் இலங்கையில் வேறு எங்குமே காணமுடியாத வகையில் அங்கு மிகவும் சிறப்பாக இடம்பெற்றுக்கொண்டிருந்தன. மயிலாட்டம், கரகாட்டம், கோலாட்டம், கும்மி மற்றும் பல்வேறு வகையான நடனநிகழ்வுகள் தீபந்தவிளையாட்டு என அனைத்துமே பார்ப்பதற்கு ஒரு ஆனந்தமான அனுபவமாக அமைந்திருந்தன.

அந்த வீதிஉலாவில் வேல், ஆலவட்டம், குடை, சேவல், மயில், சங்கு, சக்கரம் போன்ற புனித பொருட்களும் அதேநேரம் சூரசங்காரத்துடன் தொடர்புபட்ட வேலாயுதம், சூலாயுதம், தண்டாயுதம், கதாயுதம் போன்ற பெருந்தொகையான படைக்கல உபகரணங்களையும் ஏந்தியவாறு ஒரு பெரிய அணியினர் வீதிஉலாவில் எம்பெருமானுக்கு முன்பாக இடம்பெற்றுக்கொண்டிருந்தனர். இவ்வாறான ஒருகாட்சி கதிர்காமத்தில் மட்டுமே இடம்பெறுகின்ற ஒரு தனித்துவமான காட்சியாக அமைந்திருந்தது. இவ்வாறு மிகப்பிரமாண்டமான பிரமிக்கத்தக்க கதிர்காமக்கந்தனது அந்த வீதிஉலா நிகழ்வினை பக்திநிலைப்பட்ட அந்தக் காட்சியினை இனவேறுபாடோ மதவேறுபாடோ இன்றி அனைத்து மக்களும் ஒற்றுமையாக ஒரே உணர்வுடன் தூய்மையான சிந்தனையுடன் ஒன்றாக கூடியிருந்து அனுபவித்துக்கொண்டிருந்த அந்தக்காட்சி இலங்கையில் வேற்றுமையிலும் எவ்வாறு ஒற்றுமையைக் காணலாம் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாக விளங்கிக்கொண்டிருந்தது.

ஒரு சமயவழிபாடு அல்லது சமயநிகழ்வு இனங்களுக்கிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் எவ்வாறு ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது என்பதை இப்பொழுதும் யாராவது காணவிரும்பினால் அதனைக் கதிர்காமத்தில் கண்டுகொள்ளமுடியும் என்பதற்கு கதிர்காமக்கந்தனது இந்த உற்சவகால நிகழ்வுகள் நல்ல உதாரணமாக விளங்கிக்கொண்டிருப்பதையும் நாம் இவ்விடத்தில் வெளிப்படுத்துவது பொருத்தமானது. முக்கியமாக பௌத்த மக்களும் இந்துமக்களும் ஒரே இடத்தில் இவ்வளவு பெருந் தொகையாக ஒற்றுமையுடன்கூடிநின்று ஒரே உணர்வுடன் ஒரே கடவுளை வழிபடுகின்ற காட்சி மனதிற்கு மகிழ்ச்சியை அளித்த அதேநேரம் மனிதர்கள் எல்லோரும் ஆண்டவனின்

குழந்தைகளே என்ற உண்மையை அங்கே அனைவருக்கும் உணர்த்துவதாகவும் அமைந்திருந்தது.

இப்படிப்பட்ட ஒரு ஆலயச்சூழலில் ஒருசில நாட்களைச் செலவு செய்தாலும் அது ஒருவரது ஆன்மீக வாழ்க்கையில் எவ்வளவு பெறுமதிமிக்க அனுபவமாக அவருக்கு அது அமைந்துவிடுகிறது என்பதை கதிர்காமக்கந்தனது உற்சவத்தில் பங்குபற்றுபவர்கள் நன்கு உணர்ந்துகொள்ளமுடியும். இவ்வாறு பரந்தபட்ட பக்தி உணர்வுடன் அன்றைய இரவு உற்சவத்தை முடித்துக்கொண்டு ஆலயச்சூழலில் அமைந்துள்ள எமது தங்குமிடத்திற்கு நாம் அனைவரும் சென்றடைந்தோம்.

யாத்திரையில் பங்குபற்றிய அனைவரும் அடுத்தநாள் கதிர்காமக்கந்தனது ஆலயத்தில் இடம்பெற்ற காலைப்பூசையில் பங்குகொண்டோம். அங்கே சுதந்திரமாகவும் தனித்துவமாகவும் ஆலயவழிபாட்டை அனைவரும் மேற்கொண்டனர். அவ்வாறு உள்ளம் உருகி வழிபாடு செலுத்திக்கொண்டிருக்கும் பொழுதுதான் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் உள்ளதுபோல் கதிர்காமக்கந்தனிடமும் ஆன்மீகரீதியாக ஒரு காந்தசக்தி உள்ளது என்பதை அனுபவபூர்வமாக எம்மால் அங்கே உணரமுடிந்தது.

(தொடரும்...

ஓம்

குருவே துணை

**ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமி அவர்களின் இருபத்திரண்டாவது ஆண்டு குருபூசை நிகழ்வு 22.07.2007 ஞாயிற்றுக் கிழமை வழமைபோல் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.**

**அன்று காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற விஷேட அபிஷேக ஆராதனைகளின்பின் சுவாமியவர்களின் குருபூசை நிகழ்வு ஆரம்பமாகியது. குருபூசை நிகழ்வில் அடியார்களின் பஜனை நிகழ்வு இடம்பெற்றது.**

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்**

**காசுக்கட்டளை**
**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்,**
**தொண்டைமானாறு.**
T.P.NO. 021-2263406

**காசோலை**
**செ. மோகனதாஸ்**
**க. இல. P.7481**
**இலங்கை வங்கி,**
**பருத்தித்துறை..**

கொழும்பு தமிழ்ச் சங்க
நூலகம்

**www. sannithiyan. org**

**இன்று நாம் செய்யும் நன்மையே நாளைய இன்பம்.**

உ

# ஆவணிமாத வாராந்த நிகழ்வுகள்

03-08-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம்:- பெறல் அரும் பரிசில்

வழங்குபவர்:- சிவ சண்முகவடிவேல்

---

10-08-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம்:- ஸ்ரீ முருகமந்திரம் நூல் வெளியீட்டு விழா

---

17-08-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- "பேசவும் வேண்டும்"

வழங்குபவர்:- செஞ்சொற்செல்வன் இரா. செல்வவடிவேல்

(ஆசிரியர்)

---

24-08-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு:- பெரியபுராணம் (தொடர்)

வழங்குபவர்:- அ. குமாரவேல் (சிரேஷ்ட விரிவுரையாளர்)

(யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

31-08-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் மாத வெளியீடு

## ஆவணி - 2007

வெளியீட்டுரை:- புனிதவதி சண்முகலிங்கம்

(ஆசிரியர்)

மதிப்பீட்டுரை:- கௌரி சுரேசன்

(கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்)

பதிவு இல. Q.D/44/NEWS/2007

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2007

**ஜனவரி**

01.01.2007 மார்கழி 17 திங்கள்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
02.01.2007 மார்கழி 19 புதன்
திருவாதிரை விஷேட உற்சவம்
15.01.2007 தை 1 திங்கள்
தைப்பொங்கல்
27.01.2007 தை 13 சனி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**பெப்ரவரி**

01.02.2007 தை 18 வியாழன்
தைப்பூசம் விசேட உற்சவம்
16.02.2007 மாசி 4 வெள்ளி
மகாசிவராத்திரி விசேட உற்சவம்
23.02.2007 மாசி 11 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**மார்ச்**

05.03.2007 மாசி 19 சனி
மாசிமகம்
21.03.2007 பங்குனி 7 புதன்
ஆலய கும்பாபிஷேகதினம்
சகஸ்ரமகா சங்காபிஷேகம்
சண்முக அர்ச்சனை, விசேட உற்சவம்
23.03.2007 பங்குனி 9 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**ஏப்ரல்**

01.04.2007 பங்குனி 18 ஞாயிறு
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமான் கும்பாபிஷேகதினம்
14.04.2007 சித்திரை 1 சனி
மங்கள இந்துப் புதுவருடப் பிறப்பு
(சர்வசித்து) மாலை விசேட உற்சவம்
19.04.2007 சித்திரை 8 வியாழன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**மே**

02.05.2007 சித்திரை 19 புதன்
சித்திரா பூரணை விரதம்
12.05.2007 சித்திரை 29 சனி
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
காலை 10 மணி சங்காபிஷேகம்
காலை 11 மணி சண்முகார்ச்சனை
மதியம் 12 மணி விசேட உற்சவம்
15.05.2007 வைகாசி 2 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
30.05.2007 வைகாசி 18 புதன்
வைகாசி விசாகம் விசேட உற்சவம்

**ஜூன்**

13.06.2007 வைகாசி 30 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.06.2007 ஆனி 5 வெள்ளி
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
25.06.2007 ஆனி 11 திங்கள்
தீர்த்தமெடுப்பு

**ஜூலை**

02.07.2007 ஆனி 18 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
10.07.2007 ஆனி 26 செவ்வாய்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
15.07.2007 ஆனி 31 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூசை

**ஆகஸ்ட்**

06.08.2007 ஆடி 21 திங்கள்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
12.08.2007 ஆடி 27 ஞாயிறு
ஆடிஅமாவாசை விரதம்
13.08.2007 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
கொடியேற்றம் அதிகாலை 5.30
16.08.2007 ஆடி 31 வியாழன்
காலைத்திருவிழா ஆரம்பம்
21.08.2007 ஆவணி 4 செவ்வாய்
பூங்காவனம்
22.08.2007 ஆவணி 5 புதன்
கைலாய வாகனம்
26.08.2007 ஆவணி 9 ஞாயிறு
சப்பறம்
27.08.2007 ஆவணி 10 திங்கள்
காலை தேர்
28.08.2007 ஆவணி 11 செவ்வாய்
காலை தீர்த்தம்
மாலை மௌனத் திருவிழா

**செப்ரெம்பர்**

03.09.2007 ஆவணி 17 திங்கள்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
30.09.2007 புரட்டாதி 13 ஞாயிறு
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**அக்டோபர்**

11.10.2007 புரட்டாதி 24 வியாழன்
நவராத்திரி விரதாரம்பம்
20.10.2007 ஐப்பசி 3 சனி
சரஸ்வதி பூஜை
21.10.2007 ஐப்பசி 4 ஞாயிறு
விஜயதசமி
கேதாரகௌரி விரதாரம்பம்
27.10.2007 ஐப்பசி 10 சனி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**நவம்பர்**

06.11.2007 ஐப்பசி 22 வியாழன்
தீபாவளி
09.11.2007 ஐப்பசி 23 வெள்ளி
கேதாரகௌரி விரதம்
10.11.2007 ஐப்பசி 24 சனி
கந்தசஷ்டி விரதாரம்பம்
15.11.2007 ஐப்பசி 29 வியாழன்
கந்தசஷ்டி சூரன்போர்
16.11.2007 ஐப்பசி 30 வெள்ளி பாரணை
தெய்வானை அம்மன் திருக்கல்யாணம்
24.11.2007 கார்த்திகை 8 சனி
திருக்கார்த்திகை விரதம்
விசேட உற்சவம் குமராலய தீபம்
25.11.2007 கார்த்திகை 9 ஞாயிறு
விநாயக விரதாரம்பம்
விஷ்ணு ஆலய தீபம்

**டிசம்பர்**

15.12.2007 கார்த்திகை 29 சனி
விநாயகர் சஷ்டி விரதம்
திருவெம்பாவை பூஜாரம்பம்
16.12.2007 கார்த்திகை 30 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை
21.12.2007 மார்கழி 5 வெள்ளி
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
24.12.2007 மார்கழி 8 திங்கள்
திருவாதிரை விசேட உற்சவம்

சுபமங்களம்
நன்றி